"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

பூலோகவியாஸன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை, 1906ஆம் ஜூன்மீ 20உ [பகுதி 9.

நமது பத்திரிகை.

நமது பத்திரிகை, ஆதியில் டிம்மி இரண்டுபாரமான சஞ்சிகையாய் வெளிவந்ததும் இரண்டாவது வருடத்தில் டிம்மி 3 பாரங்கள் கொண்ட புத்தகமாக வெளிவந்ததும், மூன்றாவது வருடமாகிய இவ்வருடம், ராயல் சைசில் 3 பாரமாகவும் கடந்தமாதம் நாலுபாரமாகவும் வெளிவந்துலாவுவதை அன்பர்கள் யாவருமறிவர். இவ்வாறு நாளுக்குநாள் வளர்ந்து வந்தபோதிலும், நாம் சந்தாவை எள்ளளவேனு முயர்த்தவில்லை. ஏனெனில், நமதுவியாஸனை ஆதரணைச் செய்யும் அன்பர்களின் பேருதவிகொண்டும், கையொப்ப நேயர்களின் அனுசரிப்புகொண்டும் சந்தாவை ஒருபையாவது உயர்த்தினேமில்லை. இதனால் நாம் பெரும்பாலும் பொருளுதவியை யொருபோதும் விரும்பாது தமிழ்விருத்தியையும் பொதுஜனோபகாரத்தையும் கருதுகின்றோ மென்பது யாவர்க்குத்தான் புலப்படாது? இவ்வாறிருப்பது கொண்டே பெரும்பாலராகிய கையொப்ப நேயர்கள் தத்தம் சந்தாவை அனுப்பி உதவி புரிந்துள்ளார். சிலரோவெனில், பத்திரிகை யனுப்பினால் அதை மாத்திரம் பெற்றுக்கொண்டு, நாம் பணம் அனுப்பாதிருக்கின்றோமே, எப்படி பத்திரிகை நடக்கும்? அச்சாபீசுகாரருக்கும், கடிதக்காரருக்கும் பத்திராதிபர் எவ்வாறு பணம் கொடுப்பார், ஸ்டாம்பு செலவுக்கு என்ன செய்வார் என்று கிஞ்சிற்றேனுமுணராமல் பத்திரிகை வாயிலாக என்ன எழுதினாலும் படிதது அவ்வார்த்தைகள் தங்களுக்கல்லவென்றும், இன்னுங்கொடாதமற்றவர்களுக்கென்றே பாக்கிதாரர் ஒவ்வொருவரும் நினைத்துக்கொண்டு மௌனஞ் சாதிக்கின்றார்கள். இவ்வாறு செய்வதினாலல்லவா தமிழ்ப்பத்திரிகைகள் தோன்றிய சிலகாலத்து மறைந்து விடுவது? சந்தாதாரர்கள் செலுத்தி வந்தால் இன்னும் பத்திரிகை விசேடமாக நடக்குமென்பது கவனிப்பார்களாக. போந்தவருமான மில்லாமையால் பத்திரிகை நாள் தவறிவருகின்றது என அன்பர்கள் கொள்ளுவார்கள். ஆகையால் நமது பாக்கிதாரர்களாகிய அன்பர்கள் தத்தம் பாக்கி தொகையை இப்பத்திரிகை கண்டதும் அனுப்பிவிட பிரார்த்திக்கின்றேம்.

பத்திராதிபர்.

சித்தாந்தப்பிரகாசம்.

(151-வது பக்கத்தொடர்ச்சி.)

இனி சுழுத்தியிலே சொப்பனவாதனை நிகழ்ந்து சொல்லபாட்டாமனிற்றல் பற்றி நிச்சயித்தெழுங் கருவிகளாண்டின்மையின், அறிவு ஒழுகக்காய்ந்த விரும்பு இறுகிச் சிறிது சிவப்புநின்றாற்போலவுஞ், செறிந்தவிருளிலே மின்பிரகாசித்தழிக் கண்ணுக் கொருபொருளை நிச்சயிக்க வொண்ணாதிருந்தாற்போலவுமாம். இனி துரியத்திலே பிராணவாயுவின் சேட்டையேயன்றி வேறொரு நினைவுமற்றிருப்பன். அவ்விரும்பும் மிக்க பிரகாசமும் வெப்பமுமாறிச் சிறிது வெம்மையுடனிற்பதுபோலவும், மின்மறைந்தவிடத்து மிக்க விருளிற்கூடி நின்ற கண்போலவுமாம். இனி அதீதத்திலே அறிவு வெம்மையற்ற விரும்புபோலவும் பிறவிக்குருடன் அந்தகாரத்திலே விழித்திருக்கும் தன்மைபோலவு மிருக்கும்.

இந்தவைந்து கூறுபாடான கீழாலவத்தையிற் பொருந்தப்பட்ட தத்துவமுப்பத்தைந்தும் உணர்த்து முறைமைக்குத் தானமான இலாடத் தானத்திலும், பொருந்திப் பஞ்சாவத்தை கூடும்படிகண்டு பிரபஞ்சத்திலே பொய்யின் கூறுபாடான பிறவிகளைப் போக்குதற்கு முதல்வனருளாலே மேலாமவத்தையைப் புரியுமிடத்தில் அவ்விடத்திலும் பஞ்சாவத்தை அவ்வருளாற் செலுத்தப்படும். இந்த அவத்தையை ஆசிரியனுணர்த்தும் உபதேசவறிவாலறியவேண்டும். இவ்விடத்துக் கருவிகழன்ற அஞ்ஞான நீங்காத அதீதமானது ஆணவம் பரிபூரணமாயிருக்கிற சர்வசங்காரமென்று சொல்லப்பட்ட கேவலாவத்தையாகிய தன்மையாம். கலாதிகளுடனே கூடிநின்றுவிடயங்களிலேலவந்த சுகதுக்கங்களை அனுபவிக்குஞ் சாக்கிரமானது சிருட்டிதொடங்கிக் கன்மத்துக்கீடாக நானாயோனிகளிலும் புக்குழன்று ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களுக்கீடாகச் சுவர்க்க நரகங்களை அனுபவித்துச் சர்வசங்காரமளவாகச் செனனமரணப்பட்டுத் திரியுஞ் சகலாவத்தையான தன்மையாயிருக்கும். தீவிரதரசத்திநிபாதத்தாலே கேவலத்தில் அறியாமையும் சகலத்தில் விகாரமுமானவை நீங்காத இவ்விரண்டுந் தாக்காதுவிட முதல்வனருளான ஒப்பற்ற சார்பிலே நிலைபெற்று நிற்குஞ் சாக்கிர அதீதமானது பரமுத்தியான சுத்தாவத்தையின் முறைமையாம்.

உணர்த்துமுறைமை.

தத்தமக்கான விடயங்களைப் பொருந்திய சோத்திராதிகளிலொன்றும், பெரியபூதங்களைந்திலொன்றும், அந்தக்கரணங்களுன்கும், கலாதிகளைந்தும் ஆகப்பதினொன்றுந் தம்மிற்கூட, ஆன்மா ஒருவிடயத்தைப் புசிக்கும். இந்த முறைமையொழிந்த ஆன்மாவு மொன்றை யறியமாட்டாது. அவ்வான்மாவையொழித்த அந்தத் தத்துவங்களும் சேட்டிக்குஞ் செயலுடையனவல்ல. தனக்கெனவோரறிவில்லாத ஆன்மா ஒருவரறிவியாமற்றானே இந்தத்தத்துவங்களை அறிந்துகூடமாட்டான். தனக்கென வறிவில்லாதசடமான விந்திரி

யந்தானாக ஆன்மாவைக்கூட வறியாது. இத்தன்மையனான அவன் தத்துவங்
களுடைய வன்னமே தனக்குச் சொரூபமாய் நிற்பன். ஆனால் இவன் இவை
களால் எப்படிப்புசிப்ப னென்னில்? சுதந்தரவறிவையுடைய முதல்வனாலே
இவையெல்லாவற்றையு மறிந்துகூடிப் புசியாநிற்பன். அனுபவித்தறிகின்ற
பொறி கன்மத்தினாலே விடயங்களை அனுபவியாநிற்கும். அதுபோல ஆன்மா
வானவன் முதல்வனுடைய ஞானத்தைக் கருவியாக்கொண்டு சகலத்தையும்
அறிவனென்று விகாரவாதிசொல்லில், கொண்டறிகிற ஆன்மாவே கருத்தா
வாவன். முதல்வனுடையஞானமானது ஆன்மாவுக்காகநிலைபெற்று நின்றறியு
மென்று சங்கிராந்தவாதி சொல்லில் பசியாலுண்ணவேண்டிய ஒருவனுக்காக
வேறொருவ னுண்டலையொக்கும். ஆதித்தன்வந்துமிக்க விருளைத்துரப்ப அவ்
விராக்காலத்திலே விசாரித்த காரியங்களை மானுடர்கண்டு அவ்வவர் தொ
ழில்களிலே அவனுதவியறியாமற் பொருந்து முறைமைபோல ஆன்மாவா
வானது மலத்தினிலைமை புலன்களையனுபவிட மெங்கும் கலாதிகளாலே நீங்
குதலின் மகிழ்ச்சிபெற்று அம்மலத்தினீக்கம் பண்ணுவித்துத் தன்னுள்ளே
பொருந்துந் திருவருளையும் விட்டுப் பூமியின்கண்ணே தானாக அறிந்தாற்
போல வறியும். அறியத்தக்க மனாதிகளும் இந்திரியமானவைகளுள் அவ்வா
ன்மாவினால் எப்பொழுதும் அறியாநிற்கும். இப்படி அவனாலே யறிகையி
னும் இவனாலன்றோ அறிகின்றோமென்னும் தன்மை சிறிது மறியமாட்டா.
அவற்றையொப்ப ஆன்மாவும் சிவஞானத்தாலே சகலமுமறிந்து புசியாநிற்
கும். அவனாலன்றோ அறிகின்றோமென்று முறைமை சிறிதுமறியமாட்டா.
இவனைக் கன்மங்களையறிந்து புசிக்கமாட்டானாகையாலே பழையதாய்த்
தேடிவைத்த கன்ம பலத்தையுமறிந்து அவற்றை யிவன் புசிக்குமுறைமை
யினையும் முதல்வன் கூட்டுவன்.

ஞானவாய்மை.

அறிவிக்கத்தக்க கருவிகள் ஒன்றுமில்லையாயின் ஆன்மாவாலொன்றை
யும் அறியவொண்ணாதாம். இக்கருவிகள் எல்லாவற்றையு மறியுமோவென்
னில், சொன்ன அத்தத்துவங்களாலே ஞானத்தைக்கூடவு மொண்ணாது. ஆ
னாற் கூடும்படி எங்ஙனமெனின் முன்சென்மங்களிற்செய்த சரியைகிரியா
யோகங்களின் முற்றுதலாலே இவன் பக்குவங்கண்டு முதல்வனருளே திரு
மேனியாக வெழுந்தருளிவந்து இந்தத்தத்துவங்களைப் பொருளல்லவென்று
தீக்கித் தன்னுடைய சிபோதத்தைப் பொருந்தும்படி யடைவிப்பன். பலநிற
ங்களையுங் கவர்கின்ற பளிங்கினது ஒளியையும், பலவாய் நிலைபெற்று விளங்
காநின்ற வன்னங்களி னியற்கைகளையுங் கூட்டுகின்ற ஆதித்தனுடைய மிக்க
வொளி அவ்விரண்டின் றன்மையுந் தாக்காது விளங்குமாறுபோல தத்துவத்
தினிடத்திற் பயிலுநல்ல ஆன்மாவுந் தத்துவங்களுமாகிய விரண்டின்றன்மை
யும் தாக்காது நிறைந்த ஞானந்தானே ஞானமென்று சொல்லப்படும். ஆண
வமலத்தி னீட்டத்தாலே இருவிதமாயையும் ஒழியாமல்வரும் இருவினைகளு
மான இவற்றினுண்மையேயாய் நின்று போகங்களை அனுபவிக்கின்ற ஆன்

மாவினிடத்திலே பொருந்திய மயக்கத்தினிடத்திலே அந்தஞானம் இருள்தானாகவே நிற்கும். இனி அந்த வான்மாவினிடத்திலே ஆசாரியனாற் பொருந்திய அனுக்கிரகத்தினிடத்திலே அதுபிரகாசமாகவே நிற்கும்.

சித்தாந்தசரபம்.

(இன்னும் வரும்.)

நீதிசாத்திரம்.

(70-ம் பக்கத்தொடர்ச்சி.)

தன்னாக்கஞ் சீரியதாந் தந்தையாக் கம்மிடையா
மன்ன துணைவனாக் கங்கடையா - மன்னு
மிடையிற் றுடியா ளெழிலாக்க மெய்திற்
கடையிற் கடையாக் கருது.

உத்தமற் குச்சீற்ற மோர்கணமா நாழிகைகண்
மத்திமற் கோவிரண்டா மன்னுமே - சித்தத்
திரவொன் றதமற் கிறுதிநாள் காறு
மருவும்பா பிக்கு வரின்.

அதிதிபுற நிற்ப வருந்துநீர் கள்ளா
மதியின்று போனகமும் வைப்பின் - விதியின்று
கொள்ளுங்கோ வின்றசையாங் கோதில் குவலயத்தீர்
உள்ளும் விருந்தி னுயர்வு.

துற்சனரைப் பொன்னைத் தோற்கருவி வாச்சியத்தைத்
துற்பெண்டி ரன்ன துரகத்தை - முற்ற
நிறுத்துங் கழைதிலத்தை நேர்வினை யாளை
ஒறுத்தாற் குணமிக் குறும்.

அம்புலிகால் சீய்த்திருளை யார்வ முறவிளக்கும்
வெம்பரிதி நாளை விளக்குமே - செம்மையற
முப்புவனத் தும்விளக்கும் மூதறிஞன் றன்குலத்தை
எப்புவனத் தும்விளக்கு மே.

ஈந்தது கொண்டுமகிழ் வெய்தா மறையோனும்
வாய்ந்தது கொண்டுமகிழ் மன்னவனும் - ஆய்ந்துமன
நாணில் குலமகளும் நாணும் விலைமகளும்
வீணி லழிந்து விடும்.

மறையவர்க்கு மூல மறையேயில் லத்தின்
குறையகற்று மூலங் குலக்கொடியே - நிறையும்பல்
வித்துக்கு மூலமோ வேளாண்மை பாரினிசி
தத்துக்கு மூலந் தனம்.

ஆட்டுத் தூகளும் அலகி விடைத்துகளும்
காட்டுஞ்சேற் கண்படவர் காறுகளும் - நாட்டின்
கரத்தின் றுகளுமோர் காவலன்மேற் சாரின்
வருத்து மிடியே வரும்.

உழுநர்க் கிலேபஞ்ச மோதுமனு வோர்க்குப்
பழுதார் பழிபாவ மில்லே - விழித்தார்க்குங்
கஞ்ச மிருளில்லே யாருமோ னத்தார்க்கு
விஞ்சுங் கலக மிலே.

விண்மீ னொருகோடி மேவிப் பொலிந்திடினுந்
தண்மதிய மொன்றைச் சரியாமோ - வண்மையிலாத்
துற்புத் திரர்நூறு தோன்றுதலின் மூதறிவி
னற்புத் திரனொருவ னன்று.

கா. ந. முதலியார்.

சுற்றந்தழால்.

குறள்.

பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

நம் முள்ளத் துறைவோனுகிய பரஞ்சோதியின் திருவருளென்னுங் குடையினிழலி லிராகின்ற விம்மேதினியின் கண் விளங்கும் சர்வஜீவ கோடிகளிற் சிறந்தது மானிடப்பிறவி யென்பது வெளிச்சமே. ஆனமையால் இச் சிறந்த பிறவிக்குத் தக்கவாறு அவ்வம் முறைகளேச் சரிவர நடத்தி தழுவவேண்டியவைகளேத் தழுவிக்கொண் டிருத்தலே பேரறிவாம்.

இவ்வுலக வாழ்க்கைக்கு முக்கிய துணையானது நேசமே. இந்நேசத்தினளவாகப் பாசமும், அதன்வழியே யுறவினரென்றும் சுற்றத்தவரென்றும் உபசரித்த லவசியமே. "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லே" யென்பதை மறவாது நம் சுற்றத்தவர் செய்யும் சொற்ப குற்றங்களேக் குரோதமாக வெண்ணுது குணமாகக் கொண்டு பெருமிதமாக நடந்துகொள்ளுதலே மூதறிவு. மீண்டும்

உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி. என்பதி னுதாரமாகச் சுற்றத்தவரையும், உடன்பிறந்தாரையும் பிரிந்திருத்தல் அறிவோர் செயலன்று. "தமரிலார்க்கு நகரமுங் காடுபோன் றுங்கு" என்னும் ஆன்றோர் வாக்கின் வண்ணம், தமர்களுளாரென்று சொல்லி யகமகிழ்வதினுல் யாது பயன்? ஆனலன் னேரைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களால் வரும் இதாகிதங்களேச் சந்தோடத்துடன் அங்கிகாரஞ் செய்தலே சுற்றந்தழா லென்பதி னிலக்கணமாம்.

அழுன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி - பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

மடா நூருள்ளாரென்றும், இல்லாரென்றும் பேதம் பாராட்டாது அனைவரையும் சமமாகக்கொண்டு உபசரித்தலே யறிவு. மீண்டும் சுற்றத்தா ரென்னும் பதத்துக்குப் பிரதிபதமாய்கூறப்படும் "கிளைஞர்" என்னும் பதத்தைச் சற்றுய்ந்து பார்ப்பாம். மரங்களுக்கு அவைகளின் கிளைகளால் உண்டாகும் பிரயோசனங்களையும், அலங்காரங்களையும் கூறப்புகின் பெருகும். எனினும் அம்மரங்கள் அவைகளின் கிளைகளுடன் செழித்து வளரும் காலத்து முடி-மன்னரின் சதுர்வித சேனைகளும் அவைகளின் நிழலைநாடி செல்லுமன்றோ? இனியகுரலுடன் பாடும் புள்ளினங்களும், அம்மரத்தின் கிளைகளை தம்மின் வாசஸ்தலமாகக்கொண் டுய்யுமன்றோ? வெயிலில் சோர்ந்தவர்கட்குக் குளிர்ந்தகாற்றை யீட்டுமன்றோ? காய்கனி வர்க்கங்களைத் தாராளமாய் தருமன்றோ? ஆ! இவையெல்லாம் அக்கிளைகளினுதாரமாகவன்றோ நிகழ்கின்றன. ஆனமையால் நாமும் நம்மின் கிளைகளாகிய கிளைஞருடன் ஒருமனப்பட்டு வாழ்வோமாகில் நம்மின் உபசாரமென்னும் நன்னிழலைநாடி வருபவர்கட்களவுண்டோ? மீண்டும் அவ்விதமான உபசாரங்களைக் கடைப்பிடித்து வருவோமாகில் நாமடையும் பீடுக்கு நிறையுண்டோ? இல்லையென்பது திண்ணம்.

கிளைகளில்லாது வாடியுலர்ந்து கிடக்கும் மரங்களை யெங்ஙனம் வெட்டி முறித்து அக்கினிக்கு இரையாக்கி விடுகின்றனரோ அங்ஙனே சுற்றத்தவரென்னும் கிளைகளை நாடாதமானிடர்கள் சீக்கிரத்தில் நரகாக்கினைக் கிரையாவாரென்பது மாறாத சத்தியம். சுபம்! சுபம்!

த. தாமஸ்.

உலகில் மேம்பாடடைந்தவர் யார்?

(158-ம் பக்கத்தொடர்ச்சி.)

எழிலும் புகழும்பெற்ற நேயர்காள்! சென்றமீ வெளிவந்த வியாசனில் 'உலகில் மேம்பாடடைந்தவர் யார்? என்று மகுடம் புனைந்து வரைந்த விஷயங்களைக்கண்ணுற்றுக்களித்த சில அன்பர்களஃதை யோர் பெரும்பொருட்டாயெண்ணி அஃதின் கருத்தையே யீண்டு வரையும்படி கோரியதால், மேல்புனைந்த மகுடத்தின் கீழ் யாவருக்கும் பயன்படுமாறு சிலநீதிகளை வரையத்துணிந்தனம். ஏனெனில், யாமெடுத்த கருத்தை யப்போதே முடித்துள்ளதால், இங்ஙன மெடுக்க நேர்ந்தது சர்வ நலங் கோரியே.

"அரிதரிது, மானிடராய்ப் பிறத்தலரிது' எனக் கூறினர் நமது மூதாட்டியவ்வை" இஃதின் கருத்தெமது சிற்றறிவுக் கெட்டியவாறு இருவகைப்படும். முதலாவது மானிடராய்ப்பிறத்தலரிது அதுவும் அங்கஹீனமின்றி பிறப்பதரிது அப்படி பிறக்கினும், இயற்கை செயற்கை கல்வி இத்திரி ஞானங்களும் பொருந்த இருப்பதரிது. இத்துணையும் பொருந்த இப்படியி லுய்பவ

ளே மானிடனவன். இவனே மானிடபிறவிக்குத் தக்கோனாகிய சான்றோன். மற்றோர் பிறந்தும் பிறவாதவரே யாகையால் இத்தகைய அல்லல்களுக்குரிய இப்பிறவி எடுத்தலரிது அரிதினுமரிது என்ப தொக்குர்.

இரண்டாவ துத்தேசமாவது பகுத்தறிவில்லா வனசரங்கள் ஜலசரங்கள் பறவையினங்கள் முதலிய ஜீவப்பிராணிகளாய் பிறக்காமல் உலகமே உஜ்ஜீவிக்கும் உத்தமஜீவன்களான பகுத்தறிவுள்ள பேசுந்திறனுள்ள இம்மானிடப் பிறப்பை இம்மாநிலத்தில் புனைந்திங்குற்றது எத்தனையோ நலன்களைச்செய்து பெற்ற புண்யத்தின் பலனே யாதலான், இம்மனிதப் பிறவி இலகுவில் லபிக்காத வன்மையுள்ள பெருப்பேருதலினால் இவ்வுற்பவமே யிவ்வுலகுக் குயர்ந்த உற்பவம் எனவுங் கொள்ளலாகும்.

எது எப்படியாயினும் மிகுப்பயனை யுடைய மகத்தான இப்பிறவியை நாமெடுத்ததற்கேற்பநல்லறிவாகியஞானதீபத்தின்காட்சியால் நம்மைப்படைத்தவ ருருவைக்கண்டு அவரினுட் கருத்தை யறிந்து, அஃதின்படி நீதிநெறியில் நாம் ஒழுகவேண்டியது மிக்க அவசியமாயிருக்க; இதற்கு மாறாக நமது உடல்கூற்றையுங்கவனியாது நமதுகடமை யின்னதென்பதையுங்கவனியாது இயற்கை செயற்கை கல்வி ஞானங்களையும் ஏற்றபடி விர்த்தி கரிக்காமல் கண்டதேகாட்சி கொண்டதே கோலமெனக் காலாகோலமாய் சாதனைக்காரன் தலைகீழாய் நடப்பதுபோல அகம் பாவத்துடன், ஆரையு மதியாமல், அடக்கம் ஒடுக்கம் மானம் மரியாதைகளை விட்டு வாணாள் வீணாக்கி" மண்ணுங்கட்டி சுவாமிக்கு மாவாற் பலகாரமா? என்றபடி தானும் மண்ணுங்கட்டி பிண்டந்தானே தனக்குமாத்திரம் பொறுப்பில்லாத தன்மையேன்? இந்த பாண்டத்தை யுண்டுபண்ணின குலாலன் வேறுவித பாண்டமாக அதாவது மிருகம் பறவை முதலானவை போன்ற உருவை யேற்படுத்தாமல்,மனிதனுருவைப்போல செய்தாரேயொழிய மனிதர்க்குறுங் குணங்களைத் திரணமாத்திரமேனும் பொருத்தவில்லையே? பாண்டம் வனையுங் குயவனைப்போன்றசடலத்தை யுருவாக்கும் ஆதிமூலப் பொருளாகிய சிருஷ்டிக் கர்த்தரான எமதையன் எளியார் நேயன் என்ற உறுதியும் இறுதியுமான பல எண்ணங்களை ஊடுருவிப் பார்ப்பரேல் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குவிளங்கும். பிறதூஷணை கர்வம் அசூயை, முதலியவைகளை விட்டு தானும் சுகப்படுவதுடன் தனது சுற்றத்தாரும் சுகப்பட்டு ஜகமெச்ச வாழ்ந்து சன்மார்க்கத்திற் சேர்ந்து நன்மார்க்கத்திற் றேர்ந்து ஆன்மாவை அகண்ட நிலையில் அனுதவஸ்துவில் நித்யாஸ்பதமாய் நிலைநிறுத்தி நிஸ்ஸம் சயம் நன்குடன் நீடுசுகிக்கலாமன்றோ? இன்றேல் காடுசுகித்தல் தானேற்கும்.

இப்படியைப் பரித்து காத்தளிக்குங் கடவுளினுண்மையான கருத்துப்படி யுலக அபிவிர்த்தியின் பொருட்டு பிறப்பித்த நரஜன்மத்தை வீணுக்கு மதிகேடர்கள், மலிந்துவிட்டதனா லன்றோ? கருப்புங் கொள்ளை நோயும் பிளேக் கென்னுங் கொடிய நோயும் நமதிந்து தேசத்தை விடாது வாட்டி

வதைத்துப் பல்லோரையும் ஒட்டாண்டியாக்கியும் எமனுலகாக்கியும் இன்னுமனேக அமளிகுமளி செய்துக்கொண்டும் வருகிறது.

உண்மையுடைய உத்தமாத்மர்கள் சொற்பமேனு மாங்காங்கு மின்மினிப்போல் மின்னிக்கொண் டிருப்பதினா லன்றோ? நம்மிந்துதேசம் ஈடழியாம லிருக்கின்றது. தற்போ திலங்கும் உத்தம புருஷராகிய மேனாட்டாரை யுத்தேசிக்கின் அசூயை என்பது சிறிதுமின்றி எப்பிறப்பும் ஒரு பிறப்பென உத்தமஞானிகள் போற் கருதி உண்மையறிந்து சுற்றத்தைப் பேணி மற்றோரை யாதரித்து மேதினியில் மகிமைப்பெற்று துஷ்டரை யடக்கி சிஷ்டரைப்பாலித்து கொட்டத்தைத் தவிர்த்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் தங்கள் உற்றோர் பெற்றோர் பந்துக்களுடன் மற்றோரையுமதித்து உண்டுடுத்துக்களித்து உண்மைப் பொருளைநாடி உத்தமரை யுயர்த்தி மத்திபருக்கு மதியுரைத்து அதமரைத் தாழ்த்தி அதஞ்செய்து பதனமாய் இல்லோம்பி உலகோம்பி உருக்கப்பெருக்கத்துடன் வருக்கஞ்சூழ வெகு உல்லாசத்துடன் தேவகணங்கள் தேவலோகத்தில் எவ்விதப் பதவியைப் பெற்றுளரோ அவ்விதம் சுகக்ஷேமத்துடன் தங்கள் பிறவியை நன்னாளாக்கிக் காலந் தள்ளுகின்றனர்.

புராதன தேசமாகிய நம்மிந்து தேசத்திலோ வெனில் அறுவகை விகாரத்துடன் இடும்பை அசூயை என விரண்டுஞ்சேர அஷ்டவிகாரங்கள் ஒவ்வொருவரிடமு மிருந்து துஷ்டரிடம் உறைவிடமாகக் குடிக்கொண்டு வெகுஅகோரமான சீர்கேடுகளெல்லாம் செய்வித்து தானுங்கெட்டு தன்வாகனமுங்கெட்டு குருடன், குருடனை வழிநடத்துமாறுபோல் பாதாளப் படுகுழியில் வீழ்ந்து தவிக்கின்றதை யோசிக்கின் மானிடப் பிறவியாய் பிறந்து சர்வ அறிவும் உடைத்தா யிருந்தும், நன்மைதீமைகளைப் பகுத்தறியுந் தன்மை வாய்க்காமலும், சான்றோர் சேர்க்கையின்மையாலும் ஏனோதானோ வென்று தான் தோன்றித் தம்பிரானாய் தறுகுறும்புத்தனமான அட்டகாசஞ்செய்து தட்டுகெட்டு தடுமாறி பித்தம் பிடித்தவர் போல் ஒருவர் சொல்லுங்கேளாமல் கர்வமும் அசூயையுமே நட்புக்கொண்டு நன்னிலைவிட்டு நடுவீதியில் நாணமில்லாமல் நவிலும் மதியினர்களுக் கேற்றவாறு தண்டனையே கடவுளும் விதித்துள்ளார்.

இத்தகையினரின் பெருக்காலாயே நமது தேசம் கேடுபாடாகி க்ஷீணதிசைக்கு வந்துளது. அசூயை எனும் பொறாமையினா லன்றோ? திரியோதனன் தனது கிளையோடழிந்தான்" "பொறுத்தவர் நாடாள்வர் பொங்கினார் காடாள்வார்" என்றவாக்கியம் பஞ்சபாண்டவர் பங்கு சூசிப்பிக்கின்றதே. மௌனம் கலகநாஸ்தி என்பது மேலோர் கொள்கை. துஷ்டரைக் கண்டால் தூரவிலகவேண்டும். ஆதலால் தான் ஞானிகள் பாபிகளிடையில் வசிக்காமல் கானகத்தினிடைதனித்து வசிக்கலாயினர். தீயரின் தீக்குணத்துக்கேற்க கடவுள் பல அல்லல்வினைக ளளித்தும், மதியீனர்கள் கருதாமலிருப்பதால் இன்னும் என்னபாடு படுவாரோ அறியோம். (பின்தொடரும்)

ஆன்றோர்க்கடிமை.

கமலாவதி.

(156-ம் பக்கத்தொடர்ச்சி.)

காஞ்சனாதேவி—கமலாவதி என்ன நான்சொல்வதைவிட்டு வீண்காலம் போக்குகின்றாய் இதற்குத்தானா அத்தையார் காத்திருப்பது?

கமலாவதி—பெற்றாய்! கோபஞ்செய்ய வேண்டாம்; தங்களிஷ்டத்தை மாறுபடுத்தாமல் பூர்த்திசெய்கிறேன். அத்தையாரும் தாங்களும் கவனியுங்கள்.

15-ம் பாடம்.

பட்டிக்காட்டு மூடஞானி.

பட்டு என்னும் கிராமத்திலே பட்டிக்காட்டானொருவனிருந்தான்; அவ்வூரிலிருப்பவர்கள் பேதைமக்களாயிருப்பதினால் அவர்களைமயக்கி தனக்கு நிகர் யாருமில்லையென தன்மனதுள்ளே மதித்துக்கொண்டான். ஒருநாள் அவன் அவ்வூருக்கடுத்த பட்டணத்தின் கடைவீதியாய்ப் போகும்போது அங்கே சிலர் கூட்டமாக விருப்பதைக்கண்டு, அருகிற்போய் என்னவென்று விசாரித்தான். அங்கிருந்த நண்பரொருவரால் இவ்விடத்தில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகள் என்னும் மஹாத்மா ஒருவருண்டு கடந்த இரவு இவர் சாராயக்கடை பூட்டப்பட்டிருப்பதை யெப்படியோ திறந்து இரண்டு புட்டிகளை யெடுத்து தனது போர்வைக்குள் வைத்துப்போவதை வெகுநாளாய்க் காத்திருந்த கடைக்காரனால் கண்டு பிடிக்கப்பட்டு பின்னரவர் சொல்லியபடி அந்த புட்டியைச் சோதிக்க அது எண்ணெய்யாக இருந்தது. ஆகவே இவருடைய மகத்துவத்தை என்னென்றுசொல்வது என்று புகழாகச்சொல்லக் கேட்டான்.

இந்தப் பட்டிக்காட்டான் தன்னையுமோர் ஞானியென்று மதித்துக்கொண்டதுமல்லாமல் அவ்வூரிலிருப்பவர்க ளண்டையும் வாய்ப்பறை அடித்துவிட்டான். இதுவுமன்றி தன்னைக்கண்டு பேசுவோருக்கு தான் நிஷ்டைக்குரிய சாமான்கொணரப் போகின்றமையால் பேசநேரமில்லை யென்பான்.

சிலகாலஞ் சென்றபின் முதலில் "சித்து" வித்தை பூர்த்திசெய்துகொண்டாலே பின்னர் நிஷ்டைகாலத்தில் சுவரவமுண்டெனக்கருதி, சித்தில்பழகினான் அதாவது அன்னியரது பொருளைத் திருடிக்கொண்டு, கேட்டால் பலவித ஜித்துகள் செய்தான். கடைசியாகப் பிடிபட்டு சிறையிலிட்டதனால், சிறையிலிருந்து "நரிகளைப் பரிகளாகமாற்றினவரே' ஏ! ஜெகதீசா! சாராயத்தை யெண்ணெயாக மாற்றியவரே! பரமேசா என்னைச் சிறிதுநேரம் எறும்பாக் மாற்றிவிட்டால் வெளியேபோய்விட மாட்டேனா? என்று பலதரமும் வேண்டினான்; வேண்டியும் இவன் இப்படியே யிருந்தான்.

நாள்முடிவு பட்டபின் சிறைநீங்கியும் திருடுவதையே கையாடி மூன்றாம்முறை சிட்சையடைந்தான்; அடைந்தும் இவனிது வோர் திருவிளையாட்டெனக் கருதி தன்னைப்பின்னும் ஞானியென்றே சொல்லிக்கொள்ளும் பேதைமையினால்; இதை வாசிக்கும் சிறுபிள்ளையே இந்தபாடத்தில் நீ என்ன கற்றுக்கொள்ளுகிறாய்.

Note-தன்னாலியலாத காரியத்தை யொருவன் செய்யப்படாது; செய்யக்கூடுமாயினும் கர்வம் கொள்ளக்கூடாது என்பதே.

கமலாவதி—அத்தையார் கேட்டீர்களா! நான் வாசித்தபாடம் எனக்குப் புதியபாடமாகையால் எனக்கு படபடவென்று வாசிக்க முடியவில்லை.

தாயார்—குழந்தாய்! நீவாசித்த அளவுசரியே; படபடவென்று வாசிப்பதினால் பலனென்ன சொற்கள் உனக்கும் கேட்போருக்கும் தெளிவாயிராது; இருக்கட்டும், ஆசிரியரவர்கள் நீபடிக்கும் பாடங்களுக்கெல்லாம் தக்கவிவகாரங்கள்சொல்லிக் கொடுக்கின்றாரா?

கமலாவதி—ஆம் அம்மா, ஒவ்வொருவிஷயமும் எனக்கு நன்றாய் விளங்குமட்டும் சொல்லி நானறிந்தபின்னரே அடுத்த விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றார்.

தாயார்—ஆம் ஆசிரியரது குணம் நான் வெகுநாட்களாய் அறிவேன்; பன்னிரண்டு வருடகாலம் அடிமைத்திறம் பூணவேண்டுமெனச் சொல்லி பதினைந்துவருடகாலம் அடிமைத்திறம் பூண்டாலும்கற்றுஅறியாதவரும் கற்பிக்க வகையற்றவர்களுமாகிய மூடகுருக்களைப் போலல்ல நமது ஆசிரியர் என்பதைக் கருதியே உனது தந்தையரும் நானும் அவர்மேல் அன்புபாராட்டுவது; ஆபாசங்களைப் போதிக்க வல்லமைகற்றவரோ குருக்களாவார்? அநேகர் குருக்களென வேடங்காட்டி, பொன்மாற்று வித்தை யறிவேனென்றும்; நான் தரைக்குமேல் இரண்டங்குலம் மேலே கிளம்பி யோகம் சாதிக்கிறேன் என்றும்; எழுத்தற வாசித்தறியாதவன் நானுன்மேல் அறம் பாடுவேனென்றும்; நான் கூடுவிட்டுக் கூடுபாய்வேன் எனக்கு இடம் முதலானது சரிபடவில்லையென்றும், சிட்டிகை விபூதிகொண்டு நான் அவனை அநேக ஆட்டங்கள் காட்டிவிடுவேனென்றும்; சற்றுநினைத்து நான் அழுவேனானால் அவன் சாம்பலாய்ப் போவானென்றும், நான் இரவில் மூன்று கண்களோடு பார்க்கிறேன் எனக்கு நெற்றியிலொருகண்ணிருக்கின்றது அது பகலில்யாருக்கும் புலப்படுவதில்லை புலைதின்போருக்கும் மற்றும் நீசருக்கும் இரவில் புலப்படாது எம்போல் ஞானியர்க்கே புலப்படும் என்றும் தந்திரம் காட்டிப் பணம்பறித்து வயிறுவளர்க்கும் ருத்திராக்ஷபூனைகளோகுருக்களாவார்? இவரிடம் கற்பவர்கள் இதைப்போன்றே தாங்களும் நடந்துகொள்வர் அநேகர்; என்னசெய்வது நாமிவரை யடுத்துக்கொண்டு நாமும் பலரைப் புறங்கூறிவிட்டு இவருடைய விஷயமறியாது எனது குரு செத்துகிடக்கும் பாம்பைதடியால் பயமின்றி அடிக்க மிகவும் வல்லவரென்று பலரண்டையுங் கூறிவிட்டோம் இப்போது இவரைவிட்டு நீங்கினால் நாம் மாற்றார் முன்னம் கேவலமாகப் போய்விடுவோமே; விழுந்தது விழுந்தோம் இனி கருதுவதில் பலனின்று என்று கருதுவர் ஒருசாரார்; பின்னுஞ் சிலர் இவரது கவரதை யெல்லாம் இப்போது தெரிகின்றது மெத்தவும் மேன்மையாகக் கருதினோமே இவரைவிட்டு இனி நீங்குவதே தகுதியென நீங்குவர் அறிவாளர். அப்படியறிந்தும் நீங்காத பேதையர்; "ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமை

யுந், தான்புக் கழுந்து மளறு'' அதாவது மூடனானவன் இப்பிறப்பிலேயே, இனிவரும் பிறப்புகளி லனுபவிக்குந் துன்பங்களை யுண்டாக்கிக் கொள்ளுகின்றான். என்பதாக, இவனை நம்பி தாங்களும் மிக்குணர்ந்தவளாகக் கருதி, பெரியார்களையும் கற்றோர்களையும் தூஷணம்பேசி, நாளையென்ன சம்பவிக்குமோ என்பதறியாமற் பேசும் மடத்தடியர் பூவுலகத்திருந்து ஞானேந்திரியங்களை யுடையராகியும், நரகத்தில் இடத்தை சம்பாதித்துக் கொள்ளுகின்றனர். நமது ஆசிரியர் போதிக்குங்கால் பார்த்தனையோ ? குழந்தைக் கெப்படி வலியபதார்த்தத்தை மெல்லியதாக்கி, பலவித ஆசையான வார்த்தைகளைச் சொல்லி யூட்டுங்கால் அவ்வார்த்தையைக் கேட்டுங் குழவி பதார்த்த மூட்டுங்கரத்தையும் விழுங்கிவிடுவது போலத் தாவிவருவ தெப்படியோ அப்படியே இவரது செயலும் இவரிடம் படிப்போருடைய குணமுமிருக்கும், இவருடைய புகழை எவ்வளவு காலம் சொன்னாலும் முடியாது கருதி நாவு திருப்திபெறாது. நான் வெகுநேரம் பேசியிருந்து காலம்போக்கினேன் சேடியும் அழைக்கின்றாள் வாருங்கள் போய் போஜனமுண்ணலாம்.

பின்னுங் கமலாவதி தமதாசிரியரிடத்தில் எல்லா விஷயங்களிலும் சுறுசுறுப்பாகப் பாடங்களை "வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவு மேலாதொன்றை போற்றிக்கேண்மின்" என்பதாகத் தனக்குச் சந்தேகமாகவிருப்பனவற்றைத் திரும்பக் கேட்டுக்கொள்ளாமலும், பாடஞ் சொல்லுவித்த உபாத்தியாயர் தம் மாணவர்களை யெல்லாம் சரிபட நுழைந்ததா வென்ன, எலியொன்று வளைக்குள் செல்லுவதை வெகுகாத்திரமா யதிகநேரமுற்றுப் பார்த்திருந்த மாணவன் தம்பாடத்தைக் கவனியாதவனாய் அவ்வெலியின் வால் மாத்திரம் வளையின் வாய்க்கு வெளியிருப்பதைக் குறிப்பிட்டு, கஷ்டமான பாகமெல்லாம் உள்ளே சுலபமாய் நுழைந்துவிட வால்மாத்திரம் இன்னும் நுழையவில்லை யென்றதைப் போலுமில்லாமல், அதோடு சிலர் குருவையோ திருப்பிக் கேட்பது சொல்லுவதற் கெல்லாம் தலையாட்டிக் கொள்வதேகுருவடக்கமுள்ளாரெனக் காட்டுமெனக் கருதுவரும் கற்பித்தமட்டும் பிரயாசங்கொண்டு மனனப்படுத்தி சொன்னவற்றை மாத்திரம் திருப்பிச் சொல்லக்கூடியவன், தான் கற்றதை விச்சாரணையாக நியாயஸ்தலத்துக்கு கொணர்வதில்லாமல், மனக்கூட்டிலே அடைபட வைப்பானும், அற்றைப்போதுகற்றதை அற்றபோதிற் கேட்டாற் சொல்லவறியாமல் "பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் மாண்பே" யென விச்சூத்திரத்தை வேறுவித நாழிகொண்டளந்து அன்று கற்றதை அன்றிரவின் தூக்கத்தில் போக்கடித்துவிட்டு நாளைக்கு வேறுகற்க எண்ணுமவர்களைப் போலுமல்லாமல், இன்றறிந்துகொள்ளும் சமயத்தே தனக்குள்ளே எதிர்க்கும் கேள்விகளை, யுடனே கேட்டுத் தெளிவதோடு இராப்போதில் தம்மிருமுது குரவர்தம்மொடும் அவைகளைப்பற்றிப்பேசி அதைப்பற்றி யவர்கள் சொல்வதை யுணர்ந்தும் பின் தன்னறிவாய மரக்கலத்தி லேற்றித் துறைமுகம் பிடிபடும்வரை விச்சாரணையிலே யிருப்பதினால் சகல கலைகளும் தெள்ளிதில் உணர சமர்த்தளாகிபெண்களிற்றேர்ந்தெடுத்த நாயகமென விளங்கினாள்.

என்றினும், வழுக்கறச் சொல்லினும் விஷயங்களை யொழுக்முறநடத்தல் அல்லது நடக்கல் அரிது என்னும் வாக்கியத்தை தலைநாணச்செய்த கமலாவதியின் சாமர்த்தியத்தைப் புகழ யாவரு மீடற்றவர்களெனச் சகலராலுங் கொண்டாடப் பெற்றாள். இவளது சாதுரியத்தைக் கொண்டாட வறியாத ஏழைமதியர், இவளுக்கு தெய்வபத்தியும் அதிகமா யிருப்பதினால்.இது இவளுக்கு அருட்கல்வியென்றே சொல்லினர் அதற்கு மாறாகச் சிலர், "சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்றனர். சிலர், தெய்வப்பெண்தான் இவ்வரச னில்லந்தேடியுதித்தனளோ என்றனர். சிலர், இவ்வரசன் முற்பிறப்பில் கடனைக் கொடாமலிறந்திட்டிருப்பானதை தீர்த்துக்கொண்டு போம் பொருட்டே யிவளிவணுதித்து அவ்வரசற்கு இம்மாட்டுஞ் சிலவேற்படுத்திப் பெற்றுக் கொள்ளுகின்றனள் என்ன தங்கடங்கட் கிசைந்த மதியளவிற் கேற்றவாறாய்ப்பிதற்றித்துதித்துப் பேசினர்.

கமலாவதிக்கு வயதும் ஒவ்வொன்றா யதிகப்பட பாக்களவிற் பருத்திருந்த ஸ்தனபீடங்கள் அழகிய சிறிய சிமிழைப்போன்ற வளவினதாயிடங் கோலியபின், கண்கள் இரண்டும், அதை தரிசித்த மாத்திரத்தில் கண்கள் கொண்ட சந்தோஷமானது முகத்தை வஜிகரப்படுத்தியது. முகப்பிரகாஸமானது பார்ப்பவர்கட்கு, மார்பையிடமாக்கி வளரவந்த தங்ககொடிச்செடிகளான்து அங்கிடந்தராமையால் திரும்பவும் வளைந்து முகத்தின் வழியாய் வெளியாகி முகத்திலேயே கொடிகள் படர்ந்திருக்கிறதாகவும் மார்பை யிடமாக்கவந்ததுவும் இடந்தராமையால் திரும்பிச்சென்றதுமான செடிகள்வளைவே மார்பிடத்தை மேடாக வடுப்படுத்தியதெனக் கருதப்பட்டது.

(இன்னும் வரும்) பா. மு. இரங்கோன்.

களவழிநாற்பதுரை.

(139 - ம் பக்கத்தொடர்ச்சி.

இணைவே லெழின்மருமத் திங்கப்புண் கூர்ந்து
கணையலைக் கொல்கிய யானை - துணையிலவாய்த்
தொல்வலி யாற்றித் துளங்கினவாய் மெல்ல
நிலங்காற் கவரு மலைபோன்ற செங்கட்
சினமாற் பொருத களத்து.

(பொ-ரை.) கோபத்தையுடைய செங்கட்சோழன் போர்செய்தபோர்க்களத்தில் இணைத்தவேல்கள் அழகிய மார்பிலழுந்துதலால் புண்மிகுந்து, அம்பினலைப்புகளால் தளர்ந்தயானைகள் (தம்மேற்கொண்ட) துணைவரை யிலவாய்ப் பண்டை வலியினின்று நீங்கி, நடுங்கி, மெல்லநிலத்தைக் காலாலே யகப்படுக்கும் மலையை யொத்தன.

(வி-ம்) அதாவது செங்கட்சோழனது போர்க்களத்திற்பட்ட பகைவர்கள் தமது யானைகளை யழக்கவுமவ்வியானைகள் அம்புளாற்றுக்குண்டு தமது வலுவையு மிழந்து கால்களை நிலத்திலே யூன்றி நிற்பதானதோற்றம் அசைவற்ற மலையை யொத்திருந்தனவெனக.

இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடியல் யானைத் தடக்கை யொளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

(பொ - ரை) ஒலிநிறைந்த இடிபோன்ற முரசினையுடைய பாய்ந்து செல்லுங்காவிரிநீர் நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில்; விளங்கும் வாளையேந்திய புறங்கொடாவீரர்கள் துண்டுபடுத்தத் துண்டு பட்டனவாகிபெரியநிலத்தில் விழுந்து கிடந்த குடையின்கீழ் (கிடந்த) வரிபொருந்திய நெற்றியையுடைய வெற்றிசேர்ந்த யானையினது நீண்ட கைகள் கலைநிறைந்த ஒள்ளிய சந்திரனைத் தீண்டும் பாம்பினை யொக்கும்.

(வி - ம்) இதனால் வளப்பம்பொருந்திய காவிரிநீர் நாட்டையுடைய செங்கட்சோழனது போர்க்களத்தில் தமது போர்வீரர்களால் துண்டுபடுத்தப்பட்டுப் பகையரசர்கள் தமது சந்திரகுடையையும், யானையையு மிழந்தனரென்றும் அக்குடையை யானையானது தனது துதிக்கையா லெடுக்குங் காட்சியானது கலைநிறைந்த சந்திரனை இராகு எனும் பாம்புதீண்டுங் காட்சியை யொத்திருந்த தென்றார். பகையரசரிழந்த குடையைச் சந்திரனாகவும், அக்குடையைத் தூக்குமியானையின் துதிக்கையைப் பாம்பாகவுமுவமித்திங்ஙனங் கூறினாரென்க.

ஒற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்த களிற்றுடம்பு
செக்கர்கொள் வானிற் கடுங்கொண்மூப் போன்றவே
கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து.

(பொ - ரை) வெற்றியையுடைய வேலையேந்திய சேனையையும், கொடிகட்டிய வலிய தேரையுமுடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க் களத்தில்; வீரர்களெடுத்து எறிதலால் நெற்றிபிளந்து உதிர நீருண்மூழ்கி யெழுந்த யானையினது உடல்செக்கர்வானத்தில் கரியமேகத்தை யொத்தன.

(வி - ம்) இதனாற் செங்கட் சோழனுக்கதிக சேனையும், ஜயங்கொண்ட தேருமிருப்பதாகக் கூறப்பட்டது. அன்றியுமிவனது போரின்கண் வந்த பகைவரது யானைகள் அம்புகளால் தாக்குண் டுதிரவெள்ளத்தில் மூழ்கியெழுதலானது சிவந்தவானத்திலடர்ந்த கரியமேகத்தை யொத்திருந்தது யானையினிறத்தைக் கரியமேகத்திற்கும், உதிரவெள்ளத்தைச் செவ்வானத்திற்கு முவமையாக்கி யிவ்வண்ணங் கூறினாரென்க.

திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரி நீர்நாடன்
நண்ணாரை யட்ட களத்து.

(பொ - ரை) கண்ணுக்கு நிறைந்த (காட்சியையுடைய) வாசனைவீசும் மாலையை (யணிந்த) காவிரிநீர் நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில்; வலிய தோளையுடைய வீரர்கள் எறிதலால் திசைகள்தோறும் பூமியில் புரளும் பசிய தலைகள்மிகவும் பனங்காட்டில் பெருங்காற்றுப்புக்க செயலையொத்தன.

(வி - ம்) இதில் செங்கட்சோழனது போர்வீரர்களா லெறியப்பட்ட பகைவர்களது தலைகள் புரள்வதானது பனங்காட்டிற் பெருங்காற்று நுழைந்தா லெங்ஙனம் பனங்காய்க ளுதிர்ந்துருளுமோ அவ்விதமாகவே சோழனது போர்க்களத்தில் பகைவரது தலைகளுருண்டதெனக் கூறினரென்க.

மலைகலங்கப் பாயு மலைபோ னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து - பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(பொ - ரை) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில்; மலைகள் கலங்க பாயாநின்ற (வேறு) மலைகள்போல நிலைகொண்டு (பகைவர் யானைகள் கலங்க) யானைகள் பாய்தலால் (அவற்றின்) கொடிகள் மேலெழுந்துவிளங்கி, (துவள்தல்) வானத்தில் (உள்ளதுகளை) துடைக்குஞ் செயலை யொத்தன.

(வி - ம்) இங்கே பகைவரது யானைகள் கலங்கும்படியாக செங்கட் சோழனது யானைகள் பாய்தலை, மலைகள் கலங்கள் வேறுமலைகள் பாய்ந்ததென்றார், அன்றியும் பகைவர்களுடைய யானைகளை கலங்கிநின்ற மலைகளாகவும், சோழனது யானைகளை பாய்கின்ற மலைகளாகவுங் கூறினது சோழனது வன்மை தோன்றும் பொருட்டே. தவிர அவ்வெற்றியானைகளின்மேற் கட்டப்பட்டிருந்த கொடிகளாகாயத்தையளாவி நின்றமையான் வானத்திலுள்ள மாசெனுங் குற்றத்தை நீக்கத்துடைப்பனபோ லிருந்ததென்க.

(தொடர்ச்சியுண்டு.)

தமிழுழவன்.

மஹாகாசிபமுனிவர்.

(132-ம் பக்கத்தொடர்ச்சி.)

நீ அதை அங்கீகரிக்கவில்லை, பொறுமை பரிசுத்தமாகுமா? தான் என்னும் அகம்பாவத்தை நீ போக்கியும் உன்மனதில் பொறுமை ஒன்றேதங்கி இருக்கின்றது. காசிபா! காசிபா! நீ பரிசுத்தமானவனல்லன், நீசத்தியமார்க்கத்தில் நடப்பவனல்லன் என்றார். காசிபர் தன் பிடிவாதத்தை விட்டொழித்தார். அவர் பொறுமையும் அவர் மனதைவிட்டோடியது அவர் அடியற்ற பனைபோல் பகவன் முன்விழுந்து, "தேவாதிதேவா! என்னை ஆட்கொள்ளவேண்டும், கட்டளையை விண்ணப்பிக்கவேண்டும் என்று வருந்திக் கேட்டார். பகவன் அவரைநோக்கி, "காசிபர் நீ ஜாதிலர்களுக்குத் தலைவன் முன் அவர்களிடம்போய் உன் எண்ணத்தை தெரிவி நீ எண்ணியபடி அவர்கள் சம்மதிக்கட்டும்; போய்வாரும்" என்று விளம்பினார். பிறகு காசிபன், ஜாதிலர்களிடம் சென்று பின்வருமாறு அவர்களுக்குத்தெரிவித்தான் "எம்பகவனும் புத்தருமாகிய மஹாசாக்கைய முனிவர் அருளால் துறவறவாழ்வை அடைய ஆவல்கொண்டிருக்கிறேன். நீவிர் உங்களுடைய யோசனையின் நன்மைப்படிச் செய்யலாம் என்றார். ஜாதிலர்கள்" யாங்களும் மஹா சாக்கைய முனிவர் விஷயத்தில் ஆழ்ந்த அன்பும் பற்றுதல் உடையேம். நீர் அவர் சங்கத்தில் சேர்வீராயின் யாங்களும் அவ்வாறே செய்வோம்" என்றார்கள்.

உருவிலா வனத்திய ஜாதிலர்கள் யாவரும் தாங்கள் வழிபடும் அக்கினி குண்டமுதலானவைகளை ஆற்றில் எறிந்துவிட்டு பகவனிடம் சென்றார்கள்.

அவ்வாற்றின் கிழ்க்கரையில் வசிக்கும் ஜாதிலர்களுக்குத் தலைவரும், உருவிலா மஹாகாசிபருக்கு சகோதர்களும், மிக்க வல்லமை சாலிகளுமான நதீகாசிபன், கயாகாசிபன் என்பவர்கள் ஓமகுண்டங்கள் தண்ணீரில் மிதந்துகொண்டு போவதைப்பார்த்து, "இது என்ன புதுமை! யாதோ நம் சகோதரனுக்கு நிகழ்ந்திருக்க வேண்டும்! என்று நினைத்து தங்களுடைய பரிவாரங்களுடன் உருவிலா வனத்திற்கு வந்தார்கள். அவ்விடத்தில் நிகழ்ந்த காரியத்தைக் கேள்வியுற்று பகவனிடம் சென்றார்கள், கயை நதீ தேசங்களில் வசிக்கும் ஜாதிலர்களைக்கண்ட பகவன், அவர்கள் அக்கினியைத்தொழுது வந்தவர்களாதலாலும் கடூரதவத்தைப் புரிந்தவர்களாதலாலும், அக்கினியைப் பற்றி ஓர் பிரசங்கஞ்செய்தார்.

ஓ ஜாதிலர்களே! சகலமும் பற்றி எரிகின்றன. கண்கள் எரிகின்றன. புலன்கள் எரிகின்றன இவைகள் காமத்தீயால் பற்றி எரிகின்றன. இதோ கோபம் இருக்கின்றது. அறியாமை இருக்கின்றது. பொறுமை இருக்கின்றது. எரிகரும்புகளாகிய இவைகள் உள்ளவரையில் காமத்தீ எரிந்துக்கொண்டே யிருக்கும். காமத்தீபற்றி எரிகிறவரையில், பிறப்பு,பிணி,மூப்பு சாக்காடு, துக்கம், ஆயாசம், வருத்தம் இவைகள் இருந்துக்கொண்டே இருக்கும். ஆதலால் ஓ ஜாதிலர்களே! உண்மையை நாடுகிறவன் வாய்மை நான்கை அறிந்து, அஷ்டாங்கமார்க்கத்திற் செல்வான், அப்படிப்பட்டவன் கண்கள் விஷயத்தில் எச்சரிக்கையா யிருப்பான். தன் எண்ணங்கள் விஷயத்தில் எச்சரிக்கையா யிருப்பான், தன் புலன்கள் விஷயத்திலும் எச்சரிக்கையா யிருப்பான். அவாவை ஒழித்து துக்கத்தினின்று விடுதலைப்பெறுவான். தான் என்னும் அகந்தையை ஒழித்து நிருவாணத்தை அடைவான்" இந்த திவ்விய பிரசங்கத்தைக்கேட்ட ஜாதிலர்கள் சகலரும் ஆனந்த பரவசராய் மும்மணிகளாகிய புத்த தர்ம சங்கத்தில் அடைக்கலம் புகுந்தார்கள்.

க. அ. ப.

ஜாதிகள்.

163-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வண்ணமாக அவர்களுடைய நடத்தைகளும், கட்டுக்கதைகளும் அவர்களுடைய சுயாதிகாரகொடுமைகளை ஸ்தாபிக்கின்றன.

சத்திரியனாகிய காதிராஜா புத்திரனான விசுவாமித்திரன் சிம்மாசனாதிபதியாகி சத்தியத்தை நிலைநிறுத்தி நீதிசெலுத்திக்கொண்டு குடிகளைத் தந்தைபோல் இரட்சித்து வருவதில் பெருங்கீர்த்தி யடைந்தான். ஒருநாள் அவனது படைவீரரோடு வேட்டைக்குப்போய் இரண்டொருமாதம் வேட்டையிலிருந்து தனது நகரத்திற்குத் திரும்பிவரும்போது வசிஷ்டர் வசிக்கின்ற வனத்துட்சென்றான் வெய்யலில் விடாய்த்து வந்து அந்தமுனியினுடைய குடிசையில் உட்கார்ந்தான். அந்த முனிவர் அப்படிப்பட்ட யுத்தராணுவக்கூட்டத்தைப்பார்த்து பயந்து அந்த அளவிறந்த சேனைகளுக்கு விருந்தளிக்க வேணுமென்று பிரமித்தார். இராஜா தவிர பத்தாயிரம் படைவீரர்

இருந்தார்கள். கடைசியில் வசிஷ்டரானவர், தமக்கு பிரமாகொடுத்திருந்த பசுவைநோக்கி ஸ்தலப் பிரார்த்தனைசெய்தார். அது உடனேவந்து இராஜனுக்கும் அவருடைய படைவீரருக்கும் சப்பிரமமாக வேண்டியவையாவும் பராமரித்தது. அவர்களெல்லாம் உண்டபின்பு அந்திப்பொழுதாயிற்று. அரசனுடைய மந்திரிகள் அரசனுக்குச் சொன்னதாவது ஒருவனுந்திரத்தில் பனை ஓலைகள் போட்ட ஒரு குடிசையிலிருக்கிற இந்த முனிவர் இவ்வண்ணமான உணவளிக்க இவருக்கு எப்படி சக்தியுண்டாயிற்றென்றார்கள். அரசன் சொன்னது ஆ! அவர் ஒரு பிராமணன் அவர் ஒரு முனிசிரேஷ்டர், அவராலாகாததொன்றுண்டா? அவரிஷ்டத்தின்படி ஒன்றை சிருஷ்டிக்கவும் அழிக்கவும் வல்லவரென்றார்.

ஆகிலும் அவனுடைய மந்திரிகள் இந்த முனிவருக்கு இப்படிப்பட்ட விருந்தளிக்க யாதொரு முகாந்திரமிருக்க வேண்டுமென்று தங்களுக்குள்ள அநுமானத்தை தெரிவித்தார்கள். கடைசியில் அரசன்போய் பாருங்கள் என்றுவிடை கொடுத்தான். அவர்கள்போய் ஒருபசுதவிர வேறொன்றுங் காணவில்லை. அது வெகு நேத்தியான பசுவாயிருந்தது, அவர்கள் அந்தப் பசுவை அம்முனிவரிட மிருந்து பெறுதற்கு வகைதேடும்படி அரசனைவினவ, அரசன் கூடாதென்று தடுத்தும் கடைசியில் அவர்களுடைய போதனைக் கிணங்கினான். அவர்கள் அம்முனியிடத்திற்கேகி அரசன் பேரால் நீர் உமது பசுவைத்தந்தால் அதற்குப்பதில் ஓராயிரம் கறவை பசுமாடுகளைத் தருகிறோமென்று சொன்னார்கள். அந்த முனிசிரேஷ்டர் சொன்னதாவது இந்தப்பசு பிரமாவினுடைய சொத்தாகையால் கொடுக்கக்கூடாது என்றார். பதினாயிரம் பசுக்கள் தருகிறோம் அதோடு ஆயிரம் கிராமமும் கொடுக்கிறோமென்றார்கள். அவர் அதையும் தடுத்து விட்டார். வேண்டுமானால் பசுக்கள் கிராமங்களுடன் ஆயிரம் கனிதரும் விருட்சங்களும் தருகிறோமென்றார்கள். அதற்கும் அம்முனி சிரேஷ்டர் இணங்கவில்லை. கடைசியில் அரசன் தனது இராச்சியத்தில் பாதிராச்சியம் தருகிறேனென்றான். அதற்கும் இணங்கவில்லை. அதன்மேல் அரசனுக்கு கோபமுண்டாகி தனது சேனைகளைப்பார்த்து அந்தப்பசுவை பலத்காரமாய் பிடித்து கட்டிக்கொண்டு வரும்படி உத்திரவுசெய்தான், அவர்களந்தப்படியே பசுவைக்கட்டபோனார்கள். பசுவானது முனிசிரேஷ்டருடைய விருந்தினருக்கு வேண்டியவைகளை பராமரிப்பதில் போதுமானவைகளைச் சரபரா செய்யாத குற்றம் உண்டாயிருப்பதாக அந்த முனிசிரேஷ்டர் நினைத்து தன்னை அரசனுக்குக் கொடுத்துவிட்டதாய் நினைத்துக்கொண்டு அதைக்குறித்து அவரிடஞ்சென்று கேட்போமென்று தீர்மானித்தது. ஆகையால் எல்லா கயிறுகளையும் அறுத்து உதறிப்போட்டுத் தன்னைக் கட்டவந்த பேர்களையுங் கொன்றுபோட்டு முனிவரிடஞ்சென்று என்னைநீர் கொடுத்துவிட்டீரா வென்று வினவ, நான் கொடுக்கவில்லையென்று அவர் விடைபகர, பசு ஆனால் அரசனே என்னை பலத்காரமாய் கட்டிவர உத்தரவளித்தமையால் அரசனோடு யுத்தஞ்செய்ய வேண்டியதென்னும் இராணுவங்களைத் தான் கொண்டுவந்து கொடுப்பதாகவும் முனிசிரேஷ்

டருக்கு சொல்லிற்று. ஆகிலும் அரசனுடைய இராணுவ பசுவினல் உண்டாக்கிய யுத்தவீரர்களை யெல்லாம் அழித்துவிட்டது அதனல் பசுவானது பிரமாவிடத்திற்குப்போய் அரசனுடைய இராணுவ முனிசிரேஷ்டரை எதிர்த்து உத்தஞ்செய்யத் தலைப்பட்டது. ஆனல் அம்முனிவர் தமது கரத்தில் பிடித்திருந்த பிரம தண்டாயுத வல்லமையால் எதிர்த்து வந்தபேரை யெல்லாம் தாக்கினர். அந்த பிரம தண்டமானது எல்லா அஸ்திரங்களையும் பிடித்து அவர்கள் மீதே பிரயோகித்தது. முனிசிரேஷ்டரானவர் அரசனுடைய இராணுவத்தை எதிர்த்து முறியடித்து •சிலரைக்கொன்று மற்றவரை ஓடிப்போகச்செய்தார். அதன்மேல் விஸ்வாமித்திரனகிய அரசன் யோசித்து முனிசிரேஷ்டருடைய வல்லமைகளை அத்தியந்தமாய் வியப்புற்று அந்த முனிசிரேஷ்டரைவெல்ல வேண்டுமென்றெண்ணி தவஞ்செய்ய வேகினன். வெகுகாலம் கடுந்தபசுகள் செய்தபின்பு, பிரமாவானவர் பிரசன்னமாகி உனக்கென்ன வேண்டுமெனக் கேட்டார். அதற்கு அரசன் எல்லாமனிதரையும் எளிதில் விணங்கச்செய்யும்படியான பிரமா அஸ்திரம் என்கிற யுத்தாயுதம் வேண்டுமெனக் கேட்டார். பிரமாவானவர் இந்த பிரமாஸ்திரந் தவிர மற்ற இதர அஸ்திரங்களெல்லாம் தந்தனர். இவ்வளவோடு அவ்வரசன் சென்று முனியோடு யுத்தஞ்செய்தனன். ஆனல் வெற்றிபெறவில்லை, மறுபடியும் இராஜஞ்போய் கடூர தவசுசெய்தான். பிரம்மா பிரசன்னமாய் உனக்கு என்னவேணுமென்று கேட்டார். அரசன் பிரமாஸ்திரம் வேணுமென்றுன் கடைசியாக பிரமாஸ்திரத்தை அவனுக்கு அளித்தார். இந்த அஸ்திரத்தை எடுத்துக்கொண்டு விசுவாமித்திரன் முனிசிரேஷ்டரிடத்திற்குவந்து அவர் சந்தியாவந்தனத்துக்குப்போகிற சமயத்தில் சண்டைக்கு வாருமென்று அழைத்தான். முனியானவர் சந்தியாவந்தனம் செய்கிறவரைக்கும் காத்திருவென்றுர். இதற்கு இராஜன் சம்மதிக்கவில்லை அதனல் முனியானவர் தமது பிரதம தண்டத்தை நிலத்தில் நாட்டிவிட்டு சந்தியாவந்தனத்திற்கேகினர். இராஜன் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டான். இராஜனுடைய பிரம்மாஸ்திரமும் முனியினுடைய பிரமதண்டமும் பயங்கரமான யுத்தஞ்செய்ததுகள். ஆனல் முனியினுடைய பிரம்மதண்டமே வெற்றிபெற்றது. இதனல் விஸ்வாமித்திரன் மிகவும் முறியடிக்கப்பட்டு ஆச்சரியமடைந்து இத்தனை தபசுகளும் பத்தாயிரம்படைவீரர் இருந்தும் இச்சிறிய பிராமணனை வெற்றிபெறச் சக்தியில்லாமற் போனதில் மற்ற எல்லாபிரயத்தனங்களும் வீணென்றும் சகலமும் பிராம்மணருடைய ஆதீனமே என்றும் யோசித்து தான் பிராமணனுகவேணுமென்று தீர்மானித்து இதற்காக பிரம்மாவைநோக்கி கடுந்தவசுசெய்தான். அப்போது பிரம்மாவந்து என்ன வேணுமென்று கேட்டார் அதற்கு அரசன்தான் பிராமணனுக வேணுமென்று பிரார்த்தித்தான். அப்போது பிரம்மாவானவர் அவனுக்கு சொன்னதாவது பிராமணர்கள் உலகத்திற்கு மகத்துவமுள்ள ஆசாரிகளாக இருக்கிறுர்கள். பிராமணன் ஆகிறது அத்தனை எளிதல்லவென்றும் இதைவிட வேறேயேதாகிலும் கேட்டுக்கொள்ளுமென்று ஆக்கியாபித்தனர். இந்தவரம் எனக்கு நீர் கொடுககாவிடில் நான் மறுபடியும் தபசுக்கு போகிறேன் என்று அரசன் பதிலுரைத்துவிட்டு மறுபடியும் அகோர தபசுசெய்தான். நாலுதிக்கிலும் அக்கினியை வளர்த்திக்கொண்டு உக்கிரமான வெய்யலில் நின்றும் குளிர்காலத்தில் ஜலத்தில் நின்றும், மழைகாலத்தில் மழையிலிருந்தும் இன்னம் ஆயிரம் வருஷங்கள் ஆகாரமில்லாமல் தபசு செய்தான். பிரம்மாவானவர் அவருடைய தபோபலத்தால்மறுபடியும் வந்து உனக்கென்ன வேணுமென்று கேட்டார் அரசன் மறுபடியும் முன

போலவே பிராமணனாக வேணுமென்று வினவ அந்த வரம் கொடுக்கமாட்டேனென்று போய்விட்டார். (இன்னும்வரும்.) சி. ம. இரா மு.

சீர்திருத்தம் அவசியமா?

சீர்திருத்தமென்றாலும், நாகரீக மென்றாலும் ஒன்றே. இது நம்மவர்களுக்கு அவசியமா? என்று விசாரிப்போம் இது மெத்த அவசியமானதென்று யார்தான் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஓர் தேசமாவது, சாதியாவது ஓர்சங்கமாவது நாகரீகமடைய விரும்பினால் அவர்களே இம்மையில் சீரும் செம்மையும் புகழும், மறுமையில் பேரின்சுகமும் பெற்று வாழ்வார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகாலவகையினானே" என்ற பவணந்திமுனிவர் மொழிப்படி பழைய ஆசாரங்களைத் தவிர்த்தும் புதிய வழிக்கங்களை அனுசரித்தும், வருதலும் நியாயமேயாம். என்னில பண்டையகால வழக்கங்களநேகமிருந்தன. அவற்றுள் பெரும்பாலும்நன்மையானவைகளேயாயினும் சிற்சில காரியாதிகளால் தள்ளத்தகுந்தனவா யிருந்ததுபற்றி பின்காலத்துள்ள அறிஞர்கள் அவைகளை நிராகரித்தார்கள். அவ்வாறு நிராகரித்தது ஒருபோதும் குற்றமாகக் காணப்படாது. இதைமுயற்சிக்குக் கொண்டுவரவேண்டுமென நினைக்கிற நல்லவர்கள் உலகசரித்திரத்தை வாசித்தால் பண்டைய தற்காலத்துமுள்ள சீர்திருத்தவிஷயங்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். அதுவிளங்க சிலதைமாத்திரம் கூறுவாம். தற்காலம் உலகத்தின் பெரும்பாகங்களை ஆளும் ஆங்கிலேயர்கள் ஆதியிலே சீர்திருத்தமில்லாது எல்லாவிஷயங்களுக்கும் அநாகரீகிகளாயிருந்தார்களென்பதும் சிலவகுப்பார் மனிதர்களையே தின்னும் பழக்கத்திலிருந்தார்களென்றும், சிலஜாதியார் உடுப்பும், சுவர்ணையு மில்லாதிருந்தார்களென்றும், இந்தியாவிலும் உடன்கட்டை ஏறுதல் முதலிய பற்பல அநாசாரப் பழக்கங்களுடைத்தாயிருந்தார்களென்றும் சரித்திரங்கள் சமுத்திரம்போன்று ஆரவாரிக்கிறது. உலகசரித்திரங்களைப்படித்த அன்பர்கள் பகத்துவேஷம்பாராட்டமாட்டார்கள் தங்கள் கச்சியே பெரிதென சாதித்து நிந்தைக்காளாக மாட்டார்கள்.

நடைநொடி பாவனைகளில் அவ்வாறு மாறுதலடைந்து சீர்திருத்தம் பெற்றுள்ளார் அநேக ஆயிரப்பேர்கள். இவர்கள் உண்பன உடுப்பன முதலிய விஷங்களில் மாறுதலடைந்தார்களே யல்லது, தங்களுக்கு வேண்டிய அதிமுக்கியமானவைகளில் ஒருபோதும் மாறுதலடையவேயில்லை. நல்விதமான மாறுதலடைந்து நடைபெறுவதின்மையானால் முதலாவது இந்த தேசத்தார்களுக்கு ஒற்றுமையென்ப திருக்கவேண்டும். இந்த ஒற்றுமையின்மையால் இந்தியா நாளுக்குநாள் தாழ்வடைகிறது. அவ்வாறு தாழ்வடையாதிருக்க இந்தியர்கள் ஜாதிபேதமென்னும் பெரும் அழுக்குமூட்டையை அவிழ்த்து உதறவேண்டியது. இந்தியர்கள் ஒரே குடும்பத்தவர்களென்றும் ஆதியிலே பெர்சியாதேசத்திலிருந்து இந்தியாவில் குடியேறிய பிராமணர்களால் அந்த காலத்தரசரையயக்கஞ்செய்துஜாதிபேதமுண்டாக்கி அநாகரீகத்தத்துவத்திற்கு வழியுண்டாக்கி வைத்தார்கள். இப்பார்ப்பாருடையமொழிகளால் மயங்கி அரசர்களும் அநாகரீகமான வழிகளில் நடந்து ஜாதிவித்தியாசங் காட்டிவந்தார்கள். அதற்குத் திருஷ்டாந்திரமாக மநுசக்ரவர்த்தி எழுதிய தர்மசாத்திரத்தின்படி நடக்கவேண்டியதா யிருக்க தற்காலம் யார் அதன்படி நடக்கிறார்கள்? ஒருவருமில்லையே. மற்ற வகுப்பார் நடக்காவிட்டாலும் தங்களை உயர்ந்தோர்களென்று சொல்லிக் கொள்ளும் பாப்பார்களுக்கு உரிமையாகிய, ஓதல், ஓதுவித்தல், ஈதல், இரத்தல் யாகஞ்செய்தல்,

யாகஞ்செய்வித்தல் ஆகிய ஆறுதொழில்களை யன்றி வேறு எத்தொழிலையும் செய்யப்படாது என்னும் கட்டளையிருக்க அதன்படி நடக்கிறார்களா? அந்தோபாபம் புலையனும் செய்ய அஞ்சும்படியான தொழில்களை அவ்வகுப்பார் யோக்கிதையின்றிசெய்கிறார்களே. இவ்வாறு செய்தும் ஏனையோரிடத்தில் அபூதகற்பனைகாட்டி ஜாதிபேதம் பாராட்டுகிறது பரிதாபம். இத்தகையான ஜாதிபேதங்களை யொழித்து ஒற்றுமையிலும் தேசாபிமானமானவொற்றுமைப்பாராட்டி வருவார்களானால் இந்தியாசுக மடைந்து நமக்கும் நாளுக்குநாள் சீர்திருத்தம் அதிகரிக்கும். ஒற்றுமை யில்லாவிட்டால் சீர்திருத்தம் ஓங்காது. வேற்றுமை யென்னும் களையானது ஒற்றுமை யென்னும் பயிரையழித்துவிடாது காத்தலத்தி யாவசியம். இவ்வாறு சீர்திருத்த மவசியமானதாகையால் மதபேதங்களையும் நாளுக்குநாள் ஒழிக்கவேண்டியது நன்குணர்ந்தவர்களும் சற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒருபோதும் 'மதத்துவேஷம் செய்யமாட்டார்கள். சாமானியர்தான் மதங்களைத் தூஷிப்பார்கள். இந்தியர்களாகிய யாம் ஒவ்வொருவரும் மதத்துவேஷமின்றி தேசாபிமானமுடைத்து ஒற்றுமையாய் வாழ்வோமேயானால் இந்தியா வேற்று அரசரால் ஆளப்படுமா? ஆகாதே. இவ்வாறு வேற்று அரசர்களால் ஆளப்படுவதுநன்மைக்கு ஓர்வித பாதையாயிருந்தாலும் அதாவது ஆங்கிலேய அரசாட்சியில் நம்மவர்களுக்குப் பெரும்பாலும் நன்மையே யிருந்தாலும் தேசாபிமானத்திற்குச்சற்றுமுரண்பட்டதாகவே யிருக்கிறது. என்பதுவிஷயவுணர்ச்சியுள்ளாருக்கு விளங்கும். ஆகையால் யாம் சதா ஒற்றுமையுள்ளவர்களா யிருக்கவேண்டும். அவ்வாறிருந்தால் சீர்திருத்தம் தானே உண்டாகும். சீர்திருத்தமில்லாத தேசமும் குடியும், குடும்பமும், சங்கங்களும் ஓர்போதும் பிரகாசியாது. எந்த மனுஷன் சீர்திருத்தத்தைத் தேடமாட்டான். எந்த குழந்தை சீர்திருத்தமாகும் நாகரீகத்தை இந்தகாலத்தில் பாராட்டாது. மேற்சொன்னபடி, உண்பன உடுப்பனவைகளில் மாறுபாடு காட்டி சீர்திருத்தத்தை வளர்ப்பதுபோல் அநாச்சார வழக்கங்களைத் தள்ளி ஆச்சாரங்களைக் கைப்பற்றி யாவும் இந்தியர்களென்னும் ஒற்றுமையைப் பெரிதுவந்து வீணாக மேலுக்கு மாத்திரம் ஜாதிஜாதியென்று வீதிகடோறும் ஓதி பீதிப்பட்டு ஆநாதியாகாமல் நீதியாக மேதினியில் ஆதிமொழிப்படி நடப்போமாகில் ஒற்றுமையின் பெருக்கத்தால் சீர்திருத்தம் தானேயுண்டாகி நன்மை பயக்கும் என்பதற்கையமென்னையோ? இல்லையே. சீர்திருத்த மற்றோரையாரும் நாடார். உறவினரும் தங்களுறவினர்களென்று சொல்லிக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் சீர்திருத்தம் அதிமுக்கியமானதேயாம்.

பத்—ர்.

கடிதங்கள்.

யாரையா படாடோபக்காரர்?

தம்மிடத்திற் பெருஞ்செயல்கள் கிஞ்சித்தும் அமையப்பெறாதிருந்தும் அப்பெருஞ் செயல்கள் தம்மிடத்திற் பொருந்தியிருப்பதாக உடைமுதலியவற்றால் மயக்குந் தன்மைக்கே படாடோபமென்றும், அவ்விதசெயல்களைப் பொருந்தியவர்களே படாடோபக்கார ரென்றுஞ்சொல்லப்படுவது வழக்கம். இவ்விடத்தில் எந்த செயலைமுன்னிட்டு இவ்விஷயத்தை யெடுத்துக்கொள்ளப்பட்டதெனின்? கல்வியை முன்னிட்டே. அங்ஙனமாயின் கல்வியுள்ளவர்களெல்லாம், அல்லது கல்வியில்லாதவர்களெல்லாம் படாடோபக்காரர்கள் தானோவெனின்? அங்ஙனமின்று. கல்வியில்லார் அஃதுள்ளவர்களைப் போன்று நடிக்குந் தன்மைக்கே படாடோபமென்றும், அப்படி நடிப்பவர்

களே படாடோபக்காரர்களென்றுங்கூறப்படுவார்கள். கல்வியிருந்து அதன் வழியாகப் பிரசித்திப்பெற்று வருகிற ஒருவனைச் சார்ந்த மற்றொருவன் கல்வியில்லாதவனைப்பார்த்து அவனுக்கு அதுதெரியாது, இதுதெரியாது, பூர்ணமான ஞானங்கிடையாது. இலௌகிகஞானங் கிடையாது, கல்விகிடையாது, இலக்கணந் தெரியாது. கவிபாடத்தெரியாது, பிரசங்கிக்கத்தெரியாது என பலவாறு தூஷிக்கத்துணிகிறான். வாஸ்தவமாகக் கல்வியறிவு அற்று எளியாரைமயக்கி. பலவித அபிநயங்காட்டி தமக்குத்தாமே பட்டப்பெயர்களைவகித்துத் திரிகிற ஒருவனைச்சேர்ந்த மற்றொருவன் உண்மையாகப் படித்து நாளுங் கல்விக்கென்றே உழைக்கிற ஒருவனைப்பார்த்து அவனுக்கு அது தெரியாது படாடோபக்காரன், கல்வியில்லாதவன் எம்மவர் முன்பு அவன் நிற்பானு என்பதாகத் தூஷித்துத்துதிக்கிறான். இவர்கள் இருதிறத்தாருமே யொருவறை யொருவர் படாடோபக்காரன் என்று சொல்லிக்கொண்டால் [illegible]ருள்ள நம்போன்றவர்கள் யாரை படாடோபக்காரன் என்று சொல்லு?

ஆகவே கல்வியின் சம்பந்தமாக சிலவிஷயங்களைப் பொருத்திப் பார்ப்போம். தமிழிற் கவிபாடவல்லவர்களையே நாம் வித்துவான்களென்றும், புலவர்களென்றும், நாவலர்களென்றும், பாவலர்களென்றும் பலபெயர்களிட்டழைக்கிறோம். இதினுள் தமிழை இயல், இசை, நாடகமென மூன்றுவிதமாகவும், கவியை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நான்குவிதமாகவும் பிரித்துள்ளார்கள். இவைகளுள் எதையுஞ் சாராது "அருட்கவி" என்பதுபோலொத்த பட்டப்பெயர்களைச் சூட்டிக்கொண்டிருப்பவர்கள் படாடோபக்காரர்களா? அல்லது மேற்குறித்தபடி தமிழ்ப்புலமைக்குரிய வைகளிலேதேனும் ஒன்றை அதாவது "ஆசுகவி" "மதுரகவி" என்பவைகளைப் போன்றுபொருத்தமானபெயர்களைப் பிறராலிடப்பெற்று அதற்குத்தகுந்த வண்ணம் பாடுபவர்கள் படாடோபக்காரர்களா? தாம் முன்பு ஒரு ஆசிரியரிடத்திற் சிலதைக் கற்றுக்கொண்டு அவ்வாசிரியருக்குத் தாம் பிரதமாணுக்கரென்று அச்சுரூபமாக வெளிப்படுத்திப் பிறகு தாம் யாரிடத்திலும் படித்துக்கொண்டதில்லை யென்றும், சாக்ஷாத் கடவுளின் அருளாலேயே பாடவந்ததாகவும் படிப்பில்லாப் பாமரரைமயக்கும் போலியர்கள் படாடோபக்காரர்களா? அங்ஙனமின்றி நல்லாசிரியரையடுத்து அன்னவர்க்கு நாளுந்தொண்டுசெய்து கற்கவேண்டியவைகளைக் கற்று கற்ற அளவில் தம்போன்று பிறரையும் முன்னுக்குக் கொண்டுவரப் பல பிரயாசைகளை யெடுத்துக்கொள்பவர்கள் படாடோபக்காரர்களா? தமிழ்ப்பாட வெளிவருவோர் ஆய்ந்தறியவேண்டிய அதிமுக்கியமான இலக்கணங்கள் ஐந்து. அவற்றுள் பள்ளிச்சிறுவர்களும் எளிதிலுணருமாறு முதலிலேயே முன்னோர்கள் வகுத்துவைத்தது எழுத்திலக்கணம். இதனுள்ளமைந்த சந்தி, புணர்ச்சிமுதலியவைகளைப் பற்றி பள்ளியில் வாசிக்கும் பிள்ளைகளிடத்திலும் போய் (தியான×இலம்பகம்) இது எப்படிப்புணரும் என்று கேட்டால் தியானேலம்பகம் என்றாகும் என்பார்கள். எப்படி? என பின்னும் வற்புறுத்துவோமானால் அ, ஆவின்பின் இ, ஈ வந்தால் இரண்டுங்கெட்டு ஏதோன்றும் என்பது குணசந்தியாகையால் 'தியான' என்னும் நிலைமொழியின் கடையெழுத்தாகிய னகரத்திலுள்ள அவும், 'இலம்பகம்' என்னும் வருமொழியின் முதலெழுத்தாகிய இயும் சேர தியானேலம்பகம் என்றாயது என்பார்கள். பின்னும்; இதற்கு உதாரணமாக ஏதாவது இப்படி பிரயோக முண்டாவென்று கேட்டால் நர+இந்திரன்=நரேந்திரன் என்றாயது தெரியாதா என்றும் பதில் சொல்லுவார்கள். இப்படியிருக்க தியான யிலம்பகம் என்று எழுதுகிறவர்கள் படாடோ

பக்காரர்களா? அல்லது செய்யவேண்டியவைகளை யவ்வவ்விதமாகச்செய்து பலரும் புகழுகிற்பவர்கள் படாடோபக்காரர்களா? அடையாறு அடுத்த என்று எழுதவேண்டியதைப் புணர்ச்சியாக்கி யெழுதவேண்டுமாயின் (அடையாறு + அடுத்த) அடையாற்றை யடுத்த என்றெழுதவேண்டியதிருக்க அடையாரடுத்த ஊரூர் என்று றகரபேதங்களுந் தெரியாது இடையினரகரம் போட்டு எழுதுபவர்கள் படாடோபக்காரர்களா? அல்லது அங்ஙனஞ் செய்யாதவர்கள் படாடோபக்காரர்களா? ஆறுமுகம் என்றெழுதவேண்டியவிடத்தில் கேவலம் ஆருமுகம் எனறிடையின ரகரத்தைநாட்டி யெழுதுபவர்கள் படாடோபக்காரர்களா? அன்றி சரிவர எழுதுகிறவர்கள் படாடோபக்காரர்களா? சிரவணம் எனும் வார்த்தையின் பொருளின்னதென்றுணராது, ஐயா! அவர்கட்கு சிரவணம் என்று எழுதுகிறவர்களா? அங்ஙனமின்றி அதன் பொருளின்னதென்று அதையுபயோகிக்கவேண்டிய இடமின்னதென்று முணர்ந்து தகுந்தவழியி லெழுதுகிறவர்கள் படாடோபக்காரர்களா? புராண இதிகாசம் என்பதைப் புராணவிதிகாசம் எனச்சந்தி தெரியாது எழுதுகிறவர்கள் படாடோபக்காரர்களா? அன்றி புராணேதிகாசம் என குணசந்திதெரிந்து எழுதுகிறவர்கள் படாடோபக்காரர்களா? இப்படியெல்லாக் கல்வியின் எழுத்திலக்கணமேனு முணராதிருந்துந் தம்மைத் தாமே நாவலரென்றும், படித்தவரென்றுஞ் சொல்லி யெளியாரை மயக்குபவர்கள் படாடோபக்காரர்களா? அன்றி தாங்கற்ற வளவிலிருந்து தம்மினத்தவரையுந் தம்போலாக்க வேண்டுமென ஜனோபகாரமாய்ப பல [illegible]ரங்களையும், நூல்களையும், வெளியிடுபவர்கள் படாடோபக்காரர்களா!

(இன்னும் வரும்.) பி. இரா. முதலியார்.

ஓர் வேதாந்தியின் மதிமயக்கு.

"சத்தியவேதம் மெய்ஞ்ஞானப்போதம்" என்பது அ[illegible] களின் கருத்து. மதிதெருட்டுங் கிறிஸ்து மார்க்க சத்தியவேத நூலையும் [illegible] தாந்த பாடியங்களையும், செவ்வனே படித்துணராத ஓர் வேதாந்தி கடந்த மே 21-ந்தேதி வெளியான "பூலோகவியாசு"னில், "கிறிஸ்தவர்கள் இந்துக்களை அஞ்ஞானிகளெனக் கூறுவது ஞாயமா?" என, மகுடம் வைத்ததன்கீழ் மதிமயக்குற்றறிய நியாயமில்லா பலவாக்கியக்குவியலைக்கண்டு, (இவர்) எழுதிய விஷயங்களியாவையும் சற்றுப் பரியாலோசித்துப் பார்க்கின், தாமெடுத்த நோக்கத்திற் கவைதக்கவாறின்றே! கிறிஸ்தவர்கள் இந்துக்களை அஞ்ஞானிகளெனக் கூறுவது யாதினாலென்பதை இவர் இன்னுந் தெரிந்து கொள்ளவில்லை. தமக்கு அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற அபிலாசை யிருக்கின், சற்றறிந்த கிறிஸ்தவர்பால் கேட்டுத் தெளியலாமே! அங்ஙனமின்றி, தமது குருட்டு யுக்திக் கிணங்கிப் பிறரை மருட்டவந்தது பேதமையன்றோ! கிறிஸ்தவர்கள் இந்துக்களை அஞ்ஞானிகளெனக் கூறுவது நியாயமா? வென்ற சாவியவர் அதற்கு நியாயஞ் சொல்லவேண்டும். கிறிஸ்தவர்கள் சொல்லுகிறபடி, இந்துக்கள் அஞ்ஞானிகளல்ல வென்பதை நியாயங்காட்டி மறுக்கவேண்டும். இவ்விருவிதத்திறமையும் இவரிடத்தி லின்மையால், ஒன்றைவிட்டு வேறொன்றைப் பற்றிப் பிடிக்கும் கிருமிபோல், தானெடுத்த விஷயத்தை மெல்லென நழுகவிட்டு—"உலகியல்பு, உயிரிலக்கணம், இறைவன்றன்மை, பந்தசொரூபம், மோக்ஷநிலை யென்பவற்றுள் ஒன்றனியல்பேனும் யுக்திக்கிணங்கக்கூறாது, வெறுங் கதைகளையே குருட்டுத்தனமாய்க் கூறும் மதங்களுள் கிறிஸ்துவ மதமு மொன்று மென்பது அம்மதத்தினது சத்தி

யவேதமென்றுகூறும் பைபிளென்னும் புத்தகத்தைச் சிறிதுான்றிப் படித்தாற் செவ்வனேவிளங்கும்.” என, பைபிளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

இவர் நியாயத்தைச் சற்றுவிசாரிப்பாம். 'மதங்களுள்' என்றதால், நம், பாரதகண்டமாகிய இந்தியாவில், பல மதங்கள் உள்ளனவாக வேற்படுகின்றன. படவே, அப்பலமதங்களுக்குள் இவர் எம்மதத்திற் கட்டுப்பட்டவர்? அற்றேல், அம்மதங்களுக்கு வேறுபட்டவரா? ஆமெனில், இவர் அனுசரிக்கும் மதம் குருடுநீங்கிய மதமாயிருக்க வேண்டும். அதுவே இந்துமதமெனின், 'இந்து' என்பவன் யாவன்? அவன் போதித்த தென்னை? இந்துமத பௌராணிகர் குருடு எக்காலத்தில் யாரால் நீங்கிற்று?

தம்மை 'வேதாந்தி' யெனக் குறிப்பாற்காட்டிக் கைசாத்திட்டெழுதிய நண்பர், வேதத்தின்முடிவை நன்குணர்ந்தவ ரென்பது தெற்றென விளங்கும். வேத அறிவு இவரில் இலங்குவதால், இவரை வேதாந்த போதகரென்றே சொல்லலாம்! இருக்கு, சாமம், யதர்வணம், யஜுர் இந்நான்கு வேதங்களையும் இவர் வாசித்திருப்பதால், உலகியல்பு, உயிரிலக்கணம், இறைவன்றன்மை, பந்தசொரூபம், மோக்ஷநிலை இத்யாதி விஷயங்கள் அவ்வேதங்களில் யுக்திக்கிசையக் கூறியிருக்கின்றனவா? அங்ஙனமிருக்குமேயானல், தயைகூர்ந்து இன்னின்ன விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற தென்பதைத் தொகுத்து வகுத்தக்காட்டுதல் கடனும். அங்ஙனம் காட்டும்போது அவைகள் எவ்வளவு தூரம் யுக்திக் கிசையுமோ, இசையாதோ வென்பதைப் பின்னர் அறிந்து கொள்ளலாம்.

கிறிஸ்து மார்க்கம் உலகியல்பு முதலிய வைந்து விஷயங்களை யுக்திக்கிணங்கக் கூறவில்லையென்றும், வெறுங்கதைகளைக் குருட்டுத் தனமாய்க் கூறுகிற தென்றும், பைபிளைச் சிறிதூன்றிப் படித்தால் விளங்குமெனச் சொல்லவந்தார். இப்படிச்சொல்ல வந்தவர் உலகியல்பு முதலிய ஐந்தின் இலக்கணங்களை முந்தி, விளங்க நாட்டினரில்லை. கிறிஸ்துமார்க்கங் கூறும் உலகம், உயிர், இறைவன், பந்தம், மோக்ஷநிலைமுதலிய இலக்கணங்கள் எப்படி யுக்திக்கிணங்கவில்லை யென்பதை நியாயஞ் சொல்லிக் காட்டினரில்லை. இங்ஙனமாக ஒன்றை நிலைநாட்டவும் வேறொன்றைமறுக்கவும் வல்லமையற்றவர் கண்மூடிதனமாய் சத்தியவேத மெய்ந்நூலாகிய பைபிளை அதின் சரித்திர உண்மைக்கு மாறாய் குருட்டுத்தனமாய்க் கூறும் வெறுங்கதைக ளென்றது நிராக்ஷ பழக்குலையைக் கண்டு அது தனக்கெட்டாமையால், சீச்சீ! சீ! புளிப்புள்ள வஸ்துவன்றோ? என்ற சம்புவின் செய்கையை யொக்குமன்றோ? 'பைபிளைச் சிறிதூன்றிப் படித்தால் விளங்கு' மென்றார். பைபில் படிப்பினை சாமான்யமன்று. அதில் உதகரிக்கப்பட்டுள்ள பொருள்கள் ஆழியின்கண் கிடக்கும் மணிகள் போலாம். இப்பரிசினைப் பெற்ற அவ்வரியநூல் இவருக்கும் அதையூன்றி வாசிப்பவருக்கும் குருட்டுக் கதைகளை விளக்குமென்பதை யெவ்விதங்கண்டு பிடித்தார்? "ஒருகுறி கேட்போ னிருகாற்கேட்பின் பெருக நூலிற் பிழைபாடிலனே—முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்" என்ற நன்னூலார் வாக்கின்படி, தக்க ஆசாரியனை யடுத்து ஒருநூலை மும்முறை பாடங்கேட்பவனுக்கே அந்நூலின் கருத்து விளங்குமென்பதால், இவர் எத்தனைத் தடவை யாரை ஆசிரியனாய்க்கொண்டு பைபிளைப் படித்தனரோ தெரிந்திலேம். அங்ஙனம் படித்திருப்பரேல், இவர் குருட்டுக் கதைகளென மயங்கிய வமயத்து இவரது மயக்கொழிந் திருக்குமே! காமாலை கண்ணனுக்குக் கதிரொளி மஞ்சளாய்த்தோற்றுவதைப் போன்று பைபிளின் பல பாகங்களிற் சொல்லப்பட்டுள்ள உண்மை சரித்திரங்கள் இவர் புந்திக்குக் குருடாய், நீசமாய், துவேஷமாய்க் காணப்பட்டமை இவர் மந்தமதியின் மதிமயக்கேயன்றி வேறல்ல.

'குருட்டுத்தனமாய்க் கூறும் மதங்களுள் கிறிஸ்துவ மதமு மொன்றும்' என்றார். இதனால் இவர் உலகின்கண் ணுளவாகிய பல மதங்களையும் நன்காராய்ந்தவராகக் காணப்படுகின்றார். தன்னாராச்சியை விருதாகக் கொண்டு வெளிவருவதில் தம்பி சண்டப்பிரசண்டனே! சொல்லுவ தெளிது சொல்லியவண்ணம் செய்வதரிது. கண் குருடானாலும் நித்திரைக்குக் குறைவில்லை யென்பதற் கொக்க, குருட்டுத்தனமாய்க் கூறும் மதங்களிலிருந்து கிறிஸ்து மதத்தை மட்டும் பொறுக்கி யெடுத்து 'ஒன்று' என்றுகணக்கிட்டார். கிறிஸ்துமதம் நீங்கலாக, ஏனைய குருட்டு மதங்களின் மொத்தத் தொகை யிவ்வளவென்றும் அவைகளில் ஒவ்வொரு மதத்தின் பெயர் தனித்தனி இன்னின்னதென்பதை யெழுதி, பிறகு, இன்னின்ன தன்மையால் அம்மதங்கள் குருடாகி தவிக்கின்றன வென்பதை விவரித்துக் காட்டாமல் விட்டு விட்டார். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்.

பாம்புக்கு மருந்துகேட்க தேளுக்கு மந்திரித்ததுபோல, எமது வேதாந்த அன்பர் எடுத்த விஷயத்தைப் பேசி முடிவு கட்டாமல் விட்டு விட்டார். ஆயினும், வெவ்வேறு வழிகளில் நுழைந்து தமது சக்தியின்மையை மறைக்கும்படி, கூத்தாடுங்காலா கோலத்தை யிங்கெடுத்துக் காட்டுகின்றோம். 'ஞானம்' என்றால் இன்னப்பொருள். 'அஞ்ஞானம்' என்றால் இன்னப்பொரு ளென்பதைச் சுருக்கமாய் எழுதிவிடலாம். இங்ஙனஞ்செய்வதற்குப் பதிலாய் "ஞானஞ்ஞான" மென்ற பதங்களின் பேரில், அவை,— பொருளா? குணமா? தொழிலா? கருத்துப்பொருளா? காட்சிப்பொருளா இயற்கைப் பொருளா? செயற்கைப்பொருளா? விகாரப்பொருளா? நிர்விகாரப்பொருளா? என, இன்னும் பலவித பொருத்தமில்லாக் கேள்விகளைக் கேட்டு விட்டார். இக்கேள்விகள் இவருக்கே தெரியாத தடுமாற்றக் கேள்விகளாகவு மிருக்கலாம்! ஞானஞ்ஞானம் இப்படிப்பட்டதென்று சொல்வதற்கு இத்தனைக் கேள்விகளா கேட்க வேண்டும். இஃது அறுக்கமாட்டாத வீரனுக்கு ஐம்பத்தெட்டு அரிவாள் என்பதை யொக்குமன்றோ!

கடவுளுக்குக் கைகால்க ளிருப்பதாகவும் அதனால் உடலிருக்க வேண்டுமென, மோசேமுனிவர் எழுதிய பஞ்சாகமத்தி லொன்றாகிய யாத்திராகமத்தை யுதாரணமாகக்காட்டினர். இதற்குந் தாமெடுத்த விஷயமாகிய "இந்துக்களை அஞ்ஞானிகளென்பது ஞாயமா?" என்பதற்கும் யாது சம்பந்தம்! ஒன்றுமில்லையே எட்டுணையேனும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமற் பேசுவதில் இவர் சமர்த்தரே! இனி, கடவுளை விட்டுத் திரிபதார்த்தங்களை யெடுத்துக்கொண்டார், வியாபக வியாப்பிய சம்பந்தமாய்ச் சில கேள்விகள் கேட்கவந்தனர். திரிபதார்த்த விலக்ஷணம் செவ்வனே தெரிந்தவர் போல் ஜாலங்காட்டித்தாமோர் நாஸ்திகனாயிருப்பதைக் கிஞ்சிற்றேனும் உணர்ந்து கொள்ளாமல், ஈசன்உண்டென்றுசொல்லும் ஆஸ்திகராகிய கிறிஸ்தவர்களைக் கடவுளே இல்லையென்று சொல்லுகிற நாஸ்திகராக்க முயன்றனர். ஆ! ஆ! இவர் மதிமயக்கே மதிமயக்கு!!

ஞானதீக்ஷண்.

சமாசாரக்கொத்து.

சென்னை:—காலநிலை வெய்யோன் கடுங்காச்சல். மப்புகள் திரண்டுமின்னியும் மழைபெய்தபாடில்லை, மேற்காத்தின் வரட்சியால் நோய்கள் காணப்படும்போலிருக்கிறது. காலவிலை அதிககுறைவு பஞ்சகாலத்திற்குச் சமமாக எல்லாப்பொருள்களும் கிராக்கியாகவே யிருக்கிறது.

கோலார் காலவியல்பு:—தற்போது மந்தார மிட்டுக்கொண்டு மாலை நேரங்களில் சிறுமழை பெய்கிறது. காற்று மதிகமடிக்கிறது கதிரோன் கண்ணை மூடுவதுந் திறப்பதுமா யிருக்கிறான் அகவிலை மிகவில்லையே!

சாம்பியன் ரீப்ஸ்:—2-வது சைனுட்டிரைவர் மாரி என்பவருடைய கோட்டு எஞ்சினில் மாட்டிக்கொண்டதால் மதுரையின் கைமுறிந்துவிட்டது அஜிஸ்டன்ட் சூப்ரன்ட் கூக் துரையவர்கள் 10-6-06-ல் கோலார் சாம்பியன் ரீப்ஸ் வந்து சேர்ந்தனர்.

திருட்டு:—சாம்பியன் ரீப்ஸ்டேஷனில் 14-6-06-ல் ஒருவன் போளூருக்கு டிக்கட் வாங்கிக்கொண்டிருக்கும்போது ஜேப்பிலிருந்த 10-அணுவை யாரோ அப்பிவிட்டார்கள். அன்றே ஒருமகம்மதிய ஸ்திரீயின் மூட்டையை மற்றோர் சுதேசஸ்திரீ எடுத்துக்கொண்டு போய்விட்டாள். மகம்மதிய ஸ்திரீக்கு ரயில் டிக்கட் கிடைக்காததே காரணம்.

அபாயம் நேர்ந்தது:—4-வதுமில் ஸ்டோன் பிரைக் அடியில் வண்டி தள்ளிக்கொண்டிருந்த ஒருவன்மேல் 40-அடி உயரத்திலிருந்து ஒரு டன் கனமுள்ள இரும்பு அறுந்துவிழுந்து தெய்வாதீனமாய் மரத்தின்மீதுமோதி மரமுறிந்து அவன் மீது விழுந்து மூக்கிலும் வாயிலும் ரத்தம் கக்கவும் ஆஸ்பத்திரிக்குகொண்டு போகப்பட்டிருக்கிறது பிழைப்ப தெப்படியோ வறியோம்.

ராஜீஸ் கேம்ப்:—ஒருவீட்டில் பிளாஸ்ட் மருந்துகளிருக்கக்கண்டு போலீசாரால் பிடிக்கப்பட்டு அந்தவீட்டு ஸ்திரீக்கு 3-மீ ஜெயிலாகிவிட்டது மருந்து திருடிக்கொண்டுவந்த ஆசாமி எங்கேயோ ஓடிவிட்டான்.

அடுத்த வருஷம் லார்ட்கிச்சனருக்குப் பதிலாக ஜெனரல் ஸர் ஜான்பிரென்ச் என்பவர் இந்தியாவின் சேனைத் தலைவராக நியமிக்கப்படுவாரென்று லண்டன் ஸ்டாண்டர்ட் பத்திரிகை கூறுகிறது:--சென்னை ராஜதானியில் சில ஜில்லாக்களை மாற்றுவதைப்பற்றி மிஸ்டர் டப்ளியூ. எஸ். மேயரும் மிஸ்டர் ஏ. ஜி. கார்டியூவும் அனுப்பிய ரிப்போர்ட்டுகளை இந்தியாக் கவர்ன்மெண்டார் தற்போது கவனித்து வருகின்றார்கள்.—சென்ற வியாழக்கிழமையன்று மாலை சுமார் ஏழுமணிக்கு ஸிம்லாவில் பூமியதிர்ச்சியுண்டாயிற்று.

இராயப்பேட்டை போஸ்டாபீஸ், 24௳ முதல் மூன்றுவது கிளாஸ் டெலிகிராப் ஆபீஸ் ஒன்று திறக்கப்படும்.—அபேதாநந்த சுவாமிகள்:—ஸ்ரீமத் அபேதாநந்த சுவாமிகள் அமேரிக்காவிலிருந்து பிரயாணமாகி 20-ஆந்தேதியன்று கொழும்புக்கு வருகிறார் என்றும் 24-ஆந் தேதிக்குள்ளாக மதுரையில் இருப்பாரென்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

சென்னையில் பிளேக் இல்லையென்று கவர்ன்மெண்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.—வருகிற 20-ஆந்தேதி வெள்ளிக்கிழமை சக்கிரவர்த்தி பிறந்தநாள் கொண்டாடப்படும். அன்று சகல ஆபீஸ்களுடன் மூடிவிடப்படும்.—சாதாரணமாக மாலை 6-45-மணிக்கு ஸென்டிரல் ஸ்டேஷனைவிட்டுச் செல்லும் வடமேற்கு மெயில் இனிமேல் இரவு 7-மணிக்குச் சென்னையைவிட்டுப் புறப்படும். இதுவரை வழக்கம்போல் அரக்கோணத்தில் தென்மேற்கு மெயில் சந்திப்பு கிடையாது போத்தனூர் பாஸஞ்ஜர் டிரெயின் இனிமேல் 6-45-மணிக்குப் பதிலாக காலை 7-40-மணிக்குப் புறப்படும். இவ்வாறாக வருகிற ஜூலைமாதம் முதல் தேதிமுதல் மாறுதல்கள் உண்டாகும்.

மதுரை கொலை:—மதுரைஜில்லாச் செஷன்ஸ் ஜட்ஜிக்குப் பூராகவேலை கொடுபட்டு வருகிறது. இந்த ஜில்லாவில் நாளுக்கு நாள் கொலை மிகுந்தே வருகிறது. இடியால் இறந்தனர்:—11-ஆந்தேதி பேரிடியுடன் பெய்த பெருமழையில் இருவர் மின்னல் தாக்கி இறந்துபோயினர் என்றி சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

உ

வேலுமயிலுந்துணை.

சென்னைத்திருமயிலையீச்சுரர்

சிங்காரக்கோவை.

இது,

சென்னை அடைக்கலபுரத்தின்கண் ஸ்தாபித்துள்ள

ஸ்ரீ கமலவிநாயகர் பஜனை சிற்சபையார்

அபீஷ்டப்படி,

சென்னைபுரி ஆதி இந்து சுஜன பால்ய சைவ திராவிட சபையின்

அக்ராசனாதிபதியும்,

ஸ்ரீ கபாலீஸ்வர வித்வசித்தாந்த சபை ஸ்தாபகரும்,

"பூலோகவியாசன்" பத்திரிகாசிரியருமாகிய

பூஞ்சோலை-முத்துவீர வுபாத்தியாயரவர்களால்

இயற்றி

அன்பர்களின் பேருதவியால்

சென்னை

மஹாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1906.

1906௵ எப்ரல்௴ 6௳ ஷை சந்நிதானத்தில் செஞ்சி - சிவலிங்கம் பிள்ளை யவர்களாலும், R. கர்னன் பிள்ளை யவர்களாலும் பாடப்பெற்று நல்லடியாருக்கு விநியோகமானது.

உ

வேலுமயிலுந்துணை.

முகவுரை.

உலகெங்கணு முலவிச் சுவையமுத மூட்டுங் கலைமகட்குத் தமது நாவை
யுறைவிடமாகக் கொடுத்த தீந்தமிழ்ப்புலவர்க ளீசனைத் தியானிக்கும்வண்ண
மியற்றும் பன்னூற்கள் பல பெயரானே வெளிவரக்கண்டு மகிழு முலக மிவ்
வற்பனை னிசைத்த விச்சிறு நூலையுங் கண்டானந்தமெய்தற்கிட மிராதெனினு
மந்நூற்களிடத்துப் பொருளின் றிவரும் தான், ஏ, கொல்லோ, மற்றுஎன்னும்
பல அசைமொழிக ளோசையினிமித்தமாவ தெடுத்தாளப் பெறுவதுபோல
சாக்ஷாத் பரவேஸ்வரனது திருநாமத்தானே வந்ததுபற்றியேனுமிச் சின்னூ
லப் பன்னூற்களோடு சேர்க்கப்பெறு மென்பது துணிபு.

இந்நூ லெப்பெயர்க்குறிப்பான் வெளிவந்ததோவெனின்? உலகமாயை
யாந் தாய்வசப்பட்டு, சாக்ஷாத்பரமேஸ்வரனுந்தலைவன்மேற் காதல்கொண்டு,
பிரிவாற்றுளாய்ப் பாடுந்தலைவி தனது மனமாகுந் தோழியை வசப்படுத்தித்
தாய்மொழி துறந்து, தலைவன் பதியாந் திருமயிலாபுரிக்கேகி, நாயகன் வைப
வங்களைத் தரிசித் தானந்தமெய்தி தனதூடலைத் தணிக்குமாறு வேண்டுத
லும், இடையே இலௌகிக விஷயார்த்தமாக நேருஞ் சிற்சில குறிப்புகளுந்
தோன்றப் பாடியதென்க.

பல மணிகளை யோரினமாகக் கோர்த்தல்போல அருஞ்செயல்களாகும்
பலவித அம்ஸங்களை யழகுபடக்கோர்த்தமையாற் சிங்காரக்கோவை யெனும்
பெயரானே இந்நூல் வெளியிடப்பட்டது. சிங்காரம், அழகு, அலங்காரம்
என்பன வொருபொருட் கிளவியே. நூற்கணழகுபெறவந்த அருஞ் செயல்க
ளியாதேவெனின் முடிவுரையிற் கண்டுகொள்க.

இங்ஙனம்,

அடியார்க்கடிமை

பூ. மு. உ.

உ

வேலுமயிலுந் துணை.

சென்னைத் திருமயிலையீச்சுரர்

சிங்காரக்கோவை.

காப்பு - வெண்பா.

சாரக்கோ வப்புயத்தான் றண்மயிலை யீச்சுரர்சிங்
காரக்கோ வைத்தமிழைக் காக்கவே—யாரக்கோ
வர்த்தனத்தை யேந்துமொரு மால்மருக னன்பருள்ள
நிர்த்தனத்தா னைத்தா ணினை.

நூல்.

தலைவி தலைவனைக்காணாது இரங்கல்.

எழுசீர் விருத்தம்.

உலக நாயக னும்பர்க ணாயக னொருபொழு தெனைப்பிரி யாதிங்
கிலகு நாயக னென்னுயிர் நாயக னிழிகுணத் தவர்களி னின்றும்
விலகு நாயகன் விழியிமை யாதிடு விண்ணவர்ப் பரவிய மயிலைத்
திலக நாயக னினும்வரக் காணேன் றிருவுளச் செயலறி யேனே. (1)

இந்திர னயன்மா லெவர்களும் போற்று மேகநா யகனென திடத்தே
வந்திர வினிலோர் சுகமதைத் தந்து மருவிடு நாயகன் புவிமேல்
தந்தியி னூடே வருமொரு மன்னர் சந்ததம் வாழ்திரு மயிலைச்
சுந்திர நாயக னினும்வரக் காணேன் றாயுளச் செயலறி யேனே. (2)

கற்பனை யனைத்துங் கடந்திடு மவர்க்கோர் கருணைசெய் நாயகன் மேரு
வெற்பினை வளைத்துச் சுரர்தமைக் காப்ப மேவிய நாயகன் மாதர்
பொற்புறு நெறியா லளிக்குநல் லறங்கட் பொலிவுற வோங்கிடு மயிலை
விற்பன நாயக னினும்வரக் காணேன் வியனுளச் செயலறி யேனே. (3)

நேர்வர நிரையு நிரைவர நேரு நேர்நிரை வளர்தரத் தளையுஞ்
சீர்வரப் பாடும் புலவர்க டமக்குத் திகழ்தரு நாயகன் வானிற்
கார்வரக் கண்ட மஞ்சைக ளாடுங் கவின்பொழிற் சூழ்திரு மயிலை
யூர்வரு நாயக னினும்வரக் காணே னுயருளச் செயலறி யேனே. (4)

பொன்னினை நிகர்த்த முடியுடைத் தேவர் புகழ்பெறு வெள்ளியங் கிரியி
லுன்னரு ணாடி வந்திடுந் தவத்தோ ருளமுறை நாயகன் மணிகள்
துன்னிய கழைகட் கணுவெடித் தோங்கிச் சொல்லரு மொளிவிடு மயிலை
மன்னிய நாயக னினும்வரக் காணேன் யானுளச் செயலறி யேனே. (5)

தலைவிதன் குறையைத் தோழியுடன் கூறல்.

வேறு விருத்தம்.

முடிமேற் பிறையை முடித்தபிரான் முத்தார் மயிலைப் பதியானை
நடிமே னின்று மாலையிட்ட நாட்கண் டேனந் நாளன்றி
படிமே லின்னுங் காணேனிப் படிசெய் வாரென் றறியேனுன்
துடிமேல் விழுசிற் றிடையாயென் றுயரையெ வர்க்குச் சொல்வேனே.

குன்றேற் பொன்றும் புயத்தழகர் கோமான் மயிலைப் பதியானை
நன்றே நின்று மாலையிட்ட நாட்கண் டேனந் நாளன்றி
யின்றே யளவுங் காணேன்மற் றிதுசெய் வாரென் றறியேனுன்
துன்னுங் கொங்கைச் சகியேயென் றுயரையெ வர்க்குச் சொல்வேனே.

தலங்கா தலித்த மன்னரெலாந் தகையுண் மயிலைப் பதியானை
நலங்கா தலித்து மாலையிட்ட நாட்கண் டேனந் நாளன்றி
சலங்கா தலித்து நின்றனரோ தரைமேல் வரவுங் காணேனுன்
துலங்கா தலித்த சகியேயென் றுயரையெ வர்க்குச் சொல்வேனே

நெடுவேற் கரத்தான் றனையளித்த விமலன் மயிலைப் பதியானை
நடுவே நின்று மாலையிட்ட நாட்கண் டேனந் நாளன்றி
கடுவே தனைமாற் றிடவரவுங் காணேன் செவ்வள் ளைக்குழையைத்
தொடுவேல் விழிகொட் சகியேயென் றுயரையெ வர்க்குச் சொல்வேனே

வகையாற் சுரும்பு முரற்குழையார் வலஞ்சேர் மயிலைப் பதியானை
நகையா னின்று மாலையிட்ட நாட்கண் டேனந் நாளன்றி
மிகையா லின்னும் வரக்காணேன் மெய்ச்சோர் வுற்றே வதைகின்றேன்
தொகையார் முத்தி னகையாயென் றுயரையெ வர்க்குச் சொல்வேனே.

தலைவி தன்னெதிர்ப்பட்ட மயில்களை விளித்தல்.

வேறு விருத்தம்.

நாதம் பயிலின் னிசைமா தரியல்
வாதஞ் செயுமஞ் ஞைகணீர் வாரீர்
காதன் மிககொண் டுமயங் கியயா
னோதுந் தொழிலோன் றுளங்கொள் வீரே. (1)

வெல்லுங் கதிர்மா மணிசூழ் வயலிற்
செல்லு மியன்மஞ் ஞைகணீர் வாரீர்
கொல்லுந் தயர்கொண் டுமயங் கியயான்
சொல்லுந் தொழிலோன் றுளங்கொள் வீரே. (2)

தேறுங் கமுகின் செழுஞ்சோலையுளே
சேறு மியன்மஞ் ஞைகணீர் வாரீர்
மாறு மனங்கொண் டுமயங் கியயான்
கூறுந் தொழிலோன் றுளங்கொள் வீரே. (3)

உள்ளுந் தொறுமே னூர்வா குமெழிற்
கொள்ளு மியன்மஞ் ஞைசணீர் வாரீர்
றெள்ளும் பழிகொண் டுமயங் கியயான்
விள்ளுந் தொழிலோன் றுளங்கொள் வீரே. (4)

ஒப்பி லுருவு முயர்வுங் குணமுந்
துப்புற் றியன்மஞ் ஞைசணீர் வாரீர்
வெப்ப மயற்கொண் டுமயங் கியயான்
செப்புந் தொழிலோன் றுளங்கொள் வீரே. (5)

தலைவி தலைவனிடத்து மயில்தூது விடுத்தல்.

வேறு விருத்தம்.

கட்டுவார்குழை நங்கைமாரணி காட்டுமாமயி லைப்பதி
யிட்டமேயுற நின்றமாதவ னெந்தனாயகன் சந்நிதி
மட்டுநேர்தரும் வாயிலேகிநின் மஞ்ஞைகாளும தேழையான்
திட்டமாறிய வென்னுள்க்குறை தீர்க்கவோர்மொழி செப்பிரே. (1)

பொன்னுமீளாங்கியத் தோரணங்கட்பொ லிவுறுமயி லைப்பதி
தன்னிலோங்கிய முக்கணாயகன் சங்கநாயகன் சந்நிதி
மன்னுமுன்னணி வாயிலேகிநின் மஞ்ஞைகாளும தேழையான்
றென்னிழந்திடு மென்னுளக்குறை தீர்க்கவோர்மொழி செப்பிரே. (2)

கஞ்சமெல்லிதழ் மீதிலன்னங்கள் கண்படுமயி லைப்பதி
விஞ்சுமாபெருக் கோயிற்கொண்டவி மலநாயகன் சந்நிதி
மஞ்சமுன்னணி வாயிலேகிநின் மஞ்ஞைகாளும தேழையான்
செஞ்சொலற்றிடு மென்னுளக்குறை தீர்க்கவோர்மொழி செப்பிரே. (3)

அணிகொள்மன்ன ரருந்தவத்தின ரார்ந்தமாமயி லைப்பதி
துணிகொண் டோங்கிய முத்திநாயகன் றூயநாயகன் சந்நிதி
மணிகொண் முன்னணி வாயிலேகிநின் மஞ்ஞைகாளும தேழையான்
திணிகொளாதுழ லென்னுளக்குறை தீர்க்கவோர்மொழி செப்பிரே (4)

தூயவானவர் வந்தருந்துதி சொல்லுமாமயி லைப்பதி
நேயமுற்றிடு மெந்தநாயக னித்தநாயகன் சந்நிதி
மாயமுன்னணி வாயிலேகிநின் மஞ்ஞைகாளும தேழையான்
றேயமாறிய வென்னுளக்குறை தீர்க்கவோர்மொழி செப்பிரே. (5)

தலைவனைக்காணாத் தலைவி குறத்தியிடங் குறியாராய்தல்

வேறு விருத்தம்.

விண்ணிடத்து மலையிடத்தும் விளையாடி மயிலைநகர் விளங்கி யெந்தன்
கண்ணிடத்து முயிரிடத்து மகலாத நாயகனைக் காணே னந்தோ
பண்ணிடத்தின் னிசைபூட்டுங் குறமடவா யென்செய்வேன் பாவியேனிப்
பெண்ணிடத்து வருவாரோ வாராரோ குறியாய்ந்துப் பேசி டாயே. (1)

மனைநோக்கு மாதுலர்தம் முகநோக்கி யன்னமிடு மங்கை யார்நல்
வினைநோக்கி யெழுந்தருளும் பென்னானியுறை மயிலைநகர் விமலன்கஞ்சந்
தனைநோக்கக் காணேனா னென்செய்வேன் குறமடவாய் தளரா நின்றே
னெனைநோக்கி வருவாரோ வாராரோ குறியாய்ந்திங் கிசைத்தி டாயே. (2)

வாளையே றுந்தடங்கட் சூழுமெழின் மயிலைநகர் வாழ்வுற் றேநற்
காளையே றுந்திடத்து நாயகனின் றேவரவுங் காணு வேனோ
வேளையே மருட்டுமியற் குறமடவா யென்செய்வேன் வினையா ளென்முன்
னாளையே வருவாரோ வாராரோ குறியாய்ந்து நவிற்றி டாயே. (3)

இகம்பார்க்கும் புதுமையெலா மேற்றதிரு மயிலைநக ரிறைவ ராங்கற்
பகம்பார்க்குங் கரத்தழக ரென்னைமறந் தயலிடத்திற் படுத்திட் டாரோ
ஜகம்பார்க்கு மிசைப்பாட்டின் முறையோங்குங் குறமடவாய் தகையா லெந்த
னகம்பார்க்க வருவாரோ வாராரோ குறியாய்ந்திங் களைந்தி டாயே. (4)

மெச்சுமணிக் கொடியாடுந் திருவீதி மயிலைநகர் மேவுந் தேவர்
கச்சுபுனை முலைமாதர் மயல்வலையிற் பட்டனரோ ககனத் தோரும்
விச்சையுறுங் கரம்பார்க்குங் குறமடவா யவர்திறத்தை விளம்பு மென்பா
விச்சையுற்று வருவாரோ வாராரோ குறியாய்ந்திங் கியம்பி டாயே. (5)

நற்றாய் வருந்தல்.

வேறு விருத்தம்.

ஐயா வென்பா ளரனே யென்பா ளாவியுஞ் சோர்வுறுவாள்
துய்யா வென்பாள் மாமயி லைப்பதி துரையே வாவென்பாள்
மெய்யா வென்பாள் மன்மதன் கணையான் மெலிவா ளுடலயர்வாள்
பொய்யா மொழியாற் புகழ்சேர் விரதம் புரிவா ளென்மகளே. (1)

அரனே யென்பா ளழகா வென்பா ளாருயிர்க் கோரருட்செய்
வரனே யென்பாள் மாமயி லைப்பதி வாழ்வே வாவென்பாள்
பரனே யென்பாள் விண்ணவ ரேத்தும் பதியே வந்தருட்சங்
கரனே யென்பாள் வேறொன் றினையுங் கருதா ளென்மகளே. (2)

அம்போ ருகவெண் மலர்மீ தனங்க ளமர்செந் தடமெங்கும்
வெம்போர் வாளை யுலவும் மயிலை வேதா வாவென்பாள்
சம்போ சிவசங் கரனே யென்பாள் தனியே யென்மீது
வம்போ தொடுத்தீ ரென்பாள் கற்பின் வடிவா ளென்மகளே. (3)

அருவுரு வையென தாருயிர்க் குயிரா யன்பிங் களித்தோனே
பெருவுரு வேதிரு மாமயி லைப்பதி பெருமான் வாவென்பாள்
திருவுரு வேயென் னரசே யென்பாள் திகழ்கண் ணீர்சொரிவாள்
மருவுரு வடர்செங் குழலும் முடியாள் மதிசே ரென்மகளே. (4)

சோற்றாசையுமற் றுச்சுக மற்றுச் சோர்வாள் வேறொன் றுந்
தோற்றா தவளாய் மாமயி லைப்பதி தூயா வாவென்பாள்
வேற்றார் முகங்கண் டால்விழி சுழித்தே வெங்கோ பக்குறியாள்
மாற்றா ளைப்போல் பார்ப்பாள் மயலை மறவா ளென்மகளே. (5)

தலைவி தலைவனைக்காண விழைதல்.

வேறு விருத்தம்.

அணியணி வகுத்த சேனை யனைத்தையு நடத்தி மிக்க
வழகுறுஞ் சோலை யெல்லா மடர்ந்தமா வரசர் பூண்ட
மணியணி கழன்று பூவின் மகட்கணி யாக்குஞ் செய்ய
மயிலைதொன் னகரா ரென்னை மருவிட வலிய வேகிப்
பணியணி புயத்தீர் விண்ணோர் பணியுநற் புகழீர் நான்கு
பழமறை யேத்தி யேத்திப் பாடிடும் பண்பீர் வெல்லுந்
திணியணி யுடைத்தீர் முன்னந் திரிபுர மெரித்தீ ரெந்தன்
சிறுமொழிக் கிரங்க வென்றுஞ் செப்புவேன் செப்பு வேனே. (1)

கலையெனு மமுத மெல்லாங் கனிவுடன் றமது புந்திக்
கலசமே யடைத்த ஞானக் கருணிகர் வந்து தந்த
நிலையினி விருந்து மண்ணில் நிகரறத் தவங்க ளாற்றி
நீடுறும் புகழ்க ளெல்லாம் நிறுத்திய மயிலைத் தேவர்
அலையுறு மென்மேற் காத லாகிட வலிய வேகி
யமிழ்தினு மினித்த சொல்லா லன்புடன் மேரு வெற்பைச்
சிலையென வளைத்தீர் வேடச் சிறுவனை யளித்தீ ரெந்தன்
சிறுமொழிக் கிரங்க வென்றுஞ் செப்புவேன் செப்பு வேனே. (2)

சங்கிடை யெழுந்த முத்துந் தனிமதக் களிற்றுக் கோட்டிற்
றழைத்தொளி விளக்கு முத்துஞ் சந்தத நிறைந்து பூவிற்
றுங்கவா னுடுக்கள் போலுந் தோன்றிடு மயிலை யூரிற்
சொல்லருங் கீர்த்தி யெல்லாஞ் சூடிய நிமல னென்னை
தங்கிய காத லோடுந் தழுவிட வலிய வேகித்
தனிமொழி யமுத மூட்டித் தண்கரங் குவித்து நின்று
திங்கள்செஞ் சடையீர் கொன்றைச் செம்மலர் தரிப்பீ ரெந்தன்
சிறுமொழிக் கிரங்க வென்றுஞ் செப்புவேன் செப்பு வேனே. (3)

வாணுதன் மடவா ராடி வந்ததோர் தடத்துண் மூழ்கும்
வன்சிறை யனங்க ளெல்லாம் வடிவினின் மலர்மா தென்னக்
காணுறு மயிலைத் தேவர் கண்டிட வலிய வேகிக்
கனிவுறுஞ் சொல்லா லுள்ளங் கரைந்திட வாழ்த்தி யேத்தி
மாணுறுஞ் செயலீ ரன்பர் மனங்குடி கொள்வீ ரெங்கு
மன்னிய புகழீர் துய்ய மதியினை யணிவீர் தூய்மைச்
சேணுல குடையீர் வஞ்சத் தீவினை யழிப்பீ ரெந்தன்
சிறுமொழிக் கிரங்க வென்றுஞ் செப்புவேன் செப்பு வேனே. (4)

பூங்கமு கனைய கன்னற் புதுநற வொழுக முற்றிப்
புகழ்கணு வெடிப்ப வோசை பூட்டும்வண் டினங்கள் கூடி
தீங்கறப் பீடிப் பாடிச் செழிப்புறு மயிலை நாட்டிற்
றிகழ்தரு மரனு ரென்னைச் சேர்ந்திட வலிய வேகிப்
பாங்குக ளுடையீர் வாழ்த்தும் பண்பினர்க் கருள்வீர் முன்னம்
பாலனைக் காத்தீர் மற்றோர் பாலனைப் புசித்தீர் நாளுந்
தேங்கமழ் மலர்த்தாள் வேண்டுந் திறத்தினர்க் களிப்பீ ரெந்தன்
சிறுமொழிக் கிரங்க வென்றுஞ் செப்புவேன் செப்பு வேனே. (5)

தலைவி சோதிடங்கேட்டல்.

வேறு விருத்தம்.

அணிதிகழ் செங்கலை யாதிவ ழங்குறு மையா புரிநூ லாரணரே !
பணிதிகழ் புயத்தார் மயிலையி னிடத்தார் பண்புறு சேர பத்திலகர்
மணிதிக ழெந்தன் மாளிகை தேடி வருவா ரோவவன் பித்தனியே
திணிதிகழ் மனத்தாற் செல்வா ரோவிச் செய்தவி ளங்கச் சொல்வீரோ.

பெருமா தவமே யுருக்கொடு வந்தீர் பெரியீர் புரிநூ லாரணரே !
திருமா லயன்முன் றேடிய வடியுந் திருமுடி யந்திக ழெம்பரனார்
மருமா மலர்வா சங்கம ழெந்தன் மாளிகை தேடி வருவாரோ
வொருமா மயிலைப் பதியார்க் கென்மே லுளந்தா னிலையோ வுரைப்பீரோ.

வழுவா வுரையீர் தவமே வடிவாய் வந்தீர் புரிநூ லாரணரே !
நழுவாக் கலைமா துறைமா மயிலை நகரா ரென்முன் வருவாரோ
மழுவார் கரத்தா ரென்னா சையினை மறந்தே முற்றுந் துறந்தாரோ
புழுவாய்த் துடித்திங் குழல்வேன் றனக்கோர் புகழுண் டாகப் புகல்வீரோ.

திருத்த முடையீர் ஜபமே வடிவீர் திறஞ்சேர் புரிநூ லாரணரே !
நிருத்தர் மயிலை யார்க்கு மெனக்கு நிகழ்ந்த மேலாந் திருமணத்திற்
பொருத்த மிலையோ வுண்டோ வினிமேற் புகுமோ வவரென் றனைக்காண
வருத்த மெனவோ சோதிடம் பார்த்தென் வறுமைக ணீங்கிட வழுத்தீரோ.

கோட்பொய் யறியாச் செயலீர் தூய்மை குடிகொட் புரிநூ லாரணரே !
வாட்பொன் றியசெவ் விழிசேர் மடவார் மன்னும் மயிலைப் பதியார்தந்
தோட்பொன் றிடநான் மயல்கொண் டேனோர் சுகமுங் கண்டே னிலையெந்த
னாட்பொல் லாதோ வெவர்செய் சூதோ கலத்தா லெனக்கு நவில்வீரோ.

தலைவி பாங்கியைத் தன்னோடழைத்தல்.

வேறு விருத்தம்.

அரியானை யென்னாசை யனையானை யருளை
யளிப்பானைக் களிப்பானை யன்பற்ற வெவர்க்குந்
தெரியானை மறைநான்கிற் றிகழ்வானை மயிலைத்
திருவூரி லுறைகின்ற திணியானை தேவர்க்
குரியானை யான்தேடி யுற்றேவற் புரிவே
னூர்வேண்டி பதிவேண்டி யுளவேண்டிற் பெறுவேன்
வரியான விழிகொண்டு வகைமேவுந் தோழி
வழிகண்டு மென்னோடு வருவாயோ தோழி. (1)

அலைநீடி வளர்கின்ற கடலோசை போல
வணிநீடு மறையோர்சொ லொலிநீடு மயிலை
நிலைநீட வெழுகின்ற நடத்தேவர் தம்மை
நிகரற்ற கிருபாக டாக்ஷித்து வைப்பை
கலைநீட யான்தேடிக் கண்டேவல் புரிவேன்
கதிவேண்டி நிதிவேண்டி கனம்வேண்டிற் பெறுவேன்
சிலைநீடு முருவன்ன நடைகொண்ட தோழி
திகைக்காம லென்னோடு நடப்பாயோ தோழி (2)

கார்கண்ட பூச்சோலை யெங்கெங்கு மஞ்ஞை
களித்தாட மாற்றாரைச் சவமாக்கும் வெற்றிப்
போர்கண்ட பார்வேந்தர் புகழ்ந்தாடு மயிலைப்
புரியானை மட்டற்ற பொறையானை சடையி
லேர்கண்ட மதியானை யெழிலானைக் காண்பே
னிகம்வேண்டி பரம்வேண்டி யெதுவேண்டிற் பெறுவேன்
சீர்கண்ட மொழியோடு செயலோங்குந் தோழி
திறமாக வென்னோடுந் தொடர்வாயோ தோழி. (3)

விதிதங்கு சினையாமை தமதில்ல மலரில்
வியன்கொண்ட சிறைவண்டி னினம்வந்து சேர்ந்துத்
துதிதங்கு மெழிலோசை யாற்பண்வ யங்கித்
துணிவாக மதுவுண்டு புகழ்பாடு மயிலைப்
பதிதங்கு மரனாரை யான்கண்டு கொள்வேன்
பழியோடத் தவம்வேண்டில் வழியோடும் பெறுவேன்
மதிதங்கு மதிசுந்தர மடவாயென் றோழி
மயல்கொண்ட வென்னோடு மிசைவாயோ தோழி. (4)

சுபமேவு மடமாத ரொழுவீதி யெங்குந்
துவசங்க ணிறைந்தாடு மெழிற்காண வருவார்
தபமேவு முனிவோர்கள் தமைக்காண வருவார்
தம்மோடி யான்சென்றுத் தகைமேவு மயிலை
நிபமேவ நின்றானைக் கண்டேவல் புரிவே
னிலைவேண்டி கலைவேண்டி லலைவின்றிப் பெறுவேன்
நபமேவு முயர்மாதர் புகழ்தாவுந் தோழி
நலியாம லென்னோடுந் துணிவாயோ தோழி. (5)

பாங்கிதன் னோக்கம் பைந்தொடிக் குரைத்தல்.

வேறு விருத்தம்.

திருவ டர்ந்த பொழிலி டத்து சேர நின்ற கிளிகளுந்
திணிய டர்ந்த மணிய ணித்தி கழ்ந்த கச்சு மாதரும்
மருவ டர்ந்த மொழிக ளாடி மல்லி ழைத்து வந்துவாழ்
மயிலை யண்ணல் மீது மிக்க மைய லுற்ற மங்கையே !
தருவ டர்ந்த மாலை யொன்று தாங்கி டற்கு வழியிலை
தனிமை யென்பி னார மேத டத்த ணிந்த பித்தனார்
உருவ டர்ந்த மலைகு றத்தி யோடி சைந்த வீணனை
யுன்னி யுன்னி வாடி நிற்ற லார்ப ழிக்க வல்லதே. (1)

கோவ ணத்தை யன்றி வேறு கோடி யில்லை யவனிடங்
கொல்லு நாக மன்றி வேறு குணமளிக்கும் பணியிலை
தாவு மாபி ணங்கள் வெந்த சாம்ப லைத்த ரித்துபின்
சந்து தோறு மன்ன பிச்சை தானெ டுத்து ணுங்குணன்
மேவு மாதர் தங்களின்மி குந்த கற்பு மங்கையே !
மேன்மை நீடு மயிலை யத்தன் மீதில் மையல் வைத்துநீ
யாவி சோர்வு கொள்வை யாகி லார்சி ரித்தி டார்கொலோ
அவனி மெச்சு மங்கை யார்க்கு ளான தன்மை யல்லவே (2)

ஊரி லுற்ற மாதர் தந்த முள்ளு ளேசி தீக்கவோ
வுன்னை யொத்த பெண்க ளேச்சு ளாக்க வோவ லுதியாம்
பேயொ டொத்த மயிலை யத்தன் பின்செ லத்து ணிந்தனை
பேயோ டாடு மன்ன வர்க்குப் பெண்கொ டுப்ப தெவர்கொலோ
நேரி லுற்று காளி யோடு நிர்த்த மாடுங் கூத்தனர்
கினைக்கொ ணாத பிணத்தெ லும்பை நீள்பு யத்த ணிந்தவன்
நீறொ டுத்த முடியி னுமை நீய டுத்த ணைந்திட
நினைத்த லென்ன நேர்மை யோவிந் நிலத்து ளோர்க்கு ணிந்தையே.

தந்தை யில்லை தாயு மில்லை தகையின் மிக்க நேசருந்
தகுதி யான சுற்ற மற்று தானித் தனித்து நின்றவன்
கந்தை சுற்றி பிச்சை யோடு கையி லேந்தி யூரெலாங்
காசி றந்து மயிலை வாழ்முக் கண்ணன் மீது மெத்தவுஞ்
சிந்தை வைத்து மைய லுற்று சேர நாடி செல்வையேற்
சீர்வி ளங்கு மோர றத்தி றஞ்செ றித்த மங்கையே!
நிந்தை யான வார்த்தை யாடி நிகழு நங்கை மாரெலாம்
நின்று நின்று பேசி யுந்தன் நிலைமை யைப்ப ழிப்பரே. (4)

எஞ்சு மந்த மாத ராரி சைந்து வாழ்த்தெடுப்பநீ
யின்ப மேசு மந்து வாழு மினிய கற்பு மங்கையே
தஞ்சு மந்த பூவில் வேடன் முன்பு சித்து வைத்துபின்
றந்த வெச்சி லுண்ட தன்றி தாவி கூடை கூடையாய்
மண்சு மந்து கூலி பெற்று மற்று மர்ச்சு னன்விலால்
மாற வேச கித்து தொண்டன் மாம ணத்தில் தூதுபோய்
புஞ்சு மந்த பித்த னோடு போக வேநி னைத்தனை
புகழ்சு மந்த நின்னை யொத்த பூவை மார்ப ழிப்பரே. (5)

தோழிதன்னுக்கைத் தோகை மறுத்தல்.

வேறு விருத்தம்.

கனியொன்றி ரண்டி லெழுகின்ற சாறு கண்டேன் றினித்தமொழியாய்!
அனியாய நிந்தை பழிகார வீண ரானகின்ற சொல்லை மதியேல்
முனிவோரு வந்து குடிகொண்ட மைலை புதலோனை யடைவ தன்றித்
தனியேயி ருந்து மயலால்வ ருந்தி தரைமேற்ப டுத்தி டேனே. (1)

ஆலம்பொ ருத்த விழியாயெ னாவி யனையாய்சி றுத்த மதியார்
ஞாலம்ப ழித்த வுடலார்வ முத்து நயவஞ்ச கத்தை மதியேல்
காலஞ்சி றந்து வளர்கின்ற மைலை குடிகொண்ட நாத னென்னை
தாலம்ப ழிக்க விடுவாரொ னுஞ்சொல் சரியல்ல வெந்தன் சகியே. (2)

இணைவந்த டர்ந்து மலைபோ லுயர்ந்த விருகொங்கை யேந்து மயிலே!
பணைவந்தி டாத வழிநின்ற வற்பர் பகர்கின்ற சொல்லை மதியேல்
திணைவந்த மைலை யருணேசர் நல்ல செயல் கண்ட சிந்தை யுடையார்
துணைவந்தெ னக்கு வின்பஞ்சு ரக்க சுகமீந் திருப்ப ரவரோ. (3)

கலமேவி ழைந்து குணமேசி றந்த நடையாய்வி சித்ர வுடையாய் !
வலமேப டைத்து வீணாபி தற்ற வல்லோர்கள் மொழியை மதியேல்
பலமேற்செ றிந்த புகழ்கொண்ட மைலைப் பதியாள னென்னை மருவி
நிலமே லுயர்ந்த கீர்த்திப்ர தாப நிலைநாட்ட வருவ ரின்றே. (4)

மைதொட்ட கண்ணு மணியிட்ட மார்பு மகிழ்வுற்ற வளமு முடையாய்
பொய்தொட்ட வார்த்தை குடிகொண்ட வீணர் புகல்கின்ற சொல்லை மதியேல்
தொய்தொட்ட கொங்கை மடவார்கண் மேவி துகளற்ற மைலை யரனென்
மெய்தொட்ட கையு மகிழுற்ற நெஞ்சும் வேற்றாளா யடைத லரிதே.

தலைவிதன் னிலைமையைத் தானினைந்திரங்கல்.

வேறு விருத்தம்.

திடம்படிந்த வாமுதவுந் திருமயிலை யரனார்
  செம்பநவத் தென்னைமணஞ் செய்ததுதா னறிவேன்
நடம்படிந்து மீளவென்னை நாடிவரக் காணேன்
  நாட்டிலுறு மென்றுயரை நானெடுத்தெங் குரைப்பேன்
அடம்படிந்த பெண்களெலா மவமதிக்க வானேன்
  அன்னைமனஞ் சகியாதென் னாசையெலாம் வெறுத்தாள்
குடம்படிந்துத் தளும்புகின்ற குறைநீர்போ லானேன்
  கோலவய னெழுதியதென் குறைவின்விதி வசமே. (1)

விண்ணுழையுந் தேவரெலா மேவுகின்ற மயிலை
  விமலனென்னை மாலையிட்ட வேளைமுகம் பார்த்தேன்
கண்ணுழையு மிடங்களெலாங் காட்சிதரு மவனைக்
  காதலித்தேன் மீண்டும்வரக் காணேனென் செய்வேன்
புண்ணுழையும் வேலெனவே பூவிலுள்ள மடவார்
  புன்சொலினா லேசுகின்றார் கூசுகின்றே னுடலம்
தண்ணுழையப் பாலளித்த தாயுமனஞ் சலித்தாள்
  தலையிலய னெழுதியதென் றன்குறைவின் வசமே. (2)

சீர்படைத்த புகழ்மயிலைத் தேவரவ ரென்னைச்
  சேரமணஞ் செய்ததன்றிச் சேர்ந்தறியா ரடஞ்சொற்
பேர்படைத்த பெண்களெலாம் பேசும்பழி யுரையாற்
  பித்துருவா னேனவர்கள் சத்துருபோ லானார்
நேர்படைத்த வன்னையென்னை நிந்திக்கத் துணிந்தாள்
  நெடுஞ்சோலை யுட்பிரித்த கொடுமரம்போ லானேன்
பார்படைத்த வேந்தர்துதி பரமனையான் பிரியப்
  பாவியய னென்றலையிற் பதித்தவிதி வசமே. (3)

தூய்மொழியார் வந்தடையுஞ் சுத்ததிரு மயிலைத்
  தொன்னகரா ரென்னைமணஞ் சூடியபின் னன்பால்
வாய்மொழியும் பேசாது வலம்படைத்துப் போனார்
  வாழுமட மாதரெனை யேழையெனப் பழித்தார்
சேய்மையுடை யென்னன்னையுந் தெருவில்வரு வோரைச்
  சேரவா வழைத்தெனது சேதியெலாம் புகல்வாள்
காய்மையுடை யிவ்வூரார் கண்டுசிறித் திட்டார்
  கத்தவய னென்றலையிற் பதித்தவிதி யெழுத்தே. (4)

முத்துருளு மயிலைநகர் முன்னவன்வந் தெனது
 முகம்பார்த்து மாலையிட்டிட னகம்பார்த்தா ரன்றி
மெத்தைதமிசை விளையாடி மேவுமயற் றொடுத்து
 மேலான வின்பந்தர வேலாமற் போனார்
பித்துருவங் கொண்டலையப் பெற்றேனென் செய்வேன்
 பெண்களெலாம் பரிகாசப் பணிபாடத் துணிந்தார்
சத்துருபோ லெனையீன்ற தாயாரும் வைதாள்
 தணித்தவய னென்றலையிற் பிணித்தவிதி யெழுத்தே. (5)

தலைவன் பிரிவுக்குத் தலைவி காரணமாராய்தல்.

வேறுவிருத்தம்.

சீதமதி மேவுமயி லைத்தலகர் மீதுகுறை செப்பியறி யேன தன்றி
வாதமட வார்தமது நாயகரை நித்தனைசெய் வகையா னிழைத்த றிகிலேன்
நாதமிடு கீதவின் னிசைபாடி திரிகின்ற நங்கையர்க ளுறவு கொள்ளேன்
காதலுறு மென்னையவ ரிங்குதனி யாய்வைத்த காரணம றிந்தி லேனே.

வனமுற்ற மைலைநக ருறைவாரை நித்தமும் வாழ்த்தா திருந்தறிகிலேன்
சினமுற்ற மடமாத ரென்னேர முந்தமது சிந்தைக்கி சைந்த படியே
தனமுற்ற நாயகரை நாடிசெல் கின்றவழி தனைநினைத் தேக விசையாக்
கனமுற்ற வென்னையவ ரிங்குதனி யாயவைத்த காரணம றிந்தி லேனே.

கொடையார்ந்த மைலைநகர் வாசருக் கொருசிறிய கோபமுண் டாக நடவேன்
நடையார்ந்த விலைமாதர் போலுடுத் தித்தங்க நகைபூண்டு வெளியி லுலவேன்
படையோடு வருமன்னர் துதிகூறு மன்னவர்ப் பாதத்தை யன்றி நினையேன்
கடையாக வென்னையவ ரிங்குதனி யாய்வைத்த காரணம றிந்தி லேனே. (3)

வட்டமிட் டுலவுமன் னப்பறவை யெங்கெனும் வாழ்கொண்ட மயிலை நகரார்க்
கிட்டமற் றிட்டவெத் தொழிலுமுற் றறிகிலே னின்பநா யகர்த மக்கோர்
நட்டமுற் றிடவெனப் பலபொரு ளழித்திடும் நங்கையர்த முறவு வேண்டேன்
கட்டமிட் டென்னையவ ரிங்குதனி யாய்வைத்த காரணம றிந்தி லேனே, (4)

நிதியொன்று மைலைநன் னகராள ருக்குரிய நேர்மையெல் லாமி ழைப்பேன்
மதியொன்றி லாதபுன் மடவார்க ளோடுற்று மகிழாடி நிற்க நினையேன்
துதியொன்று கூறுவே னதுவுமத் தகையாளர் தூயடிக் கன்றி யலவே
கதியென்ற வென்னையவ ரிங்குதனி யாய்வைத்த காரணம றிந்தி லேனே. (5)

தலைவி மாரனைப் பழித்தல்

வேறு விருத்தம்.

சீர ணைத்திரு மாமயி லாபுரிச் செல்வ னைப்பிரிந் தேங்குறு மெந்தனை
மார னேகணை யாற்சுட வெண்ணினை மண்ணி லுன்னைய திப்பவ ரார்கொலோ
வீர முற்றிகு மன்னர்தம் வன்மையால் வெற்றி மேவிட வேண்டிற் றுமையொத்த
தீர ரைச்சவ மாக்குவ தென்னைநீ சீர ழிப்பது மாண்மைத்த னமதோ. (1)

சோலை நீள்தரப் பைங்கிளிச் சந்ததிச் சூழு மாமயி லாபுரி யத்தனை
மாலை சூடிய காண்முத வின்னமு மருவி டாதும யக்குறு மெந்தனை
சோல மேசெயு மன்மத னேயுந்தன் கொள்கை கண்டிடி லார்மதிப் பார்கள்முற்
காலையுன்னையெ ரித்தமுக் கண்ணனைக் காய்ந்தி டாமலெ னைச்சுட லாண்மையோ.(2)

நன்னெ றித்திற முன்னுளி ருக்குமேல் நாடிமாமயி லைப்பதி யாளரை
முன்ன மேசுட்ட வர்க்கெந்தன் மீதினில் மோக மூட்டிய மைத்துவந் திங்ஙனே
யென்னைச் சுட்டவ ரோடிசை வாக்குவா யிந்ந லச்செய வின்றியிவ் வேழையாள்
தன்னை யேசுடத் தான்புறப் பட்டனை தக்கதோவுன தாண்மைத்த னத்துக்கே. (3)

நம்புமெய்யடி யாருறை மைலைவாழ் நாத னென்னைத் திருமணஞ் செய்தபின்
வம்பெ டுத்தகன் றூர்வரு வாரென்று வழியெ லாம்விழி மேவவிட் டுள்ளனே
வெம்பு மென்னைவெ ருட்டிட வேண்டிநீ வீசு மாமலை மேதிக ழும்மல
ரம்பெ டுத்துவந் தாய்மத னேயடி யாளை வாட்டுத லார்பழிக் காகவோ. (4)

சோம ளந்திகழ் பாவையர் வாழ்த்துறுங் கோதி லாமயி லாபுரி வள்ளலைச்
சேமநீடிட வேண்டித் திருமணஞ் செய்த தன்றிமற் றோர்சுகங் கண்டிலேன்
வாம மங்கையர் தங்களைக் காய்ந்துயிர் வாட்டி வாட்டிவ தைக்கும்ப ழியெலாங்
காம னேயுட லெங்குக்கு றிகளாய்க் காணப்பெற்றனை யேயிது கர்மமே. (5)

தாய் தன் மகளின் றன்மைக் கிரங்கல்.

வேறு விருத்தம்.

தாகம றுத்தவ ருய்ந்தாருந் தண்மயி லைப்பதி வந்தார்மேற்
சோகமு டைத்தொரு பொழுதேனுஞ் சோறுண் ணாதிங் கயர்வுற்று
மோகமெ டுத்தே திரிகின்றாள் முகமேற் கண்ணீர் சொறிகின்றாள்
தேகமெ டுத்தொன் றியமடவார் சிறிக்கத் தலைபட் டென்மகளே. (1)

பூசைநி றைந்திடு மாமயிலைப் புகழார் வெற்றித் திகழ்வார்மே
லாசைநி றைந்தொரு பொழுதேனு மன்னச் சுவையுங் கொள்ளாளாய்
நேசமு டைத்தோர் வாழ்டெறுமிந் நிலமேற் கண்ணீர் சொறிகின்றாள்
பர்சமு டைத்திங் கெழுமடவார் பழிக்கத் தலைபட் டென்மகளே. (2)

வண்ணம டைந்தொளிர் திருமயிலை வாழ்வுற் றருளும் பரனார்மே
லெண்ணம டைந்தொரு பொழுதேனு மின்சுவை யமுது முண்ணாளாய்
கண்ணும தன்கணை யெய்யவுட னலிந்தே கண்ணீர் சொறிகின்றாள்
பெண்ணம ரியலார் வசைமொழிகட் பேசத் தலைப்பட் டென்மகளே. (3)

செய்யவ ளந்திகழ் மைலைநகர் செல்வத் தேவர் தம்மீது
மையலு டைத்தொரு பொழுதேனு மகிழ்ந்தோ ருணவு முண்ணாளாய்
நையல டைந்தே யுடலெங்கு நதிபோற் கண்ணீர் சொறிகின்றாள்
வெய்யந டத்துப் பெண்கள்பழி விளம்பத் தலைபட் டென்மகளே. (4)

நீதப் பண்ணிசை யெங்கெங்கு நீடிய மயிலைப் பதியார்மேற்
காதலு டைத்தே திரிகின்றாள் கைப்பிடி யமுது முண்ணாளாய்ச்
சீதக் குழலும் முடியாமற் றிரளாய்க் கண்ணீர் சொறிகன்றாள்
வாதப் பருவத் துறுமடவார் வசைக்குத் தலைபட் டென்மகளே. (5)

தாய்சொன் மறுத்துத் தலைவிசாற்றல்.

வேறு விருத்தம்.

காதன் மங்கைய ரனைவரு மென்மேற் காய்மை யாற்பழி கூறினு மதியேன்
நீத மாகிய மூவிரு சுவையு நீடு மன்னமுந் தாயிட முண்ணேன்
வேத மோங்குறு மயிலையி னிடத்தே விளங்கு மாதவன் றண்ணடி மறவேன்
ஆத லாலென தாருயிர் நமனார்க் காகி னும்பய மொன்றடை யேனே. (1)

மார ணம்பயிற் றீமொழி மடவார் வாய்மொ ழிந்திடு மேச்சினை மதியேன்
கார ணந்திக ழென்னுயிர்த் தாய்சொற் கற்பித மென்றே கருதியு ளாப்பேன்
தோர ணந்திகழ் மயிலையி னிடத்தே துலங்கு நாயகன் றண்ணடிக் கிசைவா
லார ணம்பயி லென்னுயிர் நமனார்க் காகினும்பய மொன்றடை யேனே. (2)

பவஞ்செய் யேந்திழை யார்களெல்லோரும் பழிச்சொல் லின்றதை யாளினைந்துருகேன்
நவஞ்செய் யன்னை யெனைவெறுத் திடினு நாட்டி லுள்ளோர் பழிக்கினுங் கலங்கேன்
தவஞ்செய் முனிவோ ருறைதிரு மயிலைத் தலத்து நாயகன் றண்ணடி மறவேன்
அவஞ்செய் தறியா வென்னுயிர் நமனார்க் காகி னும்பய மொன்றடை யேனே. (3)

வஞ்ச நெஞ்சுடைத் தேமடவார்கள் வழங்கி டும்பழிச் சொல்லினை மதியேன்
செஞ்சொ லாலென தன்னைவந் தினிமை சேர்ந்த வன்னந் தருகினு முண்ணேன்
தஞ்ச மேதரு மயிலைதொன் னகரார் தண்ண ருட்டிருத் தாளினை மறவேன்
அஞ்ச லற்றவெ னுருயிர் நமனார்க் காகினும்பய மொன்றடை யேனே. (4)

காய்மை யுற்றிடு மாதர்கள் கூடிக் கழறு மேச்சினைக் கருதியு ளுருகேன்
வாய்மை நீடுமென் னன்னைதந் திடுமோர் வாச மலரையுங் குழையினி லணியேன்
தூய்மை வந்துறு மயிலையி னிடத்தே துலங்கு நாதனின் றாயடிப் பணிவேன்
ஆய்மை யோட்டுமெ னுருயிர் நமனார்க் காகி னும்பய மொன்றடை யேனே. (5)

அலைவுறு மதியை தலைவி முனிதல்.

வேறு விருத்தம்.

பேரா ருந்திருவாழ் மயி லாபுரிப் பிஞ்சகனைப்
பாரா தேயுழன்று மவர் பக்ஷம றந்துவிடேன்
சீரார் வெண்மதியே யழற் றீக்கொண்டெ னையெரித்தால்
வாரா தோவுனக்கும் பழி வந்திடு நீங்குவையே. (1)

தின்னா ருந்திருவாழ் மயி லாபுரிச் செல்வர்தமை
யெண்ணா திங்குறங்கே னவ ரென்செயி னும்மறவேன்
தண்ணா ரும்மதியே யழற் றூன்கொண்டெ னையெரித்தால்
நண்ணா தோவுனக்கும் பழி நண்ணிடு நீங்குவையே. (2)

சொல்லா ருந்திருவாழ் மயி லாபுரித் தூயவனைப்
புல்லா திங்குறங்கே னவர் பொன்மலர்த் தாண்மறவேன்
வல்லா ரும்மதியே யழல் வாய்கொண்டெ னையெரித்தால்
நில்லா தோவுனக்கும் பழி நின்றிடு நீங்குவையே. (3)

மாணா ருந்திருவாழ் மயி லாபுரி மன்னவனைக்
காணா திங்குறங்கே னவர் கஞ்சவ டிமறவேன்
சேணார் வெண்மதியே யழற் சேரவெ னையெரித்தால்
தோணா தோவுனக்கும் பழி தோன்றிடு நீங்குவையே. (4)

பொன்னா ருந்திருவாழ் மயி லாபுரிப் புங்கவனை
யுன்னா திங்குறங்கே னவ ரொண்மலர்த் தாண்மறவேன்
மின்னா ரும்மதியே யழன் மிக்கவெ னையெரித்தால்
மன்னா தோவுனக்கும் பழி மன்னிடு நீங்குவையே. (5)

தலைவி தலைவனைக் காணச்செல்லல்.

வேறு விருத்தம்.

அந்தர டத்தார் வளந்தரு மயிலை
  யண்ணலைக் காணுறச் செல்லுவன் யானே
வந்தரு டத்துப் பெண்களெல் லோரும்
  வல்லவ ளேயிவ ளல்லவ ளென்றுச்
சிந்தைம கிழ்ந்தே வந்தனை புரிவார்
  சீருறு மன்னையு மதிசய மடைவா
ளிந்தவை போகத் தெனையமைத் தவனுக்
  கிருகரங் குவித்துத் துதியுரைப் பேனே. (1)

சுத்தத வத்தோர் வந்துறு மயிலைத்
  தூயனைக் காணுறச் செல்லுவன் யானே
மெத்தவ ருந்திய பெண்களெல் லோரு
  மிக்கவ ளேயிவள் தக்கவ ளென்றுச்
சித்தம கிழ்ந்தே வந்தனை புரிவார்
  செம்மைசெய் யன்னையு மதிசய மடைவா
ளித்தகை போகத் தெனையமைத் தவனுக்
  கிருகரங் குவித்துத் துதியுரைப் பேனே. (2)

எப்பெருந் தகையு மிலகிய மயிலை
  யிறைவனைக் காணுறச் செல்லுவன் யானே
செப்பென வுயருஞ் செம்முலை மடவார்
  தீக்குண மொழித்தென் னேக்கினை மதித்துத்
துப்புற வுடனே வந்தனை புரிவார்
  துக்கமற் றன்னையு மதிசய மடைவா
ளிப்பெரும் போகத் தெனை யமைத் தவனுக்
  கிருகரங் குவித்துத் துதியுரைப் பேனே. (3)

நச்சறு முளத்தா ருறைதிரு மயிலை
  நாதனைக் காணுறச் செல்லுவன் யானே
துச்சம றுத்துப் பெண்களெல் லோருந்
  தூயவ ளேயிவ ளாயின ளென்று
மெச்சிம கிழ்ந்தே வந்தனை புரிவார்
  மேவிடு மன்னையு மதிசய மடைவா
ளிச்சுக போகத் தெனையமைத் தவனுக்
  கிருகரங் குவித்துத் துதியுரைப் பேனே. (4)

செவ்வைசெய் யறங்க ளுயர்திரு மயிலைத்
  தேவரைக் காணுறச் செல்லுவன் யானே
ஔவியங் கடிந்தே பெண்களெல் லோரு
  மல்லல கிற்றிட வல்லவ ளென்றிங்
கொவ்வும னத்தால் வந்தனை புரிவா
  ருன்னுமென் னன்னையு மதிசய மடைவா
ளிவ்வகை போகத் தெனையமைத் தவனுக்
  கிருகரங் குவித்துத் துதியுரைப் பேனே. (5)

தலைவன் பதியைத் தலைவிகண் டுரைதல்.

வேறு விருத்தம்.

மட்டுறையாப் பொய்கைகளு மாமதிற்சூழ் கோபுரத்தை
விட்டுறையாச் சித்திரங்கள் வேறெங்குங் கண்டிலனே
கட்டுறையென் னுருயிர்க்கோர் காதலன்வாழ் நற்றலமாந்
தெட்டுறையு மாமயிலைத் திருவீதி கண்டேனே. (1)

பேரணியாய்க் கோகிலமும் பேதைமட மாதர்களும்
வீரமதாற் பேசுவதை வேறெங்குங் கண்டிலனே
தாரணியி லெனக்கின்பந் தருபவன்வாழ் நற்றலமாஞ்
சீரணியு மாமயிலைத் திருவீதி கண்டேனே. (2)

சோலைகளுஞ் சோலையுளே துள்ளிசைசொற் குயிலினமும்
வேலையுடை சூழ்புவியுள் வேறெங்குங் கண்டிலனே
கோலமிகு மென்னுயிருட் குலவுவன்வாழ் நற்றலமாஞ்
சீலமிகு மாமயிலைத் திருவீதி கண்டேனே. (3)

பத்தியுட னுத்தமரும் பாவலரும் பண்ணிசைசொல்
வித்தையினை யித்தலம்போல் வேறெங்குங் கண்டிலனே
யுத்தமமா மென்னுயிரி லுள்ளவன்வாழ் நற்றலமாஞ்
சித்தர்புகழ் மாமயிலைத் திருவீதி கண்டேனே. (4)

பண்ணுலவுஞ் செவ்விதழின் பாவையர்பற் களைநோக்கி
வெண்ணிலவும் பின்னடைதல் வேறெங்குங் கண்டிலனே
மண்ணிலவு மென்னுயிருண் மலிந்தவன்வாழ் நற்றலமாந்
திண்ணுலவு மாமயிலைத் திருவீதி கண்டேனே. (5)

தலைவி தோழியிடந் தலைவனது திறங்கூறல்.

வேறு விருத்தம்.

திருவார் கமலத் தடமெங்குஞ் சேலார் மயிலைப் பதியிடத்து
திகழா ரருளே திருவுருவாய்ச் சிறக்கும் புகழ்கொள் தேவரவர்
மருவார் கொங்கை மடவார்கள் மனத்தா லேத்திக் களியாட
மணிசேர் கொடியி னரசரெலா மகிழ்கொண் டாட வரும்பவனி
யுருவா ரெனது மனமுவக்க வோடிப் பெரும்பே ரானந்த
வுவரி யிடையே மூழ்கியெழுந் தோங்கு முறையாற் கண்டலது
பெருவாழ் வுடைய சகியேயென் பெற்றா ளுடனோர் மொழியேனும்
பேசேன் மைய லொழியேனுன் பிறிதொன் றினையும் பற்றேனே. (1)

நல்லார் வணங்கும் புகழெல்லா நயத்தா லேற்று மன்னியதொன்
னகரா ரெங்கும் பரவியரு ளுடும் மயிலைத் தேவரவர்
வல்லார் கொங்கை மடவார்கள் வந்தே துதித்துக் களியாட
வாய்மை யுடைய முனிவரெலாம் வணங்கா நிற்ப வரும்பவனி
சொல்லா ரெனது மனமுலவக்கத் துணிவி லோடி யானந்தச்
சுகவா ரிதியுண் மூழ்கியெழத் துதித்துப் பாடிக் கண்டலது
வில்லார் நெற்றி விழியாயென் விதன மொழியே னெடுந்திரைசூழ்
வேலையு றக்கங் கொண்டாலும் விழிமே லுறக்கங் கொள்ளேனே. (2)

மன்னும் புலவ ரிசையோங்க மலிந்தெங் கெங்கும் பெருந்திரளாய்
 வாழும் பெருமை நிறைகொண்டு வயங்கு மயிலைத் தேவரவர்
பின்னுஞ் சடையின் பெண்களெலாம் பிரியா திருந்து களியாடப்
 பிசகொன் றில்லா மறையோசைப் பெருகிச் சூழ வரும்பவனி
துன்னுந் தவஞ்சே ரென்னெஞ்சந் துணிய வோடி யானந்தச்
 சுகவா ரிதியுண் மூழ்கிநலஞ் சுகிக்கப் பாடிக் கண்டலது
மின்னும் பணிசே ரென்றோழி மிகநீண் மையற் றணியேன்விண்
 மேகக் குழையார் தம்மோடு மிகையா லொருசொன் மொழியேனே.

மணிகொண் மாட மாளிகையு மடைப்பள் ளிகளு நிறைந்துவள
 மலியும் புகழா லமரரெலா மன்னும் மயிலைத் தேவரவர்
திணிகொள் முலையின் பெண்களெலாஞ் சேரவி ருந்து களியாட்
 திறஞ்சேர் தவத்து முனிவரெலாஞ் சேவித் தேத்த வரும்பவனி
துணிகொ ளெனது மனமுவக்கத் துணிவா லோடி யானந்தச்
 சுகவா ரிதியுண் மூழ்கிவரந் தோன்றப் பாடிக் கண்டலது
பணிகொண் முலையாய் தண்ணீரும் பருகேன் மற்றுஞ் சுகமெல்லாம்
 பாரேன் றுயிலுங் கொள்ளேனற் பாயிற் படுக்கைப் பொருந்தேனே.

திடஞ்சேர் பசிய பொன்போலுந் தேமற் படர்ந்த முலைமடவார்
 சேர்த்த மணங்கள் வீதியெலாந் திகழ்மா மயிலைத் தேவரவர்
நடஞ்சே ரியலின் பெண்களெலா நாடிப் பாடிக் களியாட
 நலங்கொ ளமரர் பெருங்கூட்ட நயத்தாற் போற்ற வரும்பவனி
மடஞ்சே ரெனது மனமுவக்க மன்றே வோடி யானந்த
 மகிழ்வாங் கடலுண் மூழ்கியெழ மனத்தா லேத்திக் கண்டலது
குடஞ்சேர் முலையாய் பணமலரைக் குழலிற் சூடேன் சிற்றுணவுங்
 கொள்ளேன் மயலுந் தணியேனென் குலத்தா ரோடும் பேசேனே.

தலைவனது திருவுலா வியப்பைத் தலைவி தோழியுடன் கூறல்.

வேறு விருத்தம்.

சீருடையா ரணியுடையார் செஞ்சடைமேற் பிறையுடையார்
 திகழுடையார் புகழுடையார் தேவர்மனந் தமர்வுடையார்
பேருடையார் மறைநான்கும் பேசுமருட் டிறமுடையார்
 பெருவுடையா ருருவுடையார் பிறங்கியவெண் ணீறுடையார்
வாருடையார் மாமயிலை வாழ்வுடையார் திருப்பவனி
 வந்தார்வந் தாரென்றே வாய்மொழிந்தார் மொழிவதற்குள்
நேருடைநற் சகியோநா னிலைமயங்கித் தவிப்பவெனை
 நிற்கவைத்திங் கவர்முன்னே நெஞ்சமது சென்றதுவே. (1)

குணமுடையா ருலகேத்துங் குலமுடையா ரருள்வழங்குங்
 கொடையுடையார் நடையுடையார் கொல்புலித்தோன் மேலுடையார்
திணமுடையார் முத்தொழிலாஞ் செயலுடையா ரெல்லாஞ்செய்த்
 திண்ணுடையார் வெண்ணீற்றுத் திகழுடையார் புகழுடையார்
வணமுடையார் மாமயிலை வாழ்வுடையார் திருப்பவனி
 வந்தார்வந் தாரென்றே வாய்மொழிந்தார் மொழிவதற்குள்
மணமுடைசெங் குழலாய்நான் மதியிழந்துத் தவிப்பவெனை
 மயக்கிவைத்திங் கவர்முன்னே மனம்விரைவிற் சென்றதுவே. (2)

குலமுடையா ரருளளிக்குங் குணமுடையார் சதுர்மறையின்
கோவணத்தார் மாவணத்தார் குலவுமெழின் முத்தியெனுந்
தலமுடையா ரெல்லாஞ்செய்த் தகையுடையா ரென்னகத்துத்
தழைத்துடையார் நல்வரத்தின் றயையுடையார் மேலான
வலமுடையார் மாமயிலை வாழ்வுடையார் திருப்பவனி
வந்தார்வந் தாரென்றே வாய்மொழிந்தார் மொழிவதற்குள்
கலமுடையென் சகியேயான் கலங்கியுளங் குழையவெனைக்
கைவிட்டிங் கவர்முன்னே கன்மனமுஞ் சென்றதுவே. (3)

விழியுடையா ரெல்லாஞ்செய் விதமுடையா ரருட்சோதி
விளக்குடையார் களக்கமிலார் வேண்டுமெவர்க் களித்திடும்பொற்
கிழியுடையார் வெண்மயமாங் கிரியுடையா ரன்பருக்குட்
கேளுடையா ரென்மனதைக் கேதனமாக் கொண்டருளுர்
வழியுடையார் மாமயிலை வாழ்வுடையார் திருப்பவனி
வந்தார்வந் தாரென்றே வாய்மொழிந்தார் மொழிவதற்குட்
பழியடையாச் சகியேநான் பரதவித்துக் கலங்கவெனைப்
பற்றறவிட் டவர்முன்னே பாழ்நெஞ்சஞ் சென்றதுவே. (4)

தகையுடையார் வரமளிக்குந் தயவுடையார் கற்பகமாத்
தருவுடையார் பெருவுடையார் தாவியவின் டலத்தவராந்
தொகையுடையா ரெல்லாஞ்செய்த் துணிவுடையார் மறையிசைக்குந்
துதியுடையார் நிதியுடையார் சொல்லருஞ்சீ ரருளுடையார்
வகையுடையார் மாமயிலை வாழ்வுடையார் திருப்பவனி
வந்தார்வந் தாரென்றே வாய்மொழிந்தார் மொழிவதற்குள்
நடையுடைநற் சகியேநா னலமிழந்துத் தவிப்பவெனை
நழுவவிட்டிங் கவர்முன்னே நாடிமனஞ் சென்றதுவே. (5)

தலைவன் திருவுலாவைக்கண்ட தலைவி தனக்கு நேர்ந்த இச்சையைக்கூறல்.

வேறு விருத்தம்.

அரைக்கருங் கீர்த்தி யெல்லா மணிர்தமா மயிலைத் தேவர்
விரைக்கொளும் பவனி தன்னை மேரிழை யார்க ளோடுங்
குரைக்கொளு முவப்பிற் சென்று குணம்பெறத் தொழுது கண்டே
னுரைக்கரு மிச்சை யேயென் னுருவென நிலைத்திட் டேனே. (1)

மின்னுமெய்த் தவத்தோ ரென்று மேவுமா மயிலைத் தேவர்
மன்னிய பவனி தன்னை மாதர்க ளோடுஞ் சென்று
நன்னலக் குறிப்பாற் கண்டே னழுவிநற் றுகிலுஞ் சோர
வுன்னரு மிச்சை யேயென் னுருவென நிலைதத்திட் டேனே. (2)

தீங்கறு முளத்தோர் சூழுஞ் சிறப்புடை மயிலைத் தேவர்
தாங்கிய பவனி தன்னை தாதிய ரோடுஞ் சென்று
பாங்குடன் கண்டேன் காமம் பற்றிய வேகத் தாலிங்
கோங்கிய விச்சை யேயென் னுருவென நிலைத்திட் டேனே. (3)

தவப்பயன் வேண்டி விண்ணோர் தங்கிய மயிலைத் தேவர்
நவப்புகழ் பவனி தன்னை நங்கைய ரோடுஞ் சென்று
பவப்பழி நீங்கக் கண்டேன் பைங்குழை சோர்ந்த தன்றி
யுவப்புறு மிச்சை யேயென் னுருவென நிலைத்திட் டேனே. (4)

மதித்தபற் புகழார் வந்து மன்னிய மயிலைத் தேவர்
கதித்தசெம் பவனி தன்னைக் காரிகை யாரோ டேகி
விதித்தநன் முறையாற் கண்டேன் வேற்றிட நினைத்தற் கின்றி
யுதித்ததோ ரிச்சை யேயென் னுருவென நிலைத்திட் டேனே. (5)

தலைவி தலைவனிடத் தன்னங்களைத் தூதாகச் செல்ல விடுத்தல்.

வேறு விருத்தம்.

செம்பா லெனவெண் ணிறஞ்சூ ழவெழிற்
  றிகழோங் கியநல் லனங்காள் சரணம்
வெம்பா தகமன் மதனுக் கிரத்தால்
  வீசுங் கணைபட் டுடல்வா டினன்யா
னெம்பாற் றயைவைத் துவிளங் கியசீ
  ரிதஞ்சேர் மயிலைப் பதியா ரிடஞ்சென்
றும்பா லொருகன் னிகையாண் மயல்வைத்
  துருகா நின்றா ளெனவோ துமினே. (1)

செந்தா மரைமீ துறைகொண் டுமெழிற்
  றிறமோங் கியநல் லனங்காள் சரணம்
வெந்தா மதமன் மதனுக் கிரத்தால்
  விழ்க்துங் கணையா லுடல்வா டினன்யான்
சிந்தாத் தயைவைத் துவளங் திகழுந்
  திருமா மயிலைப் பதியா ரிடஞ்சென்
றுந்தா விளைகொண் டொருகன் னிகையா
  ளுருகா நின்றா ளெனவோ துமினே. (2)

செம்மைப் பெறுஞ்சோ லையுளே கியவெண்
  சிறைகொள் ளனங்காள் சரணஞ் சரணம்
வெம்மைக் குணமன் மதனுக் கிரத்தால்
  வீழ்த்துங் கணையா லுடல்வா டினன்யான்
விம்மு மென்பாற் றயைவைத் துயர்வின்
  விதங்கொள் மயிலைப் பதியா ரிடஞ்சென்
றும்மே லொருகன் னிகையாண் மயல்வைத்
  துருகா நின்றா ளெனவோ துமினே. (3)

துன்னு பரணப் புயமங் கையர்தஞ்
  சுகநன் னடைகொள் ளனங்காள் சரண
மொன்னு ரெனமன் மதனுக் கிரத்தா
  லுறுத்துங் கணையா லுடல்வா டினன்யா

னென்னு விபிழைத் திடவிங் கிசத்தி
　　னெழிலார் மயிலைப் பதியா ரிடஞ்சென்
றுன்னு சையினு லொருகன் னிகையா
　　ளுருகா நின்று ளெனவோ துமினே. (4)

தின்னார்ந் தவெழிற் றிருநீ றெனவெண்
　　சிறைகொள் ளனங்காள் சரணஞ் சரணம்
புண்ணு கிடமன் மதனுக் கிரத்தாற்
　　புகுத்துங் கணையா லுடல்வா டினன்யான்
தண்ணார்ந் திடுநன் மொழியா லுயருந்
　　தகைசேர் மயிலைப் பதியா ரிடஞ்சென்
றுன்னு தொருபெண் ணும்மேல் மயல்வைத்
　　துருகா நின்று ளெனவோ துமினே. (5)

தலைவி தோழியிடந் தன் காதலைச் சொல்லி யிரங்கல்.

வேறு விருத்தம்.

தவமேப டைத்து மணிமந்த்ர மாதி தகையாய ணிந்த வமரர்
　　தங்குற்ற மைலை நகராள ரென்னை சதிசெய்த சேதி கண்டிங்
கவமேப டைத்த மடவாரெ லோரு மடமுற்றி கழ்ந்து ரைத்தா
　　ரலர்தூவி மார னொலைவந்து வாட்டி யதிமோக மாக்கி வைத்தான்
பவமேயி தென்ன நினையாது திங்கள் பகல்போலெ ரிந்து நின்றான்
　　பாரோர்ந கைக்க வகைதேடி யானும் பன்னுடை நழுவ லுற்றேன்
நவமேவி ளைத்த மடவாயென் றோழி நான்முன்பு செய்த தவமோ
　　நடுவேது மின்றி யயனென்சி ரத்தி னூட்டிப்ப தித்த விதியோ. (1)

திருவீதி யெங்கு மறையோசை யோடு திகழ்ஞான கலைபி றையுஞ்
　　சேர்கின்ற மைலை நகராள ரிங்கு திரும்பாத சேதி கண்டு
வருவீதி மாத ரடம்வைத்தி கழ்ந்து வசையேமொ ழிந்து சென்றார்
　　வழியற்ற மார னென்மேலெ திர்த்து வளரம்பு மேவ வைத்தா
னொருவீதி சுற்று மதியோனெ ழுந்தெ னுடலைக்க ரித்து நின்றா
　　னுலகோர்பழிக்கு வகைதேடியானு முடைசோர்வு கொள்ள லுற்றேன்
பெருவீதி மெச்சு நடைகொண்ட தோழி பெற்றோரி ழைத்த தவமோ
　　பிழையாக முன்ன மயனென்சி ரத்திற் பெரிதாய்ப்ப தித்த விதியோ.

ஏருற்ற சாலை கவிபாடு வோர்க ளிசையுற்ற சாலை யணிக
　　ளேந்துற்ற மைலை நகராள ரென்னை யெண்ணாத சேதி கண்டு
வாருற்ற கொங்கை மடவாரெ லோரும் வசையாலி கழ்ந்து ரைத்தார்
　　வடிவுற்ற மார னென்மேற்ப ருத்த வல்லம்பு மேவ வைத்தான்
சேருற்று வந்து படுபாவி திங்க ளொடுநோழி காய்ந்தெ ரித்தா
　　னிலத்தோர்ப ழிக்க வகைதேடி யானு நீளாடை சோர நின்றேன்
பாருற்ற கீர்த்தி யணிகின்ற தோழி படிமீதில் யான்செய் தவமோ
　　பழிகார பாவி யயனென்சி ரத்திற் பலமாய்ப்ப தித்த விதியோ. (3)

நெற்கோரை யிர்க்கு மொருமேதி வாயி னீள்முத்து திர்க்கும் வீதி
நீடுற்ற மைலை நகராளு ரென்னை நினையாத சேதி கண்டு
நற்கோக யத்து முகமாத ரோச்சு நவிலத்து ணிந்து கொண்டார்
நமனுக மார னம்பேவி யென்னை நலிகொண்டி ருக்க வைத்தான்
சிற்கோழை யின்றி மதிவந்து வெய்ய தீப்போலெ ரிந்து நின்றான்
தெருவோர்ப ழிக்க வகைதேடி யானுஞ் செயலற்று வாட லானேன்
வற்கோகிலத்தி னிசைகொண்ட தோழி வழியின்றி செய்த தவமோ
வம்புற்று முன்ன மயனென்சி ரத்தில் வாளாய்ப்ப தித்த விதியோ.

மணியேப தித்த தூணொன்று பத்து மவிவாற் சிறந்த மனைகண்
மன்னுற்ற மைலை நகராள ரென்னை மருவாத சேதி கண்டு
பணியே யணிந்த முலைமாத ரேச்சு பகரத்து ணிந்து கொண்டார்
பழிகார மார னனியாய மாக பாழான கணைதொ டுத்தான்
திணியேப டைத்த மதிவந்தெ ரித்து தேகத்தை வாட்டி வைத்தான்
சில்லோர்ப ழிக்க வகைதேடி யானுஞ் செக்கூந்த லவிழ நின்றேன்
பிணிவந்தி டாத குலத்தாயென் றோழி பெற்றாளி ழைத்த தவமோ
பேதுற்று முன்ன மயனென்சி ரத்திற் பிழையாய்ப்ப தித்த விதியோ.

தாய் தலைவனை யிகழ்ந்துத் தலைவியைத் தேற்றல்.

வேறு விருத்தம்.

பித்தனெனும் பேரெடுத்தார் பேயோடா டித்திரிந்தார் பிகவீ தென்று
பெரியவிடந் தனையுண்டு நீலகண்ட முடையோராய்ப் பிழையெண் ணுமற்
பத்தர்தமக் கிசைந்துபணி செய்திடுவார் பெரும்பாம்பைப் பணியாக் கொண்டார்
பரிவாகப் பூதகணத் தோடுநடித் தார்மதனைப் பஸ்ப மாக்கு
வித்தனரோர் கரியுரியை யணிந்தார்மற் றிதுசெய்யும் விதத்தான் முன்பு
விளங்கியமண் ணோட்டினைவஞ் சனையாக மறைவாக்கி விரைவிற் சென்று
சித்தமெலாங் கலங்குவர்போ லபிநயித்து வழக்குரைத்தார் தீமை யெண்ணார்
திருமயிலைப் பதியாரை நீவிழைத லென்மகளே சிறப்பி தன்றே. (1)

உதிருக்கு மண்சுமந்தா ரங்கேயுங் குற்றமிழைத் துடம்பு நோக
வுறத்தவடிப் பட்டுடலம் வருந்தினா ரதுதானே யொருவன் முன்னே
குதிரைவிற்ற பணங்களெல்லாங் கொள்ளைகொண்டா ரவ்வூருங் குடியாக்கொள்ளார்
கொற்புலியும் பாம்புமெச்ச வொருகாலைத் தூக்கிமெள்ளக் குதித்து நின்று
றெதிர்த்தமத னைச்சவமாக் கிடப்பயந்து கண்விழித்தா ரிதுவு மன்றி
யெழிலாரு முப்புரத்தை யெரித்திடற்கு வகையொன் றுமில்லா தாலே
முதிர்பபோடு நகைபுரிந்தார் சாக்கியர்விட் டெறிந்தகல்லு மோதப் பெற்றார்
முறைமயிலைப் பதியாரை நீவிழைத லென்மகளே மோசந் தானே. (2)

கல்லாலு மடிபட்டா ரடித்தவனை நல்லவனாய்க் கருதிக் கொண்டார்
காலாலு முதைபட்டா ருதைத்தவனைத் தொண்டனெனக் கண்டா ரன்றி
வில்லாலுந் தாக்குண்டார் தாக்கியவன் றனைக்கண்டு வியந்து நின்றார்
விளையாட்டுப் புத்தியினாற் காளியொடு நிருத்தமிட விரும்பி னார்மற்
றெல்லாரும் பரிகாசம் புரிந்திடற்குக் கோவணமே யிடையி லிட்டா
ரெரிந்தபிணச் சாம்பறனை தேகமெலாம் பூசியன்ன மிறந்துண் டெங்கும்
பொல்லாத பேரெடுத்தார் பித்தமடைந் தவர்போலப் போவார் நிற்பார்
புகழ்மயிலைப் பதியாரை நீவிழைத லென்மகளே போத மன்றே. (3)

கருதுவசை வெளிக்கெழுந்தார் ஈரறுக வகைபனைத்துங் காட்டி வைத்தார்
கனத்தமுடி மேலொருபெண் றனைவைத்துத் திரிந்திடுவார் கனிவொன் றில்லார்
திருதியென மலைமகளைத் திருமணங்கொண் டடியர்தமைத் தெருவில்விட்டார்
திருமாலை கழுத்திலிட்டா ரஃதெலும்பென் றறிந்துபலர் சிறிக்க வாறு
றொருதொன்றைக் கிரயமின்றி வாங்கியுளா ரதுபோலு லென்செய் வாரோ
விதுவுமன்றி முன்னொருநாள் கௌரியிடங் கிழவனென வேகி பின்னை
ரிருதடைய குமாரனுரு வாய்க்குழவி வடிவாக விருந்தார் மற்றிவ்
கெழின்மயிலைப் பதியானை நீவிழைத லென்மகளே யேச்சுத் தானே. (4)

ஊரில்லார் பொருளில்லார் பணியில்லா ரணியில்லா ருண்ணு தற்கோ
ருணவில்லார் குணமில்லார் வணமில்லா மணமில்லா ருயர்வ தாகும்
பேரில்லா ருறவில்லா ரெவ்விடத்து முடலெடுத்துப் பிறந்து மில்லார்
பெயரில்லார் நயமில்லார் பயமில்லா ரெந்நாளும் பெரிதா யெண்ணுஞ்
சீரில்லா ரெம்மொழியும் பேசியிலா ரெவ்விடத்துஞ் செல்வார் மற்றுச்
செம்மையிலார் நன்மையிலார் தன்மையிலா ரெத்தகையச் சிறப்புமில்லார்
நேரில்லா ரிதுதகுதி யென்றோய்ந்து செயுநீதி நெறியு மில்லார்
நெடுமயிலைப் பதியாரை நீவிழைத லென்மகளே நெருக்கந் தானே. (5)

தலைவி தாய்சொற்கடிந் தெதிர்மறுத்தல்.

வேறு விருத்தம்.

பண்ணவனார் மனைகடோறும் பலியிறந்தா ரென்றாலுந்
திண்ணமிலா திடுகாட்டிற் றிரிந்தலைந்தா ரென்றாலு
மண்ணலவ ரம்பலத்தி லாடெடுத்தா ரென்றாலுங்
கண்ணுடையார் மயிலையரன் காதலதை மறவேனே. (1)

கோதடையார் மண்சுமந்து கூலிபெற்றா ரென்றாலுந்
தீதடையார் பணத்தூது சென்றுழன்றா ரென்றாலும்
வாதடையார் வில்லடியின் வடுக்கொண்டா ரென்றாலு
பேதடையா மயிலையர னிச்சையதை மறவேனே. (2)

ஏருடையார் கழுத்தில்விட மிருக்கவைத்தா ரென்றாலுஞ்
சீருடையார் பாம்பணியே சிறந்தணிந்தா ரென்றாலும்
பாருடையார் நமன்முடிமண் படவுதைத்தா ரென்றாலும்
வாருடையார் மயிலையரன் வாஞ்சையதை மறவேனே. (3)

வாழ்வுடையார் மாடேறி வந்துழன்றா ரென்றாலுந்
தாழ்வடையா ரின்பதுன்பந் தான்வேண்டா ரென்றாலு
மூழ்வையறப் பார்பேய்க ளுடனிருந்தா ரென்றாலுங்
காழ்வடிவார் மயிலையரன் காமமதை மறவேனே. (4)

மான்கரத்தா ரென்றாலு மலையிடத்தா ரென்றாலுந்
தேன்கமழுஞ் செங்கொன்றைத் திருமுடியா ரென்றாலும்
வான்கணைத்தா ரெனைச்சேர வகையில்லா ரென்றாலுங்
கான்களஞ்சூழ் மயிலையரன் காதலதை மறவேனே. (5)

தலைவி தனதாற்றாவிரகத்தைத் தோழியிடங் கூறல்.

வேறு விருத்தம்.

முத்தார்மணி யுடையாயுயி ரிணையாகுமென் றோழி
முப்பதேமு மில்லார்தவ முனிவோர் துதியரனு
ரெத்தார்புகழ் மயிலாபுரி யிறையோனிட மேவி
யெழிலோங்கிய வையாவெனை யணைவீரெனச் சொல்வேன்
வித்தாரநற் புகழார்வள ரிகத்தார்பரச் சுகத்தார்
விண்ணாடுடை திறத்தாருளங் கனியாதெனை வெறுத்தால்
கொத்தாகிய பணிநீடிடும் புயத்தார்மட மின்னார்
குறைகூறிட வருவார்செயும் வகையொன்றறி யேனே. (1)

திண்ணார்மொழி யுடையாயுயி ரொப்பாகுமென் றோழி
திருவாழ்சடை முடியாரருட் டிரள்கொண்டநற் றகையார்
பண்ணார்தரு மயிலாபுரி யானாரிட மேவி
பசுநீடிய வையாவெனை யணைவீரெனச் சொல்வேன்
வண்ணாடிடும் புகழாரணி வளத்தார்மகி ழுளத்தார்
வகையோங்கிய திறத்தாருளங் கனியாதெனை வெறுத்தா
லெண்ணாதபற் சுகத்தார்மணி யிடையார்மட மின்னா
ரிகழ்கூறிட வருவார்செயும் வகையொன்றறி யேனே. (2)

திருவாருரை மொழிவாயுயிர்த் துணையாகுமென் றோழி
செல்லாதவ ரிடத்தேயொரு செயலாயினும் புரியார்
மருவார்திரு மயிலாபுரி வருவோனிட மேவி
மகிழ்நீடிய புகழீரெனை யணைவீரெனச் சொல்வேன்
பெருவாழ்வினி லுவப்பார்பிணி தவிர்ப்பார்குண முடையார்
பேசாதடந் தொடுத்தேயுளங் கனியாதெனை வெறுத்தா
லொருவாழ்வினு ளுடையாரன நடையார்மட மின்னா
ரொழியாதெனைப் பழிப்பார்செயும் வகையொன்றறி யேனே. (3)

குலந்தாவிய புகழாயருங் குணந்தாவுமென் றோழி
கொடைதாவிய நெறியார்துதி கூறச்சுக மருள்வார்
நலந்தாவிய மயிலாபுரி யானாரிட மேவி
நதிதாவிய சடையீரெனை யணைவீரெனச் சொல்வேன்
வலந்தாவிய புயத்தார்பல வகைதாவிய ஜயத்தார்
வளமாமுகஞ் சிறத்தேயுளங் கனியாதெனை வெறுத்தால்
தலந்தாவிய பொன்னேயணி யிடையோங்கிய மின்னார்
தகையாலெனைப் பழிப்பார்செயும் வகையொன்றறி யேனே. (4)

நடத்தாவிய லுடையாயமணி நகைகூடிய தோழி
நலத்தார்வளர் புலத்தார்புய வலத்தார்படைக் கலத்தா
ரிடத்தாலுயர் மயிலாபுரி யெழிலோனிட மேவி
யிணைவந்துறு துணைவாவெனை யணைவீரெனச் சொல்வேன்
திடத்தாரரு ளுடைத்தாரணி யுடைத்தார்பணி யுடைத்தார்
திசைவெள்ளள வெனினூரமுளங் கனியாதெனை வெறுத்தாற்
குடத்தாவளி முலையார்நல நிலையார்மட மின்னார்
குறிப்பாலெனைப் பழிப்பார்செயும் வகையொன்றறி யேனே. (5)

தலைவி கிளிகளை விளித்துத் தலைவனிடந் தூதாகவிடுத்தல்.

வேறு விருத்தம்.

கச்சலக் குளழயார் தங்களுக் கினிமை காட்டிடு மொழியுடை கிளிகாள்
கனிவுறுங் குணத்தீர் நெறியற முடைந்தீர் கஞ்சமெல் லிதழ்நற வுண்பீர்
வச்சறு மூன்று கனிகளும் விளைந்து வாகுறு மயிலையம் பதிக்கு
வடிவுடை நீங்கட் சென்றிடி லென்மேல் வாஞ்சையுற் றொருசெயற் புரிவீர்
மிச்சைவந் தறியாத் தவத்தினர் சூழ்ந்து மிகுதிரட் கூடிடுங் குழுவுண்
மின்னிய சடையார் வெண்மதி யுடையார் மேதினி யோர்தொழ வருவார்
விச்சைகொ ளவர்பா லின்மொழி வளத்தால் விளக்குறுந் துதிநலந் திகழ
வீரகமுற் றியயா ணழைத்தன னென்றும் விளம்புமின் விளம்புமி னிதுவே.

தெண்டிரை புடைசூ முலகினிற் சிறப்பைத் தேடிய நன்மொழி கிளிகாள்
தீங்கறு குணத்தீர் பைஞ்சிறை யுடையீர் தீஞ்சுவைக் கனிகளை யுண்பீர்
வண்டிமிர் சோலை யெங்கெனும் பரந்து வளர்தரு மயிலையம் பதிக்கு
வாழ்வுடை நீங்கட் சென்றிடி லென்மேல் வருத்தமற் றொருசெயற் புரிவீர்
தண்டமி ழிசைகள் பாடிடும் புலவர் தங்கிய மிகுதிரட் குழுவுள்
தசையமர் சடையார் வெள்விடை யுடையார் தாரணி யோர்தொழ வருவா
ரெண்டிசைக் கருளு மவர்பதம் பணிந்திங் கெளியவர் போற்றனி வருந்தி
யிருக்குமென் காம மற்றிட வழைத்தே னென்றுரை வழுத்துமி னிதுவே.

பண்ணியன மதுரச் செம்மொழிமடவார்ப் பயிற்றுநன் மொழியுடைக் கிளிகாள்
பண்புறு குணத்தீர் நண்புறு வலத்தீர் பைங்கனி மதுதனை யுண்பீர்
புண்ணியஞ் செழித்துக் கொடிபடர்ந் தோங்கிப் புகழ்பெறு மயிலையம் பதிக்கு
பொய்யறு நீங்கட் சென்றிடி லென்மேற் புரைதரு மொருசெயற் புரிவீ
வெண்ணியற் பொடிகள் பூசிய வடியார் விண்ணவர் கூடிய சபையுள்
வெண்மதி முடியார் திண்ணுயர் சடையார் வியன்புவி யேத்திட வருவார்
கண்ணுத லவர்தங் கழலினைத் தொழுது காதல்கொண் டொருசிறு மின்னாள்
கனிவுட னும்மை யழைத்தன ளென்றுங் கழறுமின் கழறுமி னவர்க்கே.

கரும்பினை யொடித்துக் காய்ச்சிய ரசத்திற் காணுறுஞ் சுவைமொழி கிளிகாள்
கனம்பெறுங் குணத்தீர் மனநிலை யுடைத்தீர் காவினி லுறுமது வுண்பீர்
வரும்பய னுணர்ந்து நல்வினை யிழைக்கும் வளமுடை மயிலையம் பதிக்கு
வகையுடை நீங்கட் சென்றிடி லென்மேல் வசம்பெறு மொருசெயற் புரிவீர்
விரும்பிய தவத்தோர் நீறணி புயத்தோர் விளங்கிடும் பெருஞ்சபை யிடத்து
வித்தகச் சடையார் பத்தருக் கருள்வார் விண்ணவர்ப் பணிந்திட வருவார்
பெரும்புகழ்க் கருணை செயுமவர் மலர்த்தாள் பிடித்தொரு கன்னிகை யும்மேற்
பிரிக்கரு மயல்வைத் தழைத்தன ளென்றும் பிழையறக் கூறுமி னிதுவே.

நலமலி யுள்ளத் தாரகமெனத் தூய்மை நாட்டிநற் புகழ்கொளுநங் கிளிகாள்
நடைநலக் குணத்தீர் தடையறுந் திடத்தீர் நளினசெந் நறவதை யுண்பீர்
பலநலச் சோலை வானுற வோங்கிப் படர்தரு மயிலையம் பதிக்குப்
பண்புடைநீங்கட் சென்றிடி லென்மேற் பாசம்வைத் தொருசெயற் புரிவீர்
தலநலச் சுகங்க ளனைத்தையு மாய்ந்தத் தவத்தினர் வருபெருங் குழுவிற்
றகைபெறு சடையார் தனித்தவெள் விடையார் தனையவ ரேத்திட வருவார்
வலமலி யவர்தஞ் சேவடி யதனை வணங்கிநற் றுதியொடு காம
வனமலி யானிங் கழைத்தன னென்றும் வாகுடன் வழுத்துமி னிதுவே,

தலைவி தலைவனது முற்செயற்றிறங்கூறல்.

வேறு விருத்தம்.

ஆவித் துணையென நின்றிடு வான்மயி லாபுரியில்
மேவிச்சு கந்தரு நித்தநி ராமய ழீப்புகழான்
காவிக்க ருவிழி நீர்முடி யான்சுரர் காதலுடன்
தாவத்த யையருள் வானெனக் கேமயற் றந்தனனே. (1)

கொல்லுங்க ரியுரிப் போர்த்திடு வானருட் கொண்டடியார்க்
கல்லுப்ப கலும ளித்திடு வான்மயி லாபுரிவாழ்
வல்லவ னென்னைம ணந்திட வேமண வாளனெனச்
சொல்லிவந் திங்கிருந் தானெனக் கேமயற் றோன்றியதே. (2)

முற்றுந்து றவற மாகிலை கொண்டமு னிவரெலாம்
பற்றும்பு கழ்மயி லாபுரி வாழ்கின்ற பண்ணவனின்
புற்றென்ம னையகத் தேவந்தி ருந்தன னெங்குழித்தை
கற்றவ னென்றறி யேனுப சாரங்கட் காட்டினனே. (3)

தஞ்சங்க லந்தநற் றையலர் வந்துறுந் தண்மயிலைப்
பிஞ்சக னன்பர்பி ணியற வோட்டிடும் பேரருளார்
வஞ்சங்க லந்தமொ ழியொடு வந்தென்வ ளைகழுவ
நெஞ்சைக்க ரைத்தனர் கானதைச் சூதாய்நி னைத்திலனே. (4)

வாசத்த மிழ்வள மோங்கிவ ளந்தரும் வண்மயிலை
யீசர்கங் காநதி யைச்சடை மீதிலி ருக்கவைத்தென்
பாசமு டைத்தவர் பேலும பிநயம் பண்ணிவந்தார்
நேசமு டனவர் பக்கனின் றேனுடன் நீங்கினரே. (5)

தலைவி தலைவனது திருவுலாவைக்கண்டு மீண்டுங் காணாளாய் அதிசயித்துத் தோழியிடங்கூறல்.

வேறு விருத்தம்.

வண்டே யிசைக்கும் பூங்குழன் மடவார் வந்தொரு துதிசொலி வாழ்த்துரைப்பத்
தண்டேன் சிந்தும் பொழிற்சூழ் மயிலைத் தலத்தவ ரிங்குவந் தோரருளைக்
கொண்டே யார்க்கு நல்வர மீயுங் குறிப்பினிற் பவனிவந் தனர்சொல்லோ
கண்டேன் மறைந்தா ரீதென் னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. (1)

சொல்லக முடையார் தூய்மையு முடையார் தொழுபவர்க் கருடருங் கருணையினர்
நல்லக முடையோர் வாழ்திரு மயிலை நற்பதி தனில்வரு நாயகனார்
பல்லணி மேவப் பவனிவந் தனர்கொற் பார்த்தனன் பார்த்தது மறைந்திட்டார்
கல்லக முலையா யீதென் னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. (2)

சொற்பயனுடையார் வெண்மதிசடையார் தூயருணிறைந்திடும் வலத்தார்கொற்
பற்பல வளமு மோங்கிய மயிலைப் பதியுடை யென்னுயிர்த் துணைவரவர்
விற்பன வணத்தார் பவனிவந் தனர்கொல் விழைவொடு கண்டனன் மயலுற்றேன்
கற்பகக் குழையா யீதென் னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. (3)

எண்ணிய பலவு முடிவுறக் காட்டி யென்னுயிர்க் குயிரென வமர்ந்திடுவார்
திண்ணிய நலங்கள் வளர்தரு மயிலைத் தேவரென் றெவர்களுந் துதிபுரியும்
புண்ணிய வடிவார் பவனிவந் தனர்சொற் புகழ்பெறக் கண்டனன் றுகிலிழந்தேன்
கண்ணிய மொழியா யீதென் னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. (4)

சிலையுறு வணிந்த மென்னடை மடவார் நீந்தமி ழிசையொடு நடஞ்செயுநன்
னிலையுறு வேத மோதுமந் தணர்க ணீட்செயற் புரியவுஞ் சுரரெல்லாம்
மலையெனத் திரண்டு வருந்திரு மயிலை மன்னவர் பவனிகண் டேனிதற்குட்
கலையுறி விழந்தே னீதென் னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. (5)

தலைவி தோழியைத் தலைவனிடந் தூது செல்லவேண்டுதல்.

வேறு விருத்தம்.

நம்பும டியவர்க் கன்பருள் வார்திகழ் நதிமதி யைச்சடை மீதணிவார்
வெம்பும னத்தினர்க் கின்பமு ழைத்திட விடளிப் பார்மயி லைப்பதியார்
தம்பதத் தாமரை யைத்தொழு தெத்தியென் றன்மைய னைத்தையுஞ்சொல்லிச் சொலி
யம்புதி ருத்தும்வி ழிமட வாயென தன்பரை யின்றிங்க ழைத்திடுமே. (1)

பொன்னிற்பொ லிந்தபு யத்தழ கார்சுகப் போகம ளித்திடும் வித்தகத்தார்
தன்னிற்சி றந்தவ ரில்லையென் றெங்கெணுந் தான்றனி யாகிய மீப்புகழார்
மன்னும வர்திருப் பாதத்தை யேத்தியென் மையல னைத்தையுஞ் சொல்லிச்சொலி
யன்னம்ப ழித்தந டையுடை யாயென தன்பரை யின்றிங்க ழைத்திடுமே. (2)

ஞானஞ்சி றந்தபு கழா ளர்கலை ஞானம ளித்தத்தி கழாளர்
கோலஞ்சி றந்த மணிப்புயத் தாரெழிற் கூடம யிலைப்ப தியாளர்
சீலஞ் சிறந்தவ ளாயவர் சேவடி சேவித்தென் குறையைச் சொல்லிச்சொலி
யாலஞ் சிறந்தவி தழுடை யாயென தன்பரை யின்றிங்க ழைத்திடுமே. (3)

வல்ல சுரர்கள்ப் ணிந்திட வந்தருள் வண்ணுடை யார்நெற்றிக் கண்ணுடையார்
நல்லம ணம்வளர் மாமயி லாபுரி நற்பதி யாரொரு கற்பகத்தார்
வெல்லும வரடி யைத்தொழு தேத்தியென் விதம னைத்தையுஞ் சொல்லிச்சொலி
யல்லல றுக்குமொ ழியுடை யாயென தன்பரை யின்றிங்க ழைத்திடுமே. (4)

விற்பனந் தந்தமுக் கண்ணுடை யாரெழில் விண்ணுடை யாரும் பண்ணுடையார்
பொற்பதந் தந்திடு மீப்புக ழார்சுகப் போதுவ ளர்மயி லாபுரியார்
கற்பகந் தந்தக ரத்தர வர்தமைக் கண்டென்கு றையினைச் சொல்லிச்சொலி
யற்புதந் தந்தவி யலுடை யாயென தன்பரை யின்றிங்க ழைத்திடுமே. (5)

பாங்கி தலைவி பெற்றியுரைத்துத் தலைவனை யழைத்தல்.

வேறு விருத்தம்.

சித்த முந்துனை நீயெனச் சொல்லுவா
ளத்த னேயென தாருயி ரேயென்பாள்
சுத்த னேமயி லாபுரித் தூயனே
சித்த முற்றுத்தி ருவருட் செய்யவே. (1)

நின்ம லா துணை நீயெனச் சொல்லுவாள்
சின்ம யாவெனைத் தேற்றுவை யேயென்பாள்
நன்மை நீண்மயி லாபுரி நாதனே
வன்ம னங்கலை யாததென் வஞ்சமே. (2)

நிமல னேதுணை நீயெனச் சொல்லுவா
ளமல னேயென தாருயி ரேயென்பாள்
கமலை வாழ்மயி லாபுரி கத்தனே
விமல னேயிவள் வேட்கையை யாற்றவே. (3)

நிற்கு ணாதுணை நீயெனச் சொல்லுவாள்
சற்கு ணாசிவ சங்கர னேயென்பாள்
நற்கு ணந்திகழ் மைலையி னாதனே
வற்கு லாவுமிம் மங்கையைக் காக்கவே. (4)

நீத னேதுணை நீயெனச் சொல்லுவாள்
நாத னேயெந்த னாயக னேயென்பாள்
போத னேமயி லாபுரிப் புங்கவ
காதன் மேவுமிக் கன்னியைக் காக்கவே. (5)

தலைவனைக்கண்டு தலைவி தனதூடலைத் தணிக்குமாறு வேண்டல்.

வேறு விருத்தம்.

மல்லோங் கியதிண் புயமன் னவர்சூழ் மாமயிலை
நல்லோங் கிடக்ஷேத் திரங்கொண் டருளுநன் னலத்தீரே!
சொல்லோங் கியவென் றுணைவா வருவீர் சுகந்தருவீர்
வல்லோங் கியமன் மதனே வுமழல் வாடிடவே. (1)

அள்ளிக் கொடுக்குங் கருணையின் வடிவீ ரணிவாளை
துள்ளிக் குதித்தோ டியமாத் தடங்கட் சூழ்மயிலை
விள்ளும் புகழாற் றிருக்ஷேத் திரங்கொள் விதத்தாரே
தெள்ளும் மதிசெய் யழன்மா றவெனைச் சேர்வீரே. (2)

பொய்யா மொழியீர் புகழ்சேர் வலத்தீர் புனைசடையீர்
துய்யா மயிலைப்பதியீ ரெனக்குச் சுகந்தருவீர்
மையார் விழியார் பழித்தார் தாயும் வசைசொன்னா
ளையா வளஞ்சேர் மயிலா புரியி லமர்ந்தவரே. (3)

கண்மூன் றுடையீர் கருணையி னுருவீர் கலையறிவாற்
பண்ணூன் றடியார் தமக்கின் னருட்செய்ப் பரத்துவத்தீர்
விண்ணு டவர்சூழ் மயிலைப் பதியீர் விழைவுறுமிப்
பெண்ணு ளுடன்வந் துறுமா மயலைப் பிணிப்பீரே. (4)

படியா ளாரீ ளயன்மாற் சுரரும் மகிழ்ந்துண்ண
வடியாச் செழுநஞ்சை அறம்யா மயிலை வளர்தேவே
கடியா டரவத் தணிநீட் புயத்தீர் கனிவோடிவ்
வடியாட் சொலுமோர் சேயலேற் றமய லவிப்பீரே. (5)

தலைவிதலைவனது பேரழகைத் தோழியிடங்கூறி மகிழ்தல்.

வேறு விருத்தம்.

இதழ்விரிம லர்த்தெரிய லேயுகுழற் றோழி
மிதமறத போதனர்கள் மேவிதுதி செய்யுந்
ததமயிலைத் பதித்திலகர் தம்பவனி கண்டேன்
இதயமகி ழவரழகை யார்சொலவல் லாரே. (1)
அல்லலறு முன்னிதசொ லார்ந்திடுமென் றோழி
வல்லசுர ராதியர்வ ணங்கியடி யேத்தப்
புல்லுமயி லைத்திலகர் பூம்பவனி கண்டேன்
தொல்லுலகத தவரழகைச் சொல்லமுடி யாதே. (2)
கூவியகு யிற்றொனிகு யிற்றுமொழி தோழி
மேவியசிங் காதனவ மைச்சர்துதி செய்ய
வாவுமயி லைத்திலகர் வாழ்பவனி கண்டேன்
யாவுமரு ளவரழகை யார்சொலவல் லாரே. (3)
வீறுபெறு தாமரைவி ளங்குமுகத் தோழி
வாறுபெறு வார்துதிவ ழங்குமிசைப் பண்கள்
கூறுமயி லைத்திலகர் கொட்பவனி கண்டேன்
பேறுபெறு மவரழகைப் பேசவர்கொல் யாரே. (4)
ஒத்தவிணை மாமலையு யர்ந்தமுலை தோழி
சித்தமுறு மாதவச்சி ரேட்டர்நிலை கொள்ளுஞ்
சத்துமயி லைத்திலகர் தம்பவனி கண்டே
னத்தனவ ராரழகை யார்சொலவல் லாரே.

தலைவி தலைவனை யடைந்ததைக் கண்டதிசயித்து நற்றாய் செவிலியிடங்கூறல்.

கலித்துறை.

துப்பிதழ்த் தாமரை யம்முகத் தாயெழிற் சூழ் மயிலை
யொப்புர வெய்தி வளர்சா லெள்ளிடை யூர்ந்துவருஞ்
சுப்பிர தீப வணைத்தின ளென்மகட் சொல்லியவா
றப்படி யேவந் தருளநின் றாரீ ததிசயமே. (1)
செக்கச் சிவந்த விதழுடை யாயொளி சென்றெங்கெணு
மிக்குப் பரந்துயர் மாமயி லாபுரி மேலவரை
துக்கஞ் சிறந்த மயல்தீர்க்க வென்மகள் தோத்திரித்தா
ளக்கண மேவந் தருளவின் றாரீ ததிசயமே. (2)
மஞ்சிமக் கொங்கை யுடையாய்ய ஞைசை மகளிடத்துப்
பிஞ்சகன் றேவரெல் லாந்தொழ தேத்தும் பெருமையுடன்
பஞ்சிதஞ் சேர்மயி லாபுரி வாழ்கின்ற பண்ணவனு
றஞ்சா சத்தொடுத் தானந்த முற்ற ததிசயமே. (3)

இன்புற்ற பாலு நறவுங் கலந்த வெழின்மொழியாய்
துன்பற்ற மாமயி லாபுரி வாழருட் சோதியினர்
தென்பற்று வெண்மதி யின்சடை யானெந்தன் சேயிழைபா
லன்புற்று காமச் சரந்தொடுத் தாரீ ததிசயமே. (4)

கோதகற் செவ்விழி யாய்மயி லைப்பதி கோபுரத்தார்
வாதகஞ் சேரற்ப ரைக்கடி யுந்தனை வண்மையினர்
காதர மற்றிடு மென்மக ளுற்றவெங் காமமதற்
தாதர மாய்வந்து தீர்ப்பநின் றாரீ ததிசயமே. (5)

தலைவி தலைவனிடத்துத் தனக்கு நேர்ந்த வேட்கையை வெளியிடுதல்.

கண்ணிகள்

பத்தர்பணி கின்றவருட் பண்ணவரே யென்றுணைவா
சித்தர்புகழ் மாமயிலைத் தேவேம னோகரனே. (1)

இன்பளித்தென் துக்கமெலா மின்றறுத்து நின்றிடற்கோ
ரன்பளிக்கு மாமயிலை யையாம னோகரனே. (2)

காணாத காட்சியெல்லாங் காட்டுமொரு சீர்படைத்த
மாணாரு மாமயிலை மன்னாம னோகரனே. (3)

பெற்றவளு மென்னைப்பழி பேசத்து ணிந்துவிட்டா
ளுற்றதுணை நீமயிலை யூராம னோகரனே. (4)

என்னையொத்த பெண்களெலா மேசிம னம்வெறுத்தார்
பன்னார்ந்துணை நீமயிலைப் பண்பாம னோகரனே. (5)

மாரன்க ணைதொடுத்து வாட்டிவதைத் திட்டமயற்
தீரச்செய் வாய்மயிலைத் தேவேம னோகரனே. (6)

சீறுமதி வெந்தணலாற் றேகமெங்குஞ் சுட்டவடு
மாறவணைப் பாய்மயிலை வாழ்வேம னோகரனே (7)

பொல்லாவி ரகமதிற் போந்தவெனக் கன்பளிப்பாய்
நல்லாரு மாமயிலை நாதாம னோகரனே. (8)

உன்னையன்றி யோர்துணையு முற்றறியேன் வந்தருள்வாய்
தென்னைவளஞ் சூழ்மயிலைத் திருவேம னோகரனே. (9)

பேசாத மோனநெறி பேராளர் வாழ்த்துமெழி
லீசாதி ருமயிலை யிறையேம னோகரனே. (10)

முத்திபுல கோர்பணியு முதலேத யாநிதியே
பத்திமிகு மாமயிலைப் பதியேம னோகரனே. (11)

ஆதரமொன் றின்றியுனை யண்டுபவர்க் காதரவே
சோதிநிறை மாமயிலைத் துரையேம னோகரனே. (12)

கூசாம னத்தினர்கள் கூறுதுதி யேநிறைந்து
வீசுபுகழ் மாமயிலை வேந்தேம னோகரனே. (13)

சடைமேற்பி றையணிந்த சங்கரனே மெய்த்துணையே
கொடைமேவு மாமயிலைக் கோவேம னோகரனே. (14)

அண்டரெலாம் போற்றுகின்ற வரசேம ணிவிளக்கே
வண்டிசைக்கு மெழின்மயிலை வண்ணாம னோகரனே. (15)

அடியாள்பி ழைபொறுத்திங் காதரிப்ப துன்கடமை
படியோர்பு கழ்மயிலைப் பற்றேம னோகரனே. (16)

தலைவி தலைவனிடத் திங்கிதங்கூறல்.

கீர்த்தனம்.

இராகம், பிலஹரி. தாளம், உருபகம்.

பல்லவி.

மருவ வாருமே மயிலை யரசே.

அநுபல்லவி.

பெருமா தவரடி பணிந்திட வரமேதரு கருணை வடிவே.

சரணங்கள்.

1. காத லோடுமைக் கண்டவெனது மனமகிழ்கொள
பாத கன்மதன் மலர்க்கணையொரு சிறு பொடி பட
கத்தனே யமரர்கள் போற்றிடு சித்தனே பிறைமுடி சூடிய
வித்தகனே யத்து வாழ்வே. (மருவ)

2. ஊருஞ் சுற்றமும் பேரும்பல புகழ்வரினும்
யாரை யுஞ்சிந்தைத் தனிலிருத்திட மனமிசைகிலன்
உற்றோர்க் கருள்புரி யுன்திரு நற்றாள் வழிபட வந்தனன்
மற்றாதர வற்ற வென்னை. (மருவ)

3. சீத மதியைச் சடையில் முடித்து நதிசு மந்திடு
நீத னேயுனைத் தழுவநினைத்து மனமுவந்தனன்
செய்யா வெனதக மேவிய வையா வரவணி மாலைகொள்
மெய்யாகுறை யைய வென்னை. (மருவ)

4. அன்னை யொத்தநற் றோழியுடனே பலமாதர்க
ளென்னை யேபழிக் கூறினர்க ளதை யெண்ணிலன்
அல்லும் பகலும் நின்றிரு நல்லம் புயமலர்க் கேதுதி
சொல்லுஉமென தல்ல லற (மருவ)

5. விண்ணு மண்ணுமெவ் வுலகு மேத்த வரமருள்தனி
யண்ண லேநெற்றிக் கண்ணின் மணியே யுனைத்தேடிட
வேதா வுந்திரு மாலுடன் வாதா டியவொளிமாமுடி
நாதாவென்னை யாத ரிப்ப, (மருவ)

வாழ்த்து.

எண்சீர்சந்த விருத்தம்.

மறையொரு நான்கு முயர்வொடு நீட
மண்மிசை நற்றிரு நீறுவி ளங்க
மகிழ்கொடு வேத முறையெழி லாளர்
மாறறு மாருது தித்தணி மேவ
குறையொரு போது மார்தலி லாது
கூறுநெ றிப்படி யேயர சோங்க
குணமணி சிந்த மாதமு மாரி
குவய மேல்விழ கோதையர் கற்பு
நிறைதவ ருத வாழ்வுது லங்க
நீடிய நல்லற மெங்குமு லாவ
நிகழ்தரு சாதி பேதமொ டுங்க
நிலைபெறு "சிற்சபை" யென்றுமி லங்க
வுறையுறு மோன முனிவர ரேத்து
கர்தருண் மாமயி லைப்பதி யீச
ரொண்ணரு ளீய விழைத்தவி நூலுக்
குதவினர் சந்ததம் வாழ்பெற மாதோ.

சுபம்.

முடிவு[illegible]

இந்நூற்க ணழகுபெறவந்த அரு[illegible]

தலைவி தலைவனைக்காணா திறங்கல்.
தலைவிதன் குறையைத் தோழியுடன் கூறல்.
தலைவிதன் னெதிர்ப்பட்ட மயில்களை விளித்தல்.
தலைவி தலைவனிடத்து மயில்தூது விடுத்தல்.
தலைவனைக் காணாத் தலைவி குறத்தியிடங் குறியாராய்தல்.
நற்றாய் வருந்தல்.
தலைவி தலைவனைக்காண விழைதல்.
தலைவி சோதிடங்கேட்டல்,
தலைவி பாங்கியைத் தன்னோடழைத்தல்.
பாங்கிதன்னோக்கம் பைந்தொடிக்குறைத்தல்.
தோழிதன் னோக்கைத் தோகைமறுத்தல்.
தலைவி தன்னிலைமையைத் தானினைந்திரங்கல்.
தலைவன்பிரிவுக்குத் தலைவி காரணமாராய்தல்.
தலைவி மாரனைப் பழித்தல்.
தாய் தன்மகளின் றன்மைக்கிரங்கல்.
தாய் சொன்மறுத்துத் தலைவிசாற்றல்.
அலைவுறு மதியைத் தலைவி முனிதல்.
தலைவி தலைவனைக்காணச் செல்லுதல்.
தலைவன் பதியைத் தலைவிகண்டடைதல்.
தலைவி தோழியிடந் தலைவனது திறங்கூறல்.
தலைவனது திருவுலா வியப்பைத் தலைவி தோழியுடன்கூறல்.
தலைவன் திருவுலாக்கண்டதலைவி தனக்குநேர்ந்தஇச்சையைக்கூறல்.
தலைவி தலைவனிடத் தன்னங்களைத் தூதாகச்செல்ல விடுத்தல்.
தலைவி தோழியிடந் தன்காதலைச் சொல்லியிரங்கல்.
தாய் தலைவனை யிகழ்ந்துத் தலைவியைத் தேற்றல்.
தலைவி தாய்சொற் கடிந்தெதிர் மறுத்தல்.
தலைவி தனதாற்றாவிரகத்தைத் தோழியிடங்கூறல்.
தலைவி கிளிகளை விளித்துத் தலைவனிடந் தூதாக விடுத்தல்.
தலைவி தலைவன் முற்செயற் றிறங்கூறல்.
தலைவி தலைவனது திருவுலாவைக் கண்டு மீண்டுங்காணாளாய் அதி
சயித்துத் தோழியிடங்கூறல்.
தலைவிதோழியைத் தலைவனிடந்தூது செல்லவேண்டுதல்.
பாங்கி தலைவி பெற்றியுரைத்துத் தலைவனை யழைத்தல்.
தலைவனைக்கண்டு தலைவி தனதூடலைத் தணிக்குமாறு வேண்டல்.
தலைவி தலைவனது பேரழகைத் தோழியிடங்கூறி மகிழ்தல்.
தலைவி தலைவனை யடைந்ததைக்கண் டதிசயித்து நற்றாய் செவிலி
யிடங் கூறல்.
தலைவி தலைவனிடத்துத்தனக்குநேர்ந்த வேட்கையை வெளியிடுதல்.
தலைவி தலைவனிடத்திங்கிதங்கூறல்.